# பொருளடக்கம்
# CONTENTS


வ. எண் பக்க எண்

Sl. No. Page No.

I. I இந்திய தேசிய தத்துவம் (காந்தி, நேரு, தாகூர்)
(Indian National Tradition) (Gandhi/ Nehru and Tagore)

அ. 1. அரசியல் சாசனச் சட்டம்
(Constitution of India )

2. இந்திய அரசியவமைப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்
(Salient features of Indian Constitution)

3. அடிப்படை உரிதைகளும், நேர்முகக் கொள்கைகளும்
(Fundamen'al Rights and the Directive Principles of State Policy)

ஆ 1. சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவின் அரசியலின் சமுதாய பொருளாதார மாற்றங்களும் அவை காவல் துறை மீது சுமத்தியுள்ள விளைவுகளும்
(Political/ social and economic changes in India since Independence and their Implications for the Police)

2. முக்கிய சமுதாயப் பிரச்சனைகள்
(Important Social Problems)

3. தேசிய ஒருமைப்பாடு
(National Intwgration)

4. நலிவுற்ற மக்களை மேம்படுத்துதல் காவல் துறையும் நலிவுற்ற மக்களும்
(Uplift of the Weaker Sections of the Police)

5. பெண்களையும், இளங்குற்றவாளிகளேயும் நடத்தும் முறைகள்
(Treatment of Women, Children and Juveniles)

இ. 1. குடியாட்சி - இந்திய யூனியன் வேலே முறை அமைப்பு-மத்திய மாநில அமைச்சகங்கள்.

2. தேசியக் கொடி (National Flag)

3. தேசிய கீதம் (நாட்டுப்பண்) (National Anthem)

4. தேசியச் சின்னம் (இலச்சினே) (National Emblem)

5. மாநிலங்களும் அவற்றின் தலேநகரங்களும்
(States and their Capitals)
இன்றைய தேசிய பிரச்சனைகள்
(States and their Capitals)

6. காவல் துறையும் தேசிய ஒருமைப்பாடும்

ஈ 1. இன்றைய தேசிய பிரச்சனைகள் (Current Affairs )
2. அரசியல் கட்சிகளும் அதன் கொள்கைகளும் (Political and Communal Parties and their Ideologies)

உ. 1. காவல் துறையில் சிவில் காவலர்களின் பங்கு (Role and Functions of the Civil Police)
2. காவலர்கள் ஒரு காவல் நிலையத்தில் செய்யும் பணிகள் (Role of the Constables )

II. மனிதரின் குணங்கள் (Human Behaviour)

அ. 1. காவல் துறையினர் ஏன் மனிதரின் குணங்கள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்
2. தனி மனிதன் (Individual) கூட்டம் (Crowd) கலகக்கூட்டம் (Mob)
3. அமைதியான கூட்டமும், கலகக் கும்பலும்

ஆ. 1. பொது மக்களிடத்து காவல் துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் (Police Behaviour towards the Public)
2. காவலருக்கு வழிதுறைகளைப் பற்றிய தொகுப்பு
3. பொது மக்களின் உரிமைகளும், காவல் துறையினரின் பொறுப்புகளும் - 22 அம்சக் குறிக்கோள்கள்.
4. காவல் துறை – பொது மக்கள் நல்லுறவு (Police-Public Relation)
5. காவல் துறையினருக்கு மக்கள் செய்யக்கூடிய ஒத்துழைப்பு
6. காவலரின் பண்புகள்

இ. 1. மரியாதை (Courtesy)

ஈ காவலர் செய்யக் கூடியவைகள்-செய்யக் கூடாதவைகள்
1. காவலர் செய்யக் கூடியவைகள் - செய்யக் கூடாதவைகள்
2. தேகப் பயிற்சியும், ஒழுங்கு முறையும்
3. கோர்ட்டில் ஆஜராவது
4. குாவலர்கள் செய்யக்கூடாதது (பயிற்சியும், ஒழுங்கும்)
5. பொது விஷயங்கள்

உ. கீழ்க்கண்ட சூழ்நிலையில் காவலர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது.
1. தகராறு (Dispute)
2. குற்ற குணத்தார் (Bad character)
3. சாட்சிகள் (Witnesses)
4. காவலில் இருப்பவர்கள் (Persons under custody)
5. போக்குவரத்து விதிகளை மீறுபவர் (Traffic Offenders)
6. புகார் கொடுக்க வருபவர் (Complainants at the police station)
7. ரோந்து வேலையில் ஈடுபட்டிருப்போர் (The people while on beat duty)
8. இளைஞர்கள், மாணவர்கள் (Youth)
9. தொழிலாளர்கள் (Labour)
10. பெண்கள், இளங்குற்றவாளிகள் (Women and Children)
11. முடக்கப்பட்டவரும் ஆதரவற்றோரும் (Infirm and Children)
12. அரசியல் வாதிகள் (Politicians)

ஊ. பொது மக்களின் உதவியைப் பெறுவதில் காவல் துறையினருக்குள்ள இன்னல்களும் சிரமங்களும்.

எ. செயல் முறை

# MODERN INDIA AND THE ROLE OF POLICE

## INDIAN NATIONAL TRADITION

### காந்தி அடிகள்

காந்தியடிகள் குஜராத் மாநிலம் போர்பந்தரில் 2-10-1869-ல் பிறந்தார். இங்கிலாந்து நாட்டில் சட்டம் பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். தென்னுப்பிரிக்காவில் இந்தியர்கள் கொடுமைக்கு ஆளானது கண்டு மனம் உருகினுர். நிறவெறி அட்டூழியங்களை எதிர்த்து அகிம்சைப் போர் நிகழ்த்தினுர். பின்னர் 1914-ம் ஆண்டு முதல் உலகப் போர் சமயத்தில், கோகலேயின் அறிவுரைப்படி இந்தியா திரும்பினுர். அப்போதிருந்து 1948-ல் கொல்லப்பட்டது வரை இந்திய வரலாற்றில் தலையாய நாயகனுக விளங்கினுர்.

கல்வி பொருளாதாரம், அரசியல் இவை பற்றிய காந்திஜியின் கருத்துக்கள் அடிப்படையானவையாகவும், புரட்சிகரமாகவும் இருந்தன. வேத தந்துவங்கள் இந்திய வாழக்கையில் பிரிக்க முடியாத அம்சங்கள் என அவர் கருதினுர். எதிலும் நேர்மையும், தூய்மையும் வேண்டுமென விழைந்தார். நாட்டின் சுதந்திரம் பெற்ற பிறகே பிற நாட்டுக் கூட்டுறவு பற்றிச் சிந்திக்க வேண்டுமென்றுர். அஹிம்சை, உண்மை கிராமங்களின் மேம்பாடு ஆகியவை அவரது உயிரனைய கொள்கைகள், உண்மையை வலியுறுத்தி அறப்போர் வழியைப் போதித்தார். இது எளிதானதல்ல, வெள்ளையரை எதிர்த்து அவர் நடத்திய ஒத்துழையாமை இயக்கம் வரி கொடா இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், உப்புச் சத்தியாக்கிரக இயக்கம், ஆகியவை வரலாற்றுப் பிரசித்தமானவை. இந்தியாவில் 'இராம இராஜ்யம்' ஏற்படுத்த வேண்டுமென்பது அவர் கண்ட கனவு. இந்தியா பாகிஸ்தான் 1947 —ல் பிரிந்தபோது ஏற்பட்ட இனக் கலவரத்தின்போது, இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார்.

**ஒத்துழையாமை இயக்கம் :**

1920 — ஆம் ஆண்டில் காந்தியடிகள் காங்கிரஸ் இயக்கத்தில் தலைமைப் பொறுப்பேற்று வழி நடத்த வந்தபோது காங்கிரஸ் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. 1920-ஆம் ஆண்டில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் இந்தியாவின் சுதந்திரம் முக்கிய குறிக்கோளாக பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் கத்தியின்றி, ரத்தமின்றி ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் அந்த குறிக்கோளை அடைய முடிவு செய்யப்பட்டது. அதாவது இந்தியர்கள் ஆங்கில அரசுக்கு எல்லா விதத்திலும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்காமல் போராடுவதாகும். ஓராண்டு காலத்திற்குள் சுதந்திரம் பெற வேண்டுமென்று காந்தி ஒரு குறிக்கோள் வைத்தார். காந்தியின் குரலுக்கு மதிப்பளித்து 1920-ஆம் ஆண்டு நடந்த புது அரசியலமைப்பிற்கான தேர்தலை அனைவரும் புறக்கணித்தனர். பல வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலை விட்டனர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் வெளியேறினர். அநேக இடங்களில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான துணிகள் எரிக்கப்பட்டன. இதனுல் ஆத்திரமடைந்த ஆங்கில அரசாங்கம் இந்தியர்கள் மீது வன்முறை தாக்குதல் நடத்தியது. அதோடு மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான மக்களையும், அரசியல் தலைவர்களையும் சிறையிலடைத்தது. இதனை எதிர்த்து சில இடங்களில் மக்கள் வன்முறையில் இறங்கினர். இதன் தொடர்பாக 1922-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஒரு காவல் நிலையத்தில்

வன்முறையாளர்கள் நுழைந்து அங்கிருந்த 22 காவலர்களையும் ஒரு ஆய்வாளர் உள்ளிட்டு உயிருடன் தீயிட்டு எரித்தனர்.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட காந்தியடிகள் வன்முறையற்ற வழியில் போராட நாம் இன்னும் தகுதி பெறவில்லை என்று வருந்தினர். எனவே தன்னுடைய இயக்கத்தின் நடிவடிக்கைகள் அனைத்தையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். அதன் பிறகு ஆங்கில அரசு காந்திஜியின் மீது தேசச்துரோக குற்றம் சாட்டி அவரை ஆறு ஆண்டு சிறையில் அடைக்க உத்தரவிட்டது.

**சுயராஜ்ய கட்சி:**

ஒத்துழையாமை இயக்கத்தின் நடவடிக்கைகளைக் காந்தி நிறுத்தி வைத்ததை பல காங்கிரஸ் தலைவர்கள் விரும்பவில்லை. எனவே 1922- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மோதிலால் நேரு, சி,ஆர்,தாஸ் ஆகியோர்கள் சுயராஜ்ய கட்சி என்ற புது இயக்கத்தை தோற்றுவித்தார்கள். அவர்கள் அரசு இயந்திரத்தை உடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசாங்கத்தில் நுழைய முடிவெடுத்தனர். அதன்படியே அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்றத்தில் நுழைந்தனர். கவர்னருக்கு கட்டுப்பாட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்ததால் அவர்களால் அதிகம் ஒன்றும் செய்ய இயலவில்லை.

**சைமன் கமிஷன் :**

1919-ஆம் ஆண்டு சட்டத்தின் செயல்பாடுகளையும், நிறை, குறைகளையும் கண்டறிய பிரிட்டன் பாராளுமன்றம் 1927-ஆம் ஆண்டு திரு, ஜான் சைமன் என்பவர் தலைமையின் ஏழு நபர்கள் அடங்கிய குழு ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பியது. அந்த குழுவில் இந்தியப் பிரதிநிதிகள் யாரும் இடம் பெறாத காரணத்தினல் காங்கிரஸ் இயக்கமும், முஸ்லீம் லீக்கும் அந்தக் குழுவை புறக்கணித்தனர். இந்த குழுவின் வருகையை எதிர்த்து நேருவின் தலைமையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றை ஆங்கில அரசு குதிரைப் படையை வைத்து கலைக்க முயற்சி செய்தார்கள். ஆனல் அவர்கள் காந்தியின் அஹிம்சை வழியை பின்பற்றி அந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்தனர். இதனல் சைமன் கமிஷன் திரும்பி போய்விட்டது.

**சட்ட மறுப்பு மற்றும் உப்பு சத்தியாகிரகம் :**

நாட்டின் முழு சுதந்திரத்திற்கான தீர்மானம் ஒன்றை 1922-ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாடு நிறைவேற்றியது. அந்த தீர்மானத்தின்படி ஓராண்டுக்குள் சுதந்திரம் கிடைக்கவில்லை என்றல் சட்ட மறுப்பு இயகத்தில் ஈடுபடுவற்கான முடிவும் எடுக்கப்பட்டது.

உப்பு சட்டத்தை மீறுவதற்கான சட்ட மறப்பு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கி வைத்தார். உப்பு சட்டத்தை மீறும் வகையில் அகமதாபாத்திலிருந்து தண்டி வரையான கடற்கரையோர கால்நடை பயணத்தை காந்தியடிகள் நடத்திக் காட்டினர். இந்த இயக்கம் தீயெனப் பரவி ஆயிரக்கணக்கான தலைவர்களையும் தொண்டர்களையும் சிறைக்கு அனுப்பியது.

**வட்ட மேஜை மாநாடு:**

சைமன் கமிஷன் அறிக்கையை விவாதிப்பதற்காக செயலாளர் ராம்சேமேக் டொனல்டு என்பவர் வட்ட மேஜை மாநாடு ஒன்றைக் கூட்டினார். இந்த மாநாடு 1930-ஆம் ஆண்டு

நவம்பர் மாதம் லண்டன் மாநகரில் கூடியது. இதில் காங்கிரஸ் இயக்கம் கலந்துகொள்ளவில்லை. ஆனால் பல கட்சிகளும், இளவரசர்களும் கலந்து கொண்டனர். இருப்பினும் அந்த மாநாடு தள்ளி வைக்கப்பட்டது. அந்த சமயத்தில் வைஸ்ராயாக இருந்த இர்வின் பிரபு காந்தியடிகளை அழைத்து பேசினர். அதன் விளைவாக புகழ்பெற்ற காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி ஆங்கில அரசாங்கம் கைது செய்து காவலில் வைத்திருப்பவர்களை விடுதலை செய்தது. எனவே காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்படி 1931-ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தை கைவிட்டு, லாகூரில் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டார். ஆனல் சிறுபான்மையோருக்கான பிரதிநிதித்துவத்தின் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக முஸ்லீம் தலைவர்களுடன் காந்தியடிகள் ஒரு உடன்பாடு கொள்ள இயலவில்லை. எனவே இந்த தோல்வியுடன் காந்தியடிகள் வீடு திரும்பினர். அவர் திரும்பவும் வழியிலேயே கைது செய்யப்பட்டார். மேலும் காங்கிரஸ் இயக்கத்தின் நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டது. 1932-ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது வட்ட மேஜை மாநாட்டில் காங்கிரஸ் கட்சி கலந்துகொள்ளவில்லை. அதனுடைய முடிவுகள் யாவும் வெள்ளை காகிதங்களில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. அதுவே 1935-ஆம் ஆண்டு சட்டத்திற்கான அடிப்படையாக அமைந்தது.

## பூன ஒப்பந்தம்:

நலிந்த பிரிவினருக்கு தேர்தலில் தனியிடம் ஒதுக்குவதை ஒரு மதப்பரிசாக 1931-ஆம் ஆண்டு ராம்சேமேக் டொனல்டு என்பவர் அறிவித்தார். காந்தியடிகள் சிறையினுள்ளே சாகும்வரை உண்ணவிரதம் மேற்கொண்டார். அதன் பயனக பூன ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக நலிந்த பிரிவினருக்கான இடம் இருமடங்காக்கப்பட்டு ஒருங்கிணைந்த பொது வேட்பாளர்கள் மூலம் அந்த இடங்கள் நிரப்பப்பட்டன.

## 1935- ஆம் ஆண்டுச் சட்டம்

இச்சட்டத்தின்படி மாகாணங்களுக்கு சுயாட்சிக்கு வகை செய்யப்பட்டது. இச்சமயத்தில் ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவை பொறுப்பேற்றது. பஞ்சாப் மற்றும் வங்காளத்தில் முஸ்லீம் லீக் கட்சி பொறுப்பேற்றது. 1939- ஆம் ஆண்டில் தொடங்கிய இரண்டாவது உலக போரில் இந்தியாவின் சார்பாக லின்லித்தோ பிரபு ஜெர்மனியை போர் பிரகடனம் செய்தார். இதை எதிர்த்து காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி விலக முன் வந்தனர். அப்போது லின்லித்தோ பிரபு 1940- ஆம் ஆண்டு ‘‘ஆகஸ்டு சலுகை’’ என்ற ஒன்றை அறிவித்தார். அதன்படி சிறுபான்மையினரின் அனுமதியின்றி அதிகார மாற்றங்கள் ஏதும் செய்யப்பட மாட்டாது என்று உறுதியளிக்கப்பட்டது.

கிரிப்பஸ் தூதும், வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கமும் இரண்டாம் உலகப்போரில் குறிப்பாக கிழக்குப் பகுதிகளில் பிரிட்டிஷ்க்கு பெரும் தோல்விகள் ஏற்படவே 1942-ஆம் ஆண்டு ஆங்கில அரசாங்கம் சர்போர்டுகிரிப்ஸ் என்பவரை இந்தியாவுக்கு அனுப்பி காங்கிரசின் ஒத்துழைப்பைப் பெற முயற்சி செய்தது. அவர் உலகப்போருக்குப் பிறகு இந்தியாவிற்கு சுய ஆட்சி வழங்கப்படும் என அறிவித்தார். ஆனல் இந்த கோரிக்கையை காங்கிரஸ் மறுத்து விட்டு ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற இயக்கத்தை ஆரம்பித்தது. இது நாடு தழுவிய போராட்டமாக எழுந்தது. இந்தப் போராட்டங்களை ஆங்கில அரசாங்கம் இரும்பு கரம் கொண்டு ஒடுக்கியது.

**பாராளுமன்ற தூதுக்குழு:**

1945-ஆம் ஆண்டு தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தது. மேற்படி கட்சி இந்தியாவிற்கு மூன்று நபர் அடங்கிய ஒரு தூதுக் குழுவை அனுப்பி இந்தியாவிற்கு முழுச் சுதந்திரம் அளிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு பணித்தது. இந்தக் குழு மாநிலங்களுக்கு சுயாட்சி அளிக்கவும் மதத்தின் அடிப்படையில் ஒரு இடைக்கால அரசாங்கம் அமைக்கவும் ஒரு திட்டம் வகுத்தது, இதற்காக பல்வேறு அரசியல் கட்சிகளுடன் இந்தக் குழு தொடர்ந்து விவாதம் நடத்தியது. ஆனல் துரதிஷ்டவசமாக காங்கிரசுக்கும், முஸ்லீம் லீக்குக்கும் இடையில் இருந்த கருத்து வேற்றுமைகள் சரிசெய்யப்பட இயலாமல் போயிற்று. 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜவஹர்லால் நேரு ஒரு இடைக்கால அரசாங்கத்தை அமைத்தார். அதன் பிறகு முஸ்லீம் லீக்கும் அமைச்சரவையில் பங்கேற்றது.

**இந்தியாவின் சுதந்திரம் :**

1947-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இங்கிலாந்தின் பிரமத மந்திரி 1948-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்படும் என அறிவித்தார். இதன் பிறகு மார்ச் 24-ந்தேதி 1947-ஆம் ஆண்டு மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார். அவர் இந்தியாவை இரண்டாக பிரிக்க முடிவு செய்து பரிந்துரை செய்தார். பிரிவினை ஒன்றே பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழி வகுப்பதால் காந்தியடிகளும் ஒப்புக் கொண்டார். அதன்படி 1947-ஆம் ஆண்டு மேற்படி பிரிவினையும், சுதந்திரமும் சேர்ந்து அமுலுக்கு வந்தது. பிரிட்டிஷ் அரசாங்கமும் நிர்வாக சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்புகளையும் இந்தியாவிடமே ஒப்படைத்தது. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாள் இந்தியா பூரண சுதந்திரம் பெற்றது. மவுண்ட்பேட்டன் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

## பண்டித ஜவஹர்லால் நேரு

**நேருவின் இளமைக்காலம்:**

நவீன இந்தியாவின் சிற்பி என அழைக்கப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு 1889 – ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 – ஆம் நாள் அலகாபாத்தில் பிறந்தார். நேரு மிகப்பெரிய செல்வந்தரின் குடும்பத்தில் பிறந்ததால் அவரின் இளமைக்காலம் ஆனந்த பவனத்தில் செல்வந்தர்களுக்கே உரிய அத்தனை வசதிகளுடனும் இருந்தது. ஐரோப்பியர்களின் நாகரீகம் அவரை வெகுவாக கவர்ந்தது. காரணம் அவருக்கு பாடம் கற்பித்த ஆசிரியர்களில் பலர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

**மாணவப் பருவம் :**

வாலிபர் நேரு இளமைக் காலங்களை கிரிக்கெட் விளையாடுவதிலும், நீந்துவதிலும், குதிரை சவாரி செய்வதிலும் கழித்தார், இருப்பினும் இந்திய இதிகாசங்களை மிகவும் மரியாதையுடன் படித்தார். மாணவப் பருவத்தில் தனிமையில் நேரு நிறையப் படித்தார்.

இங்கிலாந்தில் இருந்தபோது அந்நாட்டு அரசியலிலும், விண்வெளி முன்னேற்றங்களிலும் நேரு ஆர்வம் காட்டினார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயிலும் வேளையில் நேரு சோஷலிச சித்தாந்தத்தின்பால் நாட்டம் கொண்டார். ஆனால் மக்கள் அமைதியை பெரிதும் விரும்பும் தலைவராக அமைந்திருந்தார். எதையும் அறிந்து கொள்வதில் நேரு மிகவும் ஆர்வம் காட்டினார். சமகாலத்தில் உள்ளவர்கள்பால் அவர் நாட்டம் கொள்ளாமல் பள்ளி வாழ்க்கையிலேயே ஒரு வித்தியாசமான மாணவராகத் திகழ்ந்தார். தான் இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது ஒரு ஆங்கிலேயனாக இருக்க விரும்பியதாக நேரு பிற்காலத்தில் தெரிவித்தார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வழங்கும் புகழ்மிக்க பட்டமான இயற்கை விஞ்ஞானப் பட்டத்தை நேரு பெற்றார். அதன் பிறகு தன் தந்தையார் விருப்பத்திற்கேற்ப லண்டன் மாநகரம் சென்று சட்டம் பயின்றார். பொழுதுபோக்கு மன்றங்கள், திரையரங்குகள் ஆகியவற்றிற்கு அடிக்கடி விஜயம் செய்தார். மிகச் சிறந்த வகையில் பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியா திரும்பினார்.

**அரசியல் வாழ்க்கை:**

1913- ஆம் ஆண்டில் மாகாண ஐக்கிய காங்கிரசில் சேர்ந்தார். போர்க்காலத்தில் திருமதி அன்னிபெசன்ட் அம்மையாரின் நடவடிக்கைகள் நேருவை மிகவும் கவர்ந்தன. அப்போது அன்னிபெசன்ட அம்மையார் ஜீவகாருண்ய இயக்கத்தின் தலைவராக இருந்தார். இவர் திலகர், காந்தி ஆகியோரது செயல்பாடுகளில் நாட்டம் கொண்டார். முதலில் பகுதி நேர அரசியல்வாதியாக இருந்த நேரு, காந்தியின் தலையீட்டால் முழு நேர அரசியல்வாதியானார். இவர் சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டு பலமுறை சிறைச்சென்று இன்னல் அனுபவித்து உள்ளார். முதன்முதலில் 1921-ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாடு இவரை இயக்கத்தின் தலைமை பொறுப்பேற்க செய்தது. அதன் பின்பு 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியாவில் நிறுவப்பெற்ற இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றார்.

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், மக்களின் சமத்துவ நிலைக்காகவும் வேண்டி அரிய திட்டங்களை தீட்டியும், பெரிய தொழிற்சாலைகள் தொடங்கியும் ஆவன செய்தார். உலக சமாதானத்திற்கு நேரு ஆற்றியது பெரும் பங்காகும். இந்தியாவின் பங்கு உலக அரங்கில் முன்னேறும் வகையில் வெளிநாட்டு கொள்கைக்கு முக்கியத்துவம் அளித்தார்.

பண்டித ஜவஹர்லால் நேரு உலகறிந்த அரசியல் மேதை, தொலை நோக்கும், தீர்க்க தரிசனமும் மிக்கவர். சிறந்த பேச்சாளர் மதச்சார்பற்ற தன்மையும், அமைதியும் போதிக்க வந்த தூதன். அது மட்டுமல்லாமல் அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் ஆவார். அதற்கு சான்றாக ஆங்கில இலக்கியத்தில் நேரு எழுதிய “இந்தியாவை கண்டுபிடித்தேன்” என்ற நூலும் உலக வரலாற்றில் மறுமலர்ச்சி என்ற நூலும் மிகப் பெரிய பொக்கிஷங்களாக திகழ்ந்தன. அது மட்டுமல்லாமல் “உலக சரித்திரத்தின் தோற்றங்கள்” (Glimpses of World History) என்ற நூலும் இவர் எழுதியது. நேரு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து 1964-ஆம் ஆண்டு மே 27-ந் தேதி நேரு மறையும் வரை அவரே

இந்தியாவின் பிரதமராக திகழ்ந்தார். வளமான குடும்பத்தில் பிறந்து மேலை நாட்டில் பயின்று நாட்டுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தவர் நேரு.

# இரவீந்திரநாத் தாகூர்

இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற இரவீந்திரநாத் தாகூர் ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல மிகச் சிறந்த தேசியவாதியும் ஆவார். **"என் சரிதம்"** என்ற அவரது நூலில் தான் செயல்வாக்குடன் முற்காலத்தில் இருந்த நிலை பற்றியும் தான் எவ்வாறு ஆன்மீகத்தை நோக்கி நாட்டம் கொண்டு எழுந்து வரப்பட்டார் என்பதையும் விளக்குகிறர்.

தாகூர் 1861- ஆம் ஆண்டு பிறந்தார். அந்த நேரத்தில் மூன்று பெரும் இயக்கங்கள் தோன்றி வளர்ந்திருந்தன. அதில் இந்து மதத்தைப் பற்றிய இயக்கமும் ஒன்றுகும். இது புரட்சி இயக்கமாகும். இது பழமையான பழக்க வழக்கங்களுக்கு எதிரான இயக்கமாகும். தாகூரின் தந்தையார் இந்த இயக்கத்தில் ஒரு பெருந் தலைவராக திகழந்தார். இரண்டாவது இயக்கம் பக்கிம் சந்திரசட்டர்ஜி என்பவரால் துவக்கப்பட்டதாகும். சட்டர்ஜியும் தாகூர் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். அவர் இயக்கிய புரட்சிக்கு மிகவும் கவரப்பட்டார். சுயவெளிப் பாட்டின் சுதந்திரத்தை ஆன்மீக சிந்தனையில் மட்டுமின்றி இலக்கியப் படைப்பிலும் இருப்பதாக இந்த இயக்கம் அமைந்திருந்தது. மூன்றுவதாக தோன்றியது தேசிய இயக்கமாகும். இது முழுவதும் செயல் வடிவமாகவே அமைந்திருந்தது. இந்த இயக்கம் மக்கள் மனதில் சுயசிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது.

தேசிய இயக்கம் என்பது ஒரு புரட்சி மாற்றத்தை தோற்றுவிப்பதோடல்லாமல் புரட்சிகரமான ஒன்றுகவும் இருந்தது. இந்த இயக்கம் அந்நியப் பொருட்கள் பெற்று பயன்படுத்துவதை வெறுத்து ஒதுக்கி தன்னிறைவுக்கு வழி காட்டியாக அமைந்திருந்தது. இந்த மூன்று இயக்கங்களிலும் தாகூரின் குடும்பம் பொறுப்பேற்று இருந்தது. பிற இனத்தவரின் சுதந்திரங்களை அனுபவிக்க விட்டதோடு சுயசிந்தனையோடும் மனேசித்தத்துடனும் அவர்கள் புதியதோர் உலகத்தை நிர்மானித்தார்கள்.

இந்த சூழ்நிலையில் இந்தியாவின் இளைஞர்கள் பிரிட்டிஸ்காரர்களின் வழிமுறைகளில் நாட்டம் கொள்ள ஆரம்பித்தனர். இந்த நேரத்தில் தாகூர் தன்னுடைய வாழ்க்கையை ஒரு கவிஞராக தொடங்கினர். அந்த நேரத்தில் பெரும்பாலான கவிஞர்கள் ஆங்கில இலக்கியத்தின் கருவையே எடுத்து தங்களுடைய கவிதைகளாக வடித்து வந்தனர். ஆனல் தாகூர் தன்னுடைய கவிதைகளை தாய் மொழியான வங்காளத்திலேயே எழுதி வந்தார். மொழியைப் பயன்படுத்துவதில் தான் சொந்த வழியையே கடைபிடித்து வந்தார். தன்னுடைய இளமை வாழ்வில் மேலை நாட்டு மோகங்கொண்ட இளைஞர்களின் பிடியிலிருந்து முழுவதுமாக விடுபட முடியாவிட்டாலும் இலக்கியப் படைப்புகளைப் பொறுத்த வரையிலும் ஆங்கில இலக்கியங்களின் சாயலை முழுவதுமாகத் தவிர்த்தார்.

தான் நினைத்த வண்ணம் கருத்துக்களை வெளிப்படுத்தினர். அவருடைய சுயசிந்தனையின் பாணி அவருடைய பாணியைப் பலர் எதிர்த்ததையும் அவர் இகழ்ந்ததையும் நன்கு அறிவார். இருப்பினும் தன் இளமை வயதில் தொடங்கிய இலக்கியப் பணியை தொடர்ந்தார். நாளடைவில் அவருடைய திறமை வெளிச்சத்திற்கு வரலாயிற்று. இருப்பினும்

புகழ்ச்சியையும் இகழ்ச்சியையம் ஒன்ருகவே ஏற்றுக் கொண்டார். அவருடைய புலமைக் காலத்தில் வங்காளத்தின் பழைய வைணவப் பாடல்களில் நாட்டம் பெற்றிருந்தார். அந்த இலக்கியத்தின் இசை நயமும் பொருள் செரிவும் இளமைக் காலங்களில் தாகூரை வெகுவாகக் கவர்ந்தது.

தாகூர் தன்னுடைய இளமைக்கால கனவைப் பற்றி குறிப்பிடும்போது தன்னுடைய இலக்கியப் படைப்புக்குப் பொருள் தேட தான் நாடோடியாக அலைந்ததாக கூறுகிறுர். அவர் அழகையும் இயற்கையையும் மிகவும் விரும்பினுர் வானத்து மேகங்களுடன் பிற சோலைகளுடனும் மிகச்சிறந்த நட்புணர்ச்சி கொண்டிருந்தார். தன்னுடைய கவிதையில் ஒழுங்கு கட்டுப்பாடும் மிளிர்வதை விரும்பினுர். இன்னும் இந்த நாட்டின் புகழ் பெற்ற கவிஞராகத் திகழ்கிறுர். ‘‘கோரா’’, ‘‘அழிவு’’, ‘‘அஞ்சல் நிலையம’’, ‘‘சாத்ன’’ ‘‘வீடும் உலகமும்’’ முதலியவை இவரது மிகச் சிறந்த படைப்புகள்.

**தாகூர் வாழ்ந்திருந்த நாட்களில் நான்கு முக்கிய நிகழ்ச்சிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டார். அவை:-**

1. வங்காளத்தைத் துண்டாடியது. இது இன்றுவரை ஒரு தீராத சிக்கலாகவே உள்ளது.

2. ஜாலியன் வாலாபாக் படுகொலை

3. இரண்டாவது உலகப் போர்,

4. சுதந்திரப் போராட்டம்

# அ. அரசியல் சாசனச் சட்டம்

# (Constitution of India)

## 1. இந்திய அரசியல் சாசானச் சட்டத்தின் வரலாறு – சுருக்கம்

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தினை தெரிந்து கொள்வதற்குமுன் எந்த சரித்திரப் பின்னணியில் இது உருவாக்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆங்கில ஆட்சியாளர்கள், மொகலாயர்கள் செய்து வந்த எதேச்சதிகார முறையையே பின்பற்றி அரசாட்சி செலுத்தினுர்கள். அதையே கிழக்கிந்தியக் கம்பெனியாரும் பின்பற்றினுர்கள். இந்திய ஜனநாயக விடுதலை இயக்கம் உச்ச நிலையை அடைந்தபோது இந்திய சுதந்திரச் சட்டம் 1947-ஆம் ஆண்டில் நிறைவேற வழிவகுத்தது. மேற்படி சட்டம் 1947-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18-ந்தேதி அரசின் சம்மதம் பெற்றது. 1947- ஆம் ஆண்டு ஆகஸ்டு, 1-ஆம் தேதி முதல் இந்திய சுதந்திர நாட்டில் மேற்படி சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

மந்திரி சபை தூதுக் குழுவின் திட்டத்தின் கீழ் (Constituent Assembly) அரசியல் நிர்ணய சபை 1946-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மேற்படி சபை அரசியல் சாசனச் சட்டத்தை உருவாக்குவதற்கு உதவியாக அதன் நோக்கங்களையும், கொள்கைகளையும்

ஒரு தீர்மான வடிவமாக திரு. ஜவஹர்லால் நேரு கொண்டு வந்தார். அதன் அடிப்படையில் அரசியல் நிர்ணயசபை பல்வேறு குழுக்களை அமைத்து அரசியல் சாசனச் சட்டத்தின் உள்ள பல்வேறு பிரச்சனைகளை ஆராய நியமித்தது. அரசியல் நிர்ணய சபை மேற்படி குழுக்களின் அறிக்கைகளைப் பெற்று பரிசீலனை செய்து அவைகளை அரசியல் சாசனச் சட்டமாக ஆக்க ஒரு திட்டக்குழுவை 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 29-ஆம் தேதி அரசியல் நிர்ணய சபை அமைத்தது. திட்டக் குழு கொடுத்த அறிக்கைகளை அரசியல் நிர்ணய சபை 1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் தேதி ஆராய்ந்து முடிவு செய்தது. இவ்வாறாக மேற்படி அரசியல் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்டு 1950 —ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி முதல் அமுலுக்கு வந்தது.

இந்திய அரசியல் சாசனச் சட்டம் 395 பொருட்களையும் 9 அட்டவணை பட்டியல்களையும் கொண்டது. மேற்படி 395 பொருட்கள் 22 பாகங்களாக பிரிக்கப்பட்டு அதில் மூன்று பாகம் அடிப்படை உரிமைகளைப் பற்றியும், 4-ஆம் பாகம் நேர்முக உத்தரவுக்கான கொள்கைகளையும் கொண்டது.

உலகில் உள்ள அரசியல் சாசனத் சட்டங்களில் இவ்வளவு பரந்தவிசாலமான அரசியல் சாசனச் சட்டத்தை வேறெங்கும் காண முடியாது ஏனென்றல் அப்போதிருந்த 30 கோடி இந்திய மக்களின் பல்வேறு பிரச்சனைகளை மனதில் கொண்டு அவைகளுக்குத் தீர்வு காணவும், நாடும் மக்களும் முன்னேறும் வகையில் இந்திய அரசியல் சாசனச் சட்டத்தை மிகவும் திறமையாக உருவாக்கியுள்ளார்கள்.

இந்திய அரசியல் சாசனம், இந்தியாவை ஒரு உயர்ந்த ஜனநாயக குடியரசாக அறிவிக்கிறது. அது நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய ஜனநாயகத்தின் முக்கிய குணதிசயங்களுக்கு உறுதியளிக்கிறது.

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின் பிரதியை, பிரதியின் பாகத்தை வேணுமென்று எரித்தல், அவமானப்படுத்துதல், அசுசிப்படுத்துதல் குற்றமாகும். (பிரிவு - 5 தேசிய மரியாதை அவமதிப்புச் சட்டம்).

## 2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்கள் (Salient features of Indian Constitution)

1. சமுதாய, பொருளாதார, அரசியல் முறையில் நீதி (Justice)
2. எண்ண, வெளிப்படுத்த, நம்ப, பக்தி செலுத்த, வணங்க உரிமை (Liberty)
3. நிலை, வாய்ப்பு இவற்றில் சமத்துவம் (Equality) மற்றும் அவை எல்லோருக்கும் கிடைக்கச் செய்தல்.
4. தனி நபரின் கௌரவம், நாட்டின் ஒற்றுமை இவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவம் (Fraternity)
5. அமைதிக்காலத்தில் மாநிலங்களுக்கு அதிக சலுகைகள் கொடுத்தும், அவசர காலத்தில் பலம் வாய்ந்ததுமாய் இயங்கும் மத்திய அரசு.
6. வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் இயங்கும் பாராளுமன்ற ஆட்சி முறை.
7. மத்தியிலும், மாநிலங்களிலும் இரு சபை அமைப்பு (Bi-cameral Legislature)
8. அடிப்படை உரிமைகள்

9. மாநிலங்களுக்கு வழிகாட்டும் கொள்கை
10. தீண்டாமை ஒழிப்பு
11. சுதந்திரமான நீதிமன்றங்கள்

12. இந்தி அரசியல் மொழி - ஆங்கிலம் இணைப்பு மொழி
13. யூனியன் பொது வேலை வாய்ப்பு நிறுவனம் (UPSC)
14. அரசியலமைப்புச் சட்ட விதிகளைத் திருத்தும் உரிமை
15. அரசு ஊழியர்களுக்குத் தொழில் முறைப் பாதுகாப்பு
16. நலிந்தவர்களுக்குப் பாதுகாப்பு
17. பொது நிர்வாகத்தை யூனியன் அதிகாரங்கள் மாநிலங்களின் அதிகாரங்கள் என்ற வகையில் நிர்வகித்தல்
18. இந்தியக் குடியுரிமை

3. **அடிப்படை உரிமைகளும் நேர்முகக் கொள்கைகளும் - அடிப்படை உரிமைகள் (Fundamental rights and the directive principles of State policy) :**

பிரிவு (13) சட்டம் என்பது அமுலில் இருக்கும் சட்டங்களைத் தவிர அவ்வப்போது அரசாங்கத்தால் சட்டசபை, பார்லிமெண்ட ஆகியவைகளாலும் அறிவிக்கப்படும் அல்லது வெளியிடப்படும் கட்டளைகள், அறிவிப்புகள், விதிகள், கட்டுப்பாடுகள் சிறு விதிகள் போன்றவைகளாகும்.. இந்தச் சட்ட விதிமுறைகள் இந்திய அரசியல் சாசனச் சட்டப்படி இந்தியா முழுமைக்கும் அமுலாகும். தனி நபரின் அடிப்படை உரிமையை இந்த சாசனம் உறுதி செய்கிறது. அவைகளில் சிலவற்றை இந்திய பிரஜைகளும் மற்றவைகளை இந்தியர் அல்லாத பிரஜைகளும் சமத்துவமாக உரிமை கொண்டாடலாம்.

## பிரிவு (14) முதல் (18) சமத்துவ உரிமை (Right of equality)

(14) எல்லா குடிமக்களும் சட்டத்தின் முன் சமமே.

(15) சட்டம் அரசாங்கத்தின் கண் முன்னுல் மதம், சமயம், ஜாதி, பால், பிறந்த இடம் இவைகளினுல் எந்த குடிமகனுக்கும் பாகுபாடு கிடையாது ஒரு குடிமகனுக்கு சகல பிரஜா உரிமைகளும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் உண்டு.

(16) அதே மாதிரியாக சம அந்தஸ்தும் சம வாய்ப்பும் எல்லாப் பிரஜைகளுக்கும் அலுவல்களில் வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கும், வேலை செய்வதற்கு உறுதி அளிக்கப்படுகிறது.

(17) இந்திய சாசனச் சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டதுடன் அது எந்த முறையில் கையாளப்பட்டாலும் தடுக்கப்படுகிறது.

(18) அரசு அலுவலில் இருக்கும் எவரும் அரசாங்கம் ஜனுதிபதி உத்தரவு இன்றி பட்டங்களையோ, பதவிகளையோ அந்நிய நாட்டிடமிருந்து பெறக்கூடாது.

## பிரிவு(19) முதல் (22) சுதந்திர உரிமை (Rights of freedom) :

(19) ஒரு குடிமகனுக்கு சுதந்திரமான பேச்சுக்கள் பேசவும், கருத்துக்களைத் தெரிவிக்கவும், கூட்டங்கள், சங்கங்கள் சபைகள் உருவாக்கவும் தேசம் முழுவதும் தங்கவும், நிரந்தரமாக குடியேறுவதற்கும் சுற்றி வருவதற்கும், சொத்துக்களை வாங்குவதற்கும் விற்பதற்கும், சேர்ப்பதற்கும் எந்தவிதமான வேலையை பயிலுவதற்கும் வாணிபம், வியாபாரம் நடத்துவதற்கும் சகல உரிமைகளும் உண்டு.

(20) (1) சட்டத்தை மீறிய குற்றத்திற்காக மட்டுமே அப்போது அமுலில் இருக்கும் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும்.

(2) ஒரு மனிதன் ஒரே குற்றத்திற்காக ஒரு முறைதான் தண்டிக்கப்பட வேண்டும். (இருமுறைகள் வழக்கைத் தொடரவோ தண்டிக்கப்படவோ கூடாது.)

(3) ஒருவன் செய்த குற்றத்திற்காக அவனையே அவன் செய்த குற்றத்திற்கு எதிராக சாட்சியாக்கக் கட்டாயப்படுத்தக் கூடாது.

(21) சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளைத் தவிர ஒவ்வொருவனுக்கும் தன் உயிரையும், வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு.

(22) (1) காரண காரியங்களைத் தெரிவிக்காமல் எவரையும் கைது செய்து காவலில் வைக்கக் கூடாது. கைதான நபர் தன்னை பாதுகாத்துக்கொள்ள சட்ட நிபுணரையோ அல்லது மற்றவர்களையோ கலந்து ஆலோசிக்க வேண்டும்போது மறுக்கக் கூடாது.

(2) கைதான நபரை அருகிலுள்ள நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னால் ஆஜர்படுத்த வேண்டிய பிரயாண நேரம் போக காவல் துறைக் காவலில் 24 மணி நேரம் மட்டும் தான் வைத்திருக்கலாம். நீதிபதியின் உத்தரவில்லாமல் மேற்கொண்டு காவலில் வைத்திருக்கக் கூடாது.

### பிரிவு (23, 24) சுரண்டலை எதிர்க்க உரிமை (Right against exploitation) :

**(23)** மனித இனத்தில் பிச்சைக்காரர்கள் மட்டும் அவ்வகையானவர்களை கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதை எதிர்க்க உரிமை உண்டு.

**(24)** பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்களை எவரும் தொழில் நிறுவனங்களிலோ அல்லது சுரங்கங்களிலோ அல்லது கடினமான வேலைகளிலேயோ நியமிக்கக் கூடாது.

### பிரிவு (25 முதல் 28 வரை) மத சுதந்திர உரிமை (Right of freedom of religion) :

(25) பிரஜை ஒவ்வொருவருக்கும் தங்கள் மதத்தை விமரிசிப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் பரப்புவதற்கும் உரிமை உண்டும்.

(26) மத சம்பந்தமான அமைப்பு நிறுவனங்களையும் அது சம்பந்தப்பட்ட அசையும், அசையாப் பொருட்களை வாங்கவும், பராமரிக்கவும், மேற்பார்வையிடவும் உரிமை உண்டு.

(27) மதத்தை வளர்க்க அல்லது பாதுகாப்பதற்காக ஒரு நபரை கட்டாயப்படுத்தி வரி வசூலிக்கக் கூடாது.

(28) அரசாங்கத்தால் உதவியோ, சலுகையோ, பெற்றும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் மத சம்பந்தமான போதனைகளைச் செய்யக் கூடாது. மத போதனைகளைக் கட்டாயப் பாடமாக ஆக்கவும் கூடாது.

**.பிரிவு (29), (30) கலாச்சார கல்வி உரிமைகள் (cultural and educational rights)**

(29) இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய மொழி எழுத்து, கலை, கலாச்சாரம் இவைகளைப் பாதுகாக்க உரிமை உண்டு. மதம், ஜாதி, சமயம், மொழி, பால் இவைகளை காரணத்திற்கொண்டு அரசாங்க கல்வி நிறுவனங்களும், அரசாங்க உதவி பெறும் கல்வி நிறுவனங்களும் ஒருவரை அங்கத்தினராக சேர்க்க மறுக்கக் கூடாது.

(30) மொழி, மதம் இவைகளைக் காரணமாக வைத்து பின்தங்கியோர் கல்வி நிறுவனங்களை அமைக்கவும், நிர்வகிக்கவும் உரிமை உண்டு. மேலும் அரசாங்கமும் மேற்சொன்னதைக் காரணமாகக் கொண்டு உதவி செய்வதில் பாரபட்சம் காட்டாது.

பிரிவு (31எ, 31 (பி) சொத்துரிமை (Right to property):

(31-எ) அவ்வாறு சட்டப்படி பொது நாட்டு நலன் எடுத்து அல்லது வேண்டி சேர்க்கப்பட்ட தனி நபரின் சொத்துக்கு அரசாங்கம் அப்போதுள்ள சட்டக் கொள்கை ரீதியின் அடிப்படையில் நஷ்ட ஈடு தர உரிமைப்பட்டது.

(31-பி) சட்டங்களையும் விதிமுறைகளையும் அரசியல் சாசனச் சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் மாற்றுவதற்கு, வாபஸ் பெறுவதற்கு சட்ட சபைக்கு அதிகாரம் உண்டு.

**பிரிவு (32 முதல் 35 வரை) சாசன சட்டப்படி தீர்வு காண உரிமைகள் (Right to constitutional remedies) :**

(32) ஒவ்வொரு பிரஜைக்கும் மேற்கண்ட உரிமைகளைப் பெறுவதற்கும் நிறைவேறச் செய்வதற்கும் இந்தியாவின் தலைமை நீதிமன்றத்தை நாட உரிமை உண்டு. தலைமை நீதிமன்றம் அதற்காக உத்தரவுகளையும் கட்டளைகளையும் பிறப்பிக்கவும், மறுபரிசீலனை செய்யச் சொல்லவும் நேரடியாக கைதிகளைப் பார்க்கவும் கீழ் நீதிமன்றங்களுக்கு உத்திரவுகளைப் பிறப்பிக்கவும் உரிமை உண்டு (Rights of habeas corpus/ mandamus/ prohibition/ quo – warranto/ certiorari)

(33) ஆயுதப்படை, கப்பற்படை, விமானப்படைகளுக்கு அவ்வப்போது நிலைமைக்கும் சட்டத்திற்கும் ஏற்றவாறு உத்தரவுகள் பிறப்பிப்பதற்கும் மாற்றி அமைக்கவும் அதிகாரம் உண்டு..

(34) நாட்டின் நலன் கருதி ஒருவன் செய்த தவற்றிற்காக நஷ்ட ஈட்டை பார்லிமெண்ட விதிமுறைகள் மூலமாகக் கோரலாம்.

(35) சட்டசபையானது பொருள் 33,34-இல் சொல்லப்பட்டதைப் பொருத்து சட்டங்களை தாங்களாக இயற்ற அதிகாரம் இல்லை.

அடிப்படை உரிமைகள் என்பது ஒரு மனிதன் இயற்கையாகவும், ஒழுங்காக வாழ்வதற்கும் மிகவும் அத்தியாவசியமானவை ஏனென்றல் அந்த அடிப்படை உரிமைகள் இல்லாமல் மனிதன் மனிதனாக வாழ முடியாது. பிரஜை தன்னைத் தானே பூர்த்தி செய்து கொள்ள முடியாது. ஏன்? வாழவும் முடியாது. ஆகவே அடிப்படை உரிமைகள் என்பது இயற்கை உரிமைகளுக்கு ஒத்தது ஆகும். அதனுல் அடிப்படை உரிமைகள் கீழ்கண்ட குணுதிசயங்களைக் கொண்டது.

1. முக்கியமாக தனி நபர் ஒருவர் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ள அவைகளெல்லாம் தேவைப்பட்டவை.

2. ஆனுல் அவைகளெல்லாம் அவனுல் சுருக்கமாக மனத்தால் மட்டும் எண்ணக் கூடிய உரிமைகள் அல்ல. அவைகள் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டும் சட்டத்தால் அமுலாக்கப்பட்டும் பொது சமூக நலன்களுக்கான வரையறுக்கப்பட்ட உரிமைகளாகும்.

3. அந்த உரிமைகள் எல்லாம் சக்தி வாய்ந்தததும் நிலையானதும் அல்ல, அவைகள் காலத்திற்கு ஏற்றுற்போல் மாறக்கூடியவை. ஒவ்வொரு காலத்திலும் அவைகள் அடிப்படை எண்ணங்களாகும்.

4. இந்த அடிப்படை உரிமைகள் எல்லாம் மனிதனின் பழக்கத்தினுலும் தேவையினுலும் முறையினுலும் மனித அறிவினுல் கொண்டு வரப்பட்டதாகும்.

5. அடிப்படை உரிமைகள் முக்கியமாக தனிப்பட்டவரின் உரிமைகளை விட சிறுபான்மையோரின் நலனைக் காப்பதே கருத்தாகக் கொண்டது.

6. எல்லா பிரஜைக்கும், நீதி, சமூக பொருளாதார, அரசியல் எண்ண சுதந்திரங்களையும் கருத்துக்கள், நம்பிக்கை, உரிமை, உண்மை, வழிபாடுகளையும் சம அந்தஸ்தையும், சந்தர்ப்பங்களையும், சகோரத்தையும், தனிப்பட்டவர்க்கு மரியாதையும், தேசத்தின் ஒற்றுமைக்கும் உறுதி செய்வதோடு அவைகளை அடைய வேண்டும் என்பதையும் சிந்தையில் கொண்டது.

**நேர்முகக் கொள்கையின் நோக்கம் :**

தனிப்பட்ட நபரின் நலத்தை சமூக நலத்துடன் ஒற்றுமைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காக சில கட்டுப்பாடுகள் அடிப்படை உரிமை ஜாபிதாவில் சொல்லப்பட்டதுடன் சாசன அமைப்பில் ஒரு தனி பிரிவையே இதற்காக சேர்க்கப்பட்டுள்ளது.

**பாகம் – 4 மாநில அரசின் நேர்முகக் கொள்கைகளுக்கான உத்தரவுகள்:**

மாநில கொள்கைக்கு இவ்வுத்தரவுகள் முக்கியமான அடிப்படைகளாகும் . வருங்கால சட்டசபைக்கும் நிறைவேற்றுபவர்களுக்கும் வழிகாட்டியாக அறிவுரைகளாக அமையும் வகையில் உண்மையான இயற்கை உத்தரவுகளாக அவைகள் அமைந்துள்ளன.

**பாகம் 5 அரசாங்க நேர்முகக் கொள்கைகளும் செயல் திட்டமும் :**

இப்பிரிவின் கீழ் ஒவ்வொரு அரசாங்கமும் மக்கள் நலன்களை அடையவும் பாதுகாக்கப்படவும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்ததை நிர்ணயிக்கவும் ஏற்ற வகையில் நேர்முகக் கொள்கையின் அடிப்படையில் பரந்த பலதரப்பட்ட கொள்கைகளையும் சட்டங்களையும் நிறைவேற்ற அதிகாரம் உண்டு. இவ்வகையான உடன்பாடுகளை சட்ட நீதிமன்ற மூலமாக நிறைவேற்ற இயலாது. ஆயினும் அவைகள் ஒரு தேசத்தை நிர்வகிக்க அரசாங்கத்திற்கு அடிப்படைகளாகும்.

அவைகளில் முக்கியமாக கீழ்க்கண்டவைகளை நிறைவேற்றவும், அடையவும் வகை செய்யும் வகையில் கொள்கைகளை வகுக்க வேண்டும்.

### பிரிவு -1

1. ஒவ்வொரு குடிமகனும் தனக்குப் போதுமான வாழ்க்கை வசதிகளைப் பெறுவதற்கு;
2. கட்டுப்படுத்தப்பட்ட முக்கிய செல்வங்கள் சமூதாயத்திற்கு ஏற்ற வகையில் பகிர்ந்தளிப்பதற்கு;
3. பொருளாதார முறையும் செல்வமும் உற்பத்தியும் சாதாரண மனிதர்களைப் பாதிக்கும் வகையில் ஒரு சாராரிடம் சேராமலிருக்க;
4. வேலைக்கேற்ற சமமான கூலி கொடுக்க;
5. ஆண், பெண், குழந்தை, தொழிலாளர்களின் சுகாதாரமும், பலமும் பாதிக்காத வகையிலும், பொருளாதாரத் தேவையின் காரணமாக வயதிற்கும் பலத்திற்கும் பொருத்தமில்லாத வேலைகளைக் கட்டாயப்படுத்தி செய்வதைத் தடுக்கவும், பாதுகாக்கவும் ;
6. குழந்தைப் பருவத்தினரும், இளம் பிராயத்தினரும் சுரண்டலிலிருந்தும் ஒழுக்கத்திலிருந்தும் தவறுவதிலிருந்தும் பொருட்களைக் கைவிடுவதிலிருந்தும் பாதுகாக்கவும், தடுக்கவும் ;

**பிரிவு (40 முதல் 50 வரை) மாநில அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள்:**

(40) கிராம பஞ்சாயத்தும்,

(41) கல்வி, பொது உதவி, வேலைவாய்ப்பும்,

(42) மனித நிலைமைக்கேற்ற தகுதியான வேலை, பிள்ளைப்பேறு வசதிகளும்;

(43) வேலைக்கேற்ற ஊதியம், தொழிலாளர்களுக்கும்;

(44) பிரஜைகளுக்கும் ஏற்ற வகையில் சமூகத்தினரின் உரிமைகள் சம்பந்தமான ஒரே மாதிரியான சட்டமும்;

(45) குழந்தைகளுக்கு இலவசமான கட்டாயக் கல்வியும் ;

(46) பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினருக்குக் கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்கும் ;

(47) பொது சுகாதாரமும், வாழ்க்கைத் தரமும் வளமும் உயர்வதற்கும் ;

(48) விவசாயம், கால்நடைத் துறை வளர்ச்சிக்கும் ;

(49) அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்ட தேசிய சின்னங்களாகக் கருதப்படும் ஞாபகக் குறிப்பு, சின்னங்கள், இடங்கள், பொருட்கள், கலை, சரித்திரம், தேசிய முக்கியத்துவம் பெற்றவைகளை கெடுவதிலிருந்தும், விகாரபடுததுவதிலிருந்தும், அழிவதிலிருந்தும், அகற்றுவதிலிருந்தும், ஏற்றுமதி அல்லது விற்பனை செய்வதிலிருந்தும் பாதுகாக்கவும் ;

(50) நிர்வாகத் துறையிலிருந்து நீதி பரிபாலனத்தைப் பார்ப்பதற்காகவும், குழு நிறுவனம், இலாக்காக்கள் போன்றவைகளை அமைத்து அதன் மூலமாக வளர்ச்சி அடையச் செய்ய மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ;

பிரிவு (51) மாநில அரசாங்கம் கீழ்க்கண்டவைகளுக்காக முயற்சி செய்யும்:

1. எல்லா தேசங்களின் பாதுகாப்பையும், சமாதானத்தையும் வளர்ப்பதற்கும் ;
2. தேச நாடுகளுக்கிடையில் சமூக நலத் தொடர்பை பராமரிக்கவும்;
3. தேசங்களுக்கிடையில் ஒத்துக்கொள்ளப்பட்ட சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் ஒருங்கிணைந்த மக்களையும் மரியாதையுடன் நடத்தி நட்பை வளர்ப்பதற்கும் ;
4. தனியார் மூலமாக தேச நாடுகளுக்குள் ஏற்படும் தகராறுகளை தீர்த்து உற்சாக மூட்டவும்.

## 4. அடிப்படை உரிமைகளுக்கும் நேரடிக் கொள்கைகளுக்குமான ஒப்பீடு:

இவைகள் இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். அவைகள் ஒன்றுக்கொன்றை பூர்த்தி செய்ய உதவுகிறது. ஒன்றுக்கொன்றின் சந்தர்ப்பத்தின்போது அவைகளை நாம் நோக்குவோம். இவைகளில் மூன்றே ஏற்றுக்கொள்ளக் கூடிய அடிப்படைகளாகும்.

முதலாவதாக அடிப்படை உரிமைகள் எதிர் மறையானதாகவும் நிராகரிக்கக் கூடியதாகவும் இருந்தாலும், மாநிலத்தில் நேரடி உத்தரவுக்கான கொள்கைகள் திட்டமானதும், தீர்மானமானதுமாகும். ஒன்று தனி நபரின் நலத்தையும் மற்றொன்று நாட்டின் நலத்தையும் கருத்தில் அடிப்படையாகக் கொண்டது. அதில் ஒன்று, தன்னைத்தானே வளர்த்துக் கொள்ள உரிமை கொண்டாடக் கூடியது. மற்றொன்று எல்லோரின் நலத்தையும் முழுமையாகக் கொண்டு அதில் ஒரு தனி நபர் ஒரு பாகமாக இருந்து உரிமை கொண்டாடக் கூடியது.

இரண்டாவதாக, அடிப்படை உரிமைகள் எல்லாம் நமது தேசத்தில் அரசியல் ஜனநாயகத்தை அடைவதற்குக் காரணமாக இருந்தால் நேரடி உத்திரவுக்கான கொள்கைகள், பொருளாதார ஜனநாயகத்தை அடைவதற்கு முயற்சி செய்கின்றன. தனி நபரின் சுதந்திர சுருக்கத்தை ஒன்று வலியுறுத்தினுல் மற்றொன்று சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் உள்ள சமத்துவ சுதந்திரத்தை வலியுறுத்திக் காட்டுகின்றது.

மூன்றுவதாக, அடிப்படை உரிமைகள் நீதிமன்றங்களின் மூலமாக அமுலாக்கப்படுகின்றன. ஆனுல் நேர்முகக் கொள்கைகளும் உத்திரவுகளும் மக்களின் எண்ணத்தைப் பொறுத்தது. வேறு விதமாக சொல்லப் போனுல், ஒரு பிரஜை சமூகத்தில் தன்னை ஒரு அந்தஸ்துள்ள மனிதனுக ஆக்கிக் கொள்வதற்கு அடிப்படை உரிமைகள் காரணமாக இருந்தால் நேர்முக உத்தரவுகளும், கொள்கைகளும் அவைகளை அடைவதற்காக ஏற்ற சூழ்நிலையையும் அதை அடையும் நிலையில் ஏற்படக் கூடிய சங்கங்களான ஏழ்மை, பொருளாதார, சமத்துவமின்மை ஆகிய தடங்கல்களை அகற்றுவதையே நோக்கமாகக் கொண்டது.

## 5. குற்றவாளியைக் கைது செய்வதும் அடிப்படை உரிமைகளும்:

காவல் துறையினர் ஒருவரைக் கைது செய்யும் போது கைது செய்யப்படுபவரின் தனி உரிமையை (Personal liberty) பாதிக்கிறது. எனவே அவரை கைது

செய்ய அதிகாரமுள்ளவர்தான் கைது செய்யலாம். பிடிக்கட்டளையில்லாமல் கைது செய்யக் கூடாத குற்றங்களில் (Non-cognizable offences) பிரிவு - 42 கு.வி.மு.ச-ன் படியான சந்தர்ப்பங்களைத் தவிர, மற்றபடி நீதிமன்றத்தின் பிடி கட்டளை இல்லாமல் கைது செய்யக்கூடாது. பிடிகட்டளை இல்லாமல் ஒரு நபரைக் கைது செய்யும் போது என்ன குற்றத்திற்காக கைது செய்யப்படுகிறா் என்பது பற்றியும், கைது செய்யப்பட்ட குற்றம் சம்பந்தமாக குற்றவாளி விரும்புகிற சட்ட ஆலோசகரை தன்னைக் காப்பாற்றிக்கொள்ள கலந்தாலோசிக்க உரிமை உண்டு என்பதனையும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் (பிரிவு 22(1) இந்திய அரசியல் சாசனச் சட்டம், பிரிவு 50(1) கு.வி.மு.ச ஜாமீனில் விடக்கூடிய குற்றத்தில் (Baillable offence) கைது செய்யப்பட்டால் அக்குற்றவாளி ஜாமீனில் போகவும் உரிமையுண்டு என்பதனையும் தெரிவித்தல் அவசியமாகும். (பிரிவு 50(1) கு.வி.மு.ச) அவ்வாறு குற்றவாளியை கைது செய்யும்போது அளிக்கப்பட்ட உரிமையை தெரிவிக்காமல் கைது செய்வது, சட்ட விரோதமாக கைது செய்ததாக கருதப்படும். அவ்வாறு கைது செய்யப்பட்டவர் 'ஹேபியஸ் கார்பஸ்' (Habeas carbus) மனு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்து விடுவிக்கப்படவும் செய்யலாம். கைது செய்பவர் மீது பிரிவுகள் 341,342 இ.த.ச-ன் சட்டப்படி குற்ற வழக்குகள் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்தில் தண்டிக்கப்படவும் செய்யலாம். இம்முறையை நீதிமன்றத்திலிருந்து பிடிக்கட்டளையுடன் கைது செய்யப்படும் போது, அப்பிடிகட்டளையின் சாராம்சத்தை அக்குற்றவாளி படித்து அவர் மீது என்ன குற்றம் சாட்டப்பட்டு கைது செய்ய பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டது என்பதனை அறியுமளவிற்கு காண்பிக்க வேண்டும். ஆனால் பிடிகட்டளையை அவர் கையில் கொடுக்கக்கூடாது (பிரிவு 75 கு.வி.மு.ச) கைது செய்தவரை கைது செய்த நேரத்திலிருந்து, நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தும் கால அளவு 24 மணி நேரத்திற்குள்ளிருக்க வேண்டும். இதில் கைது செய்த நேரத்திலிருந்து, நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லும் பயண நேரம் உள்ளடங்காது. (பிரிவு 22(2) இந்திய அரசியல் சாசனச் சட்டம், பிரிவு 75 கு.வி.மு.ச.)

## ஆ. சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவின் அரசியல், சமுதாய, பொருளாதார மாற்றங்களும், அவை காவல் துறை மீது சுமத்தியுள்ள விளைவுகளும்

1. அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா சரியான வளர்ச்சியும் முன்னேற்றமும் அடையவில்லை. இது இங்கிலாந்தின் காலனியாகவும் சந்தையாகவுமே இருந்தது. எண்ண, எழுத பேச போதிய சுதந்திரமில்லை. எங்கும், எதிலும் கட்டுப்பாடு, அடக்குமுறை மக்கள் அறியாமையிலும் பயத்திலும் மூழ்கிக் கிடந்தனர். ஆங்கிலேயரை அண்டிப் பிழைத்த மேட்டுக் குடியினர் தங்கள் சுயநலத்திற்காக வாழ்வையும், வசதியையும் பெருக்கிக் கொண்டனர். வசதியற்ற பெரும்பான்மையினர் வாழ்வின் அடித்தளத்தில் உழன்று கிடந்தனர். நம்மை ஆண்டு கொண்டிருந்த வெள்ளையர் இந்திய மக்களின் எழுச்சியை ஒடுக்க இந்தியர்களையே காவல் துறையில் சேர்த்துப் பயன்படுத்தினர். எனவே காவல் படை என்பது மக்களை ஒடுக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு 'கொடும்படை' என்றே மக்களால் கருதப்பட்டு வந்தது.

ஆனால் நாடு சுதந்திரம் பெற்றபின் இந்த நிலைகள் மாறுதலைப்பட்டன. அரசுக்காக காவல் துறை என்ற நிலை மாறி மக்கள் நலனுக்காகத்தான் என்ற உணர்வு வந்தது. மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. சமுதாயத்தில் தீவிர மாற்றங்கள் நிகழந்தன. பொருளாதார மேம்பாடு தோன்றலாயிற்று. அவற்றல் காவல் துறையின் பொறுப்பு அடிப்படையிலிருந்தே மாறுபட நேர்ந்தது. அரசியல் விழிப்புணர்ச்சி காரணமாக பொது மக்கள்

போலீசாரைக் கண்டு அஞ்சிய நிலை மாறி அவர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடவும், காவல் துறையினர் தவறு செய்தால் தட்டிக் கேட்கவும் மனப்பக்குவம் பெற்றுள்ளனர். பொருளாதார வளர்ச்சி ஏற்பட அடிப்படையாக நாடு தொழில் மயமாகிறது. இதனால் கிராமங்களில் போதிய வருமானமின்றி வறுமையில் உழல்வோர், வேலைத் தேடிப் பட்டணங்களை நோக்கி வருகிறார்கள். பட்டணங்களில் மக்கள் தொகை பெருகுகிறது. ஆனால் போதுமான வீட்டு வசதி கிடையாது. எனவே சேரிகள் தோன்றுகின்றன. இதனால் ஒழுக்கமின்மை போக்கிரித்தனம், குற்றங்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய சமுதாயக் தீமைகள் பெருகுகின்றன. குற்றங்கள் நடவாமல் தடுத்தல், நடந்து விட்ட குற்றங்களைக் கண்டுபிடித்தல், மக்கள் அமைதியுடன் வாழ, சட்டம் ஒழுங்கினைப் பேணுதல் என்ற தலையாய கடமைகளின் அடிப்படையில் காவல் துறையினர் மேலே சொன்ன தீமைகளை எதிர்த்துப் போரிட வேண்டியுள்ளது. குற்றவாளிகளை தயவு தாட்சண்யமின்றி சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருவதன் மூலமே சட்டத்தை மதித்து நாட்டு மக்களுக்கு நாம் பாதுகாப்பு அளிக்க முடியும்.

அடிநாள் தொட்டு இந்திய சமுதாயத்தில் நிலை பெற்றிருந்த கூட்டுக் குடும்ப முறை சிதைவுற்றது. எனவே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அல்லது ஒரு கிராமத்தைச் சேர்ந்த பெரியவர்கள், இளைஞர்களைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையில் தோன்றி விட்டது. தனி மனிதன் பலமற்றவனாகி விட்டான். எனவே ஒவ்வொருவரும் ஒரு அணியைச் சார்ந்திருக்க முற்படுகின்றனர். இதனால் மாணவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு மற்றும் பல்வேறு வாழ்க்கைத் தரப்பினருக்கும் தனித்தனி அமைப்புகள் தோன்றலாயின. இவற்றின் மூலம் தங்கள் கோரிக்கைகளுக்காகக் கூட்டாகக் குரல் கொடுக்கவும், ஒன்றுசேர்ந்து போராடவும் தலைப்பட்டனர். வேலையில்லாத் திண்டாட்டம் குறிப்பாகப் படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்பற்ற தன்மை நாட்டில் ஒரு சவாலாக உள்ளது. இவைகளின் விளைவு அமைதியின்மை, சட்டம் ஒழுங்கு பிரச்சினை பொருளாதாரம் நலிவுற்ற நிலையில் எந்நேரத்தில், எந்த திசையிலிருந்து என்ன பிரச்சனை வரக்கூடும் என்று நிர்ணயிக்க முடியாத அளவுக்கு நாட்டில் பிரச்சனைகள் பெருகியுள்ளன. இவை யாவற்றையும் தொகுத்துப் பார்க்கையில் காவல் துறையினரின் கடமைகள் எந்த அளவுக்கு மாறுபட்டவையாகவும், சவால்களைச் சந்திக்க வேண்டியவையாகவும் பொறுப்பைச் சுமத்துபவையாகவும் ஆகிவிட்டன என்பது விளங்கும்.

எனவே சேவை மனப்பான்மை கடமை உணர்வு, விடாமுயற்சி, சோதனைகளைக் கண்டு துவண்டு விடாமை, நேர்மை, பொறுமை, புத்திசாலித்தனம் இவை வளர்த்துக் கொள்வதன் மூலம் தான் மாறிவரும் அரசியல், சமுதாய, பொருளாதார சூழ்நிலைகளில், காவல் துறையினர் வெற்றிகரமாகச் செயல்பட முடியும். அன்றாடம் நம்மைச் சுற்றி ஏற்படுகின்ற சூழ்நிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப, நாம் மேலும் மேலும் பயனுள்ளவர்களாக நம்மைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இதை நாம் மறந்தாலோ, மறுத்தாலோ, கண்டுகொள்ளமால் இருந்தாலோ கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடுவோம்.

## 2. முக்கிய சமுதாயப் பிரச்சனைகள் (Import social problems)

1 இந்தியா வேற்றுமையில் ஒற்றுமையுள்ள நாடு, இனத்தாலும், மொழியாலும் , மதத்தாலும், கலாச்சாரத்தாலும், பகுதிகளாலும் இந்தியரிடையே வேற்றுமைகளும், அவற்றின் விளைவாகப் பல்வேறு பிரச்சனைகளும் தோன்றி உள்ளன. இந்திய மக்கள் ஒரு வலுவான சமுதாயமாக உருவெடுக்க வேண்டும் எனில் சமுதாய தீமைகள் ஒழிக்கப்பட வேண்டும். அவை பின்வருமாறு:

1. இனம், மதம்,பால் அடிப்படையில் ஏற்படும் சமுதாய வேற்றுமைகள்
2. கல்வி முன்னேற்றத்திலுள்ள இடர்பாடுகள்
3. சம வாய்ப்புக் கொள்கைக்கு முரணுன வம்சா வழிச் சொத்துரிமை
4. காலத்திற்கு ஒவ்வாத சாதி முறை, தனிப்பட்ட நபரிடம் இது ஆணவத்தையும், சாதி மட்டத்திலே பகைமையையும், தேசிய மட்டத்திலே பிளவுகளையும் ஏற்படுத்துகிறது.
5. மதம் என்பது ஒரு நம்பிக்கைப் பிரச்சனை. சமுதாய நீதி மதச் சார்பற்ற தன்மையில் தான் உருவாக முடியும். எனவே இனப்பற்று கட்டுப்படுத்தப் பட வேண்டும்.
6. சமுதாயத்தில் பெண்களின் கீழ்நிலை கேடு பயக்கக்கூடியதும், விரும்பத் தகாததுமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. விபச்சாரம், பெண் கடத்தல் சீர்வரிசை ஆகியவை சமுதாயத்தில் தோன்றியுள்ள தீமைகளாகும். கணக்கெடுப்பின்படி பெண்களின் விகிதாச்சாரம் குறைந்து வருகிறது. இந்த வீழ்ச்சிக்கு காரணம் மற்ற காரணங்களுடன், பெண் குழந்தை என்பது ஒரு வேண்டாத சுமை என்ற எண்ணமுமாகும்.

## 3. தேசிய ஒருமைப்பாடு (National Integration)

நாட்டிலுள்ள சில சூழ்நிலைகள் தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிப்பவையாக உள்ளன. அவை:

1. வருமானத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள்
2. மொழி, கலாச்சார வேறுபாடுகள்
3. முரண்பாடுகள்
4. பரந்த தன்மை

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தான் கொந்தளிப்பு ஏற்பட முக்கியமான காரணங்கள். எனவே தேசிய ஒருமைப்பாடு ஏற்பட வேண்டுமெனில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் களையப்பட வேண்டும்.

சீனப் படையெடுப்பு ஏற்பட்ட சூழ்நிலையில் 1962-ல் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் 1976 – க்குப் பிறகு இதன் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. இந்தக் குழுவின் நோக்கங்கள் கீழ்வருமாறு:

1. இன ஒற்றுமையை வளர்த்தல்
2. பகுதி ஒற்றுமையை வளர்த்தல்
3. சிறுபான்மையினரின் நிலையை அவ்வப்போது மறுபரிசீலனை செய்தல்
4. தாழ்த்தப்பட்ட, மலைவாசி மக்களின் துயர் துடைப்பில் போதிய கவனம் செலுத்துதல்
5. தீவிரவாதிகளின் வன்முறையை ஒடுக்குதல்
6. மொழி வெறியரின் வன்முறையை ஒடுக்குதல்
7. தொழிலாளர் உறவை நல்ல முறையில் பேணுதல்

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க பின்வரும் முறைகள் கையாளப்படுகின்றன.

1. ஒவ்வெருவரின் மரபு, பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளுதல்
2. ஆசிரியர்களின் மனப்பான்மையை சரிப்படுத்துதல்
3. பள்ளி, கல்லூரி இவைகளுக்கு நல்ல பாடப் புத்தகங்களை வெளியிடுதல்

4. ஏடுகள், ஒலிபரப்பு, தொலைக் காட்சிகள் மூலம் பயனுள்ள பிரச்சாரம் செய்தல்

அரசியல் சாசனத்தில் ‘சோஷலிஸம்’ மதச் சார்பற்ற தன்மை, ஆகியவை தேசிய ஒருமைப்பாட்டு நோக்கத்திற்காகவே புகுத்தப்பட்டுள்ளன. சுதந்திர போராட்டம் நாட்டை ஒன்றாகப் பிணைத்திருந்தது. இனி அந்த வேலையை சுதந்திர இந்தியாவில் சோஷலிஸம்தான் செய்ய முடியும்.

**4. நலிவுற்ற மக்களை மேம்படுத்துதல் - காவல் துறையும் நலிவுற்ற மக்களும் (Police and sections of society)**

நலிவுற்ற மக்கள் யார் என்பதை விளக்குவது கடினம். எனினும் ‘அரிசனங்கள்’ என்று மகாத்மா காந்தியால் பெயரிடப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பிடலாம். தீண்டப்படாதவர்கள் என்று உயர்சாதி மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் பல உண்டு. காவல் துறையினர் அவற்றை அனுதாபத்துடன் அணுக வேண்டும். தீண்டாமை ஒழிப்பு சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்துவதுடன், கிராமங்களில், அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து சமூக அநீதி நடக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். சாதியைக் குறிப்பிட்டு நிந்தித்தல், சமுதாயக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க தடை செய்தல் கோவிலுக்குள் போவதைத் தடுத்தல் போன்றவை குற்றமாகும். காவல் துறையினர் தீண்டாமை ஒழிப்பில் தம் கடமையைச் செய்யாவிட்டால் அவர்களும் குற்றவாளியாக கருதப்படுவர்.

**பெண்களையும் இளங் குற்றவாளிகளையும் நடத்தும் முறைகள் (Treatment of women/ children and juveniles)**

பெண்களையும் குழந்தைகளையும் ஒரு வழக்கில் விசாரணை செய்யும் போது அவர்களைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரக்கூடாது. ஒரு பெண்ணை மற்றொரு பெண்ணைக் கொண்டுதான் சோதனை செய்ய வேண்டும். ஒரு பெண்ணை விசாரணை செய்யும் போது, வேறு ஒரு பெண்மணி அருகில் இருத்தல் நல்லது முடிந்த வரையில் பெண்களைக் கைது செய்து, காவல் நிலையத்தில் அடைத்து வைப்பதைத் தவிர்க்க வேண்டும் எல்லாப் பெண்களையும் உடன்பிறவாச் சகோதரிபோல் நினைத்து நடந்து கொள்ள வேண்டும். பெண்கள் கொடுக்கும் புகார்களை உடனே விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுப்பது காவல் துறையினரின் கடமையாகும். பெண்களிடம் எப்படி நடந்து கொள்வது என்று காவல் துறைத் தலைவரிடமிருந்து வந்துள்ள அறிவுரைகளின்படி நடக்க வேண்டும். அப்படிச் செய்தால் காவல் துறைக்குக் களங்கம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தனி ஒரு காவலரின் தவறு, காவல் துறைக்கே ஒரு தலைக் குனிவை ஏற்படுத்தலாம். எனவே எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

# இ. குடியாட்சி இந்திய யூனியன் வேலை முறை அமைப்பு- மத்திய – மாநில அமைச்சகங்கள்

1. 15.8.1947-ல் சுதந்திரமடைந்த இந்திய நாடு 26-1-1950 –ல் ஒரு தன்னாட்சிக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தியக் கூட்டாட்சியானது ஒரு மத்திய அரசையும், மாநில அரசுகளையும் கொண்டது.

இந்திய நாட்டின் தலை மகஞை, நிர்வாகத்தின் தலைவராக குடியரசுத் தலைவர், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை, பாராளுமன்றம், சட்ட மன்றங்கள் இவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் இரகசிய முறை ஒட்டெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறுர். ஒரு உதவிக் குடியரசுத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்,

குடியரசுத் தலைவருக்கு தேச நிர்வாகத்தில் ஆலோசனை வழங்க ஒரு அமைச்சரவை இயங்குகிறது. இதன் தலைவர்தான் பிரதம மந்திரி. இவர்கள் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜ்ய சபையின் நியமன உறுப்பினர்களும் கூட அமைச்சர்களாக நியமிக்கப்படலாம்.

சட்டங்கள் பாராளுமன்றத்தில் முதலில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படுகின்றன. ஒட்டெடுப்பின் பிறகு, ராஜ்ய சபையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகின்றன. அதன்பின் குடியரசுத் தலைவரின் அனுமதியுடன் சட்டங்களாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றன, அமைச்சரவை கூட்டுப்பொறுப்பில் இயங்குகிறது.

மாநிலங்களில் நிர்வாகத் தலைவராக ஆளுநர் மத்திய அரசால் ஐந்து ஆண்டு காலத்துக்கு நியமிக்கப்படுகின்றனர். மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சி நிர்வாகத்தை ஏற்கிறது. அமைச்சரவையில் முதலமைச்சரும் இதர அமைச்சர்களும் அங்கம் வகிக்கின்றனர். மத்தியில் உள்ள ராஜ்ய சபை போலவே மாநிலங்களிலும் மேலவைகள் உள்ளன. மாநில சட்ட மன்றங்களின் செயல் முறையும், பாராளுமன்ற கீழ் சபை, மேல் சபைகளின் செயல்முறை போன்றதே.

நம் இந்திய நாடு சுதந்திரம் அடைந்தவுடன் கடைசியாகப் பணியாற்றிய ஆங்கிலேயர் லார்டு லூயிஸ் மவுண்ட் பேட்டன் ஆவார். இவர் 15.8.1947 முதல் 20.6.1948 வரை கவர்னர் ஜெனரலாக நம் இந்தியாவில் பணியாற்றினுர் அதன் பிறகு இந்தியாவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு.சி. இராஜகோபாலாச்சாரி என்பவர் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆனுர். இவர் 21.6.1948 முதல் 25.1.1950 வரை பணியாற்றினுர்.

நம் நாடு முதன் முதலில் 26.1.1950–ல் குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப் பட்டதிலிருந்து குடியரசு தலைவராகப் பணியாற்றிவர்கள் பின்வருமாறு

1. டாக்டர் ராஜேந்திர பிரசாத் 26.1.1950 முதல் 1962வரை
2. டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் 1962 முதல் 1967 வரை
3. டாக்டர் சாக்கீர் உசேன் 1967 முதல் 1969 வரை
4. திரு.வி..வி..கிரி 1969 முதல் 1974 வரை
5. திரு பக்ருதீன் அலி அகமது 1974 முதல் 1977 வரை
6. திரு நீலம் சஞ்சீவி ரெட்டி 1977 முதல் 1982 வரை
7. திரு ஜியானி செயில் சிங் 1982 முதல் 24-7-1987 வரை
8. திரு. ஆர். வெங்கட்டராமன் 25-7,1987 முதல் 1992 வரை
9. திரு. சங்கர் தயால் ஷர்மா 1992 முதல் 1997 வரை
10. திரு. கே.ஆர். நாராயணன் 1997 முதல் 2002 வரை
11. திரு. எ.பி.ஜே. அப்துல்கலாம் 2002 முதல்

**நம் இந்திய நாட்டின் துணை-குடியரசு தலைவராகப் பணியாற்றிவர்கள் பின்வருமாறு**

1. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் 13.05.1952 முதல் 12.05.1962 வரை
2. டாக்டர் ஜாகீர் உசேன் 13.05.1962 முதல் 12.05.1967 வரை
3. வி.வி. கிரீ 13.05.1967 முதல் 03.05.1969 வரை
4. கோபால் ஸ்ருப் பதாக் 31.08.1969 முதல் 30.08.1974 வரை
5. பசப்பா தனப்பா ரெட்டி 31.08.1974 முதல் 30.08.1979 வரை
6. முகமது இதயத்துல்லா 31.08.1979 முதல் 30.08.1984 வரை
7. இராமசாமி வெங்கட்ராமன் 31.08.1984 முதல் 27.07.1987 வரை
8. சங்கர் தயால் ஷர்மா 1987 முதல் 1992 வரை
9. கோச்சேரில் இராமன் நாராயணன் 1992 முதல் 1997 வரை
10. கிருஷ்ணன்காந்த் 1997 முதல் 2002 வரை
11. பைரன்சிங் ஷெகாவாத் 2002 முதல்

**நம் இந்திய நாட்டின் பிரதம அமைச்சர்கள் பின் வருமாறு**

1. பண்டிட் ஜவஹர்லால் நேரு 15-8-1947 முதல் 27-5-1964 வரை
2. திரு குல்காரி லால்நந்தா 27.05.1964 முதல் 09.06.1964
3. திரு லால்பகதூர் சாஸ்திரி 9-6-1964 முதல் 10-1-1966 வரை
4. திரு குல்காரி லால்நந்தா 11.01.1966 முதல் 24.01.1966.
5. திருமதி இந்திர காந்தி 24-1-1966 முதல் 24-3-1977 வரை
6. திரு.மொராஜிதேசாய் 1977 முதல் 1979 ஜுலை வரை
7. திரு சரண்சிங் 1979 ஜுலை முதல் 1980 வரை
8. திருமதி இந்திரா காந்தி 1980 ஜனவரி முதல் 31-10-1984 வரை
9. திரு ராஜுவ் காந்தி 31-10-1984 முதல் 02.12.1989
10. திரு வி.பி. சிங் 02.12.1989 முதல் 10.11.1990
11. திரு சந்திரசேகர் 10.11.1990 முதல் 07.03.1991
12. திரு. பி.வி. நரசிம்மராவ் 07.03.1991 முதல் 16.05.1996
13. திரு. எ.பி. வாஜ்பாய் 16.05.1996 முதல் 31.05.1996
14. திரு எச்.டி. தேவகௌடா 01.06.1996 முதல் 20.04.1997
15. திரு. ஐ.கே. குஜ்ரால் 21.04.1997 முதல் 18.03.1998
16. திரு. எ.பி. வாஜ்பாய் 19.03.1998 முதல் 21.05.2004
17. திரு. டாக்டர் மன்மோகன்சிங் 22.05.2004 முதல்

## 2. தேசியக் கொடி (National Falg)

நமது தேசியக் கொடி மூன்று நிறங்களைக் கொண்டது. மேலே காவி இடையில் வெள்ளை, கீழே பச்சை நிறங்களைக் கொண்டது. நமது கொடி 3’X2’ என்ற அளவுள்ளது. இடையிலுள்ள வெள்ளையின் நடுவில் ஊதா நிறமுள்ளதும் 24 ஆரங்களைக் கொண்டதுமான தர்ம சக்கரம் வரையப்பட்டுள்ளது. இது சாரநாத்திலுள்ள அசோகர் நினைவுத் தூணைப் பின்னணியாகக் கொண்டது. காவிநிறம் தியாகத்துக்கம், வெள்ளை தூய்மைக்கும், பச்சை செழிப்புக்கும் அடையாளங்களாகும். தேசியக் கொடியின் நடுவில் உள்ள சக்கரம், அசோகரின் தர்ம சக்கரத்தைக் குறிக்கிறது. இக்கொடி 22-7-1947-ல் அன்றிருந்த நிர்வாக சபையால், தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேசியக்கொடி எப்போது பறக்க விடப்படவேண்டும் என்பதற்கு மத்திய அரசு விதிமுறைகளை வகுத்துள்ளது. தேசியக் கொடியை எக்காரணம் கொண்டும் அவமதிக்கக் கூடாது, இந்திய தேசியக் கொடியை எரித்தல்,

அவமதித்தல், அசுத்தப்படுத்துதல் குற்றமாகும் (பிரிவு 4 தேசிய மரியாதை அவமதிப்புத் தடுப்புச் சட்டம்.

### 3. தேசிய கீதம் (நாட்டுப்பண்) (National Anthem)

பங்கிம் சாட்டர்ஜியின் ' ஆனந்த மடம்' என்ற நாவல் 1812-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதில் வரும் 'வந்தே மாதரம்' என்ற பாடல் முதன் முதல் 1896-ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பாடப்பட்டது.

இரவீந்திர நாத் தாகூரின் 'ஜன கண மன' என்ற பாடல் 27-12-1911 கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் முதன் முதலில் பாடப்பட்டது. 1912 ஜனவரி மாதம் தாகூரின் 'தத்துவ போதினி' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டது.

மேலே கண்ட இரண்டு பாடல்களுமே நமது நாட்டுப்பண்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும், 24-1-1950-ல் இந்தியா தன்னுட்சிக் குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்ட காலை, தாகூரின் 'ஜன கண மன' முக்கியத்துவம் பெற்று அங்கீகரிக்கப்பட்டது. இப்பாடலின் பொருள் பின் வருமாறு.

'இந்திய மக்களின் இதயங்களில் ஆட்சி செய்யும் நீயே இந்தியாவின் தலை விதியை நிர்ணயிக்கிறுய் ; உனது பெயர் பஞ்சாப், சிந்து, குஜராத், மாராட்டியம், திராவிடம், ஒரிசா, வங்காளம் இவற்றின் இதயங்களை எழுப்புகிறது; அது விந்திய இமாலய மலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது. யமுனை, கங்கை நதிகளின் இசையில் கலக்கிறது; இந்து மகா சமுத்திரத்தின் அலைகளால் ஜெபிக்கப்படுகிறது. அவை உனது வாழ்த்துதலுக்கு வேண்டியும், உனது புகழ் பாடியும் நிற்கின்றன; இந்தியாவின் தலை விதியை நிர்ணயிக்கின்ற உனக்கே வெற்றி வெற்றி வெற்றி''

**'வந்தே மாதரம்' பாடலின் பொருள்**

'தாயே உன்னை வணங்குகிறேன். நீர் வளமும். கனி வளமும் உடையவள் நீ ; தெற்கேயிருந்து வரும் தென்றல் காற்றின் குளுமையிலே உரைபவள் நீ; அறுவடை செய்யப்பட்ட கதிர்களின் செழுமையில் உறைபவள் நீ ; அன்னையே நில வொளியில் புகழில் உன் வலிமை பொலிவடைகிறது ; பூ மலரும் மரங்களின் கிலைகளாய் உனது கரங்கள் விரவி நிற்கின்றன; இனிமை முகிழ்ப்பது உனது சிரிப்பும், பேச்சும், அன்னையே வரமும் மகிழ்ச்சியும் அளிப்பவள் நீயே'.

### 4. தேசியச் சின்னம் (இலச்சினை) (National emblem)

நமது தேசியச் சின்னம், சாரநாத்திலுள்ள அசோகர் தூணின் மறுபதிப்பாகும். மூலக்கல் தூணில் ஒரு பீடத்தின் மேல், நான்கு சிங்கங்கள் ஒன்றுக்கொன்று முதுகைத் திருப்பிக் கொண்டுள்ளது போல் அமைக்கப் பட்டுள்ளன. அச்சிடும் போது மூன்று சிங்கங்கள் தான் தெரியும். தர்ம சக்கரம் பீடத்தின் நடுவிலும், அதன் வலது பக்கம் காளை மாடும், இடது பக்கம் குதிரையும் பொறிக்கபட்டுள்ளன. முண்டக உபநிஷத்திலிருந்து எடுக்கப்பட்ட 'சத்தியமேவ ஜெயதே' (வாய்மையே வெல்லும்) என்ற வாசகம் தேவ நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தத் தூண் கி.மு. 242-232-க்கு இடைப்பட்ட காலத்து 26-1-1950 —ல் தேசியச் சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## 5. மாநிலங்களும் அவற்றின் தலை நகரங்களும் (States and their capitals)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஆந்திரபிரதேசம் | - ஐதராபாத் | 16. | பஞ்சாப் | -சண்டிகர் |
| 2. | அஸ்ஸாம் | - திஸ்பூர் | 17. | இராஜஸ்தானம் | -ஜெய்ப்பூர் |
| 3. | பீகார் | - பாட்னு | 18. | சிக்கிம் | -கேங்க்டக் |
| 4. | குஜராத் | - காந்தி நகர் | 19. | தமிழ்நாடு | -சென்னை |
| 5. | ஹரியானு | - சண்டிகர் | 20. | திரிபுரா | -அகர்தலா |
| 6. | ஹிமாச்சல பிரதேசம் | - சிம்லா | 21. | உத்திரப் பிரதேசம் | - லக்னோ |
| 7. | ஜம்மு – காஷ்மீர் | - ஸ்ரீநகர் | 22. | மேற்கு வங்காளம் | -கொல்கத்தா |
| 8. | கர்நாடகா | - பெங்களூர் | 23. | அருணுசல பிரதேசம் | -இட்டா நகர் |
| 9. | கேரளம் | - திருவனந்தபுரம் | 24. | கோவா, டாமன், டையூ | -பானஜி |
| 10. | மத்தியப் பிரதேசம் | - போபால் | 25. | மிசோரம் | -ஐஸ்வால் |
| 11. | மகாராஷ்டிரம் | - மும்பாய் | 26. | ஜார்கண்ட் | -ராஞ்சி |
| 12. | மணிப்பூர் | - இம்பால் | 27. | உத்திரகாண்ட் | -டெராடூன் |
| 13. | மேகாலயா | - சில்லாங் | | | |
| 14. | நாகாலாந்து | - கொஹீமா | | | |
| 15. | ஒரிஸா | - புவனேஷ்வர் | | | |

### யூனியன் பிரதேசங்கள் (Union Territories)

| | | | |
|---|---|---|---|
| 1. | அந்தமான நிகோபர் | - | போர்ட் ப்ளையர் |
| 2. | புதுச்சேரி | - | புதுச்சேரி |
| 3. | சண்டிகர் | - | சண்டிகர் |
| 4. | தாத்தா – நாகர் ஹவேலி | - | சில்வாசா |
| 5. | டெல்லி | - | டெல்லி |
| 6. | இலட்ச தீவுகள் | - | கவராட்டி |

### காவல் துறையும் தேசிய ஒருமைப்பாடும்

தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் காவல் துறைக்குப் பெரும் பங்கு உண்டு. நமது அரசியல் சாசனச் சட்டம் மத, கலாச்சாரங்களுக்கும், மொழிகளுக்கும் எல்லா இந்திய பிரஜைகளுக்கும் உறுதியளிக்கிறது. ஒவ்வொரு இந்திய பிரஜையும் தன்னுடைய மதத்தையும், கலாச்சாரத்தையும், தாய் மொழியையும் அவர்களுக்குள்ள உரிமைகளையும் சுதந்திரமாக அனுபவிக்கிறுன் என்று எண்ணும் போதுதான் தேசிய ஒருமைப்பாடானது முழுமையாக வளர்ச்சி அடைந்ததாகக் கருதப்படும். ஆகவே, காவல் துறைக்கு ஒவ்வொரு இந்தியனின் உரிமையைக் காப்பற்றுவதிலும், அந்த உரிமைகளை அவன் சரிவர உணரச் செய்வதன் மூலமும்தான் தேசிய ஒருமைப்பாட்டை வெற்றியாக்க முடியும்.

மதத்தையும் கலாச்சாரத்தையும், மொழியையும் காப்பாற்றும் நேரத்தில் காவல் துறையினர் தங்களுடைய மதம், மொழி, கலாச்சாரம் என்பதை மறந்து செயல்பட வேண்டும். காவல் துறையினர் அரசியல், சாசனம். சட்டம் இவைகளை முறையாக தீவிரமாக நிறைவேற்றி ஒரு சமூகம் அல்லது வகுப்பினர் மற்றவைகளை அழிப்பதையும், தீய பிரிவினைச் சக்திகளின் போக்கையும் தடுக்க வேண்டும். இத்தருணத்தில் 1947–ஆம் ஆண்டு 21–ஆம் தேதி கல்கத்தா தேசபந்து பூங்காவில் திரு மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன அறிவுரைகளை நினைவு கொள்வோமாக “காவல் துறையில் உள்ள எல்லா அதிகாரிகளும் காவலர்களும் அவர்களின்

வேலையில் ஈடுபடும்போது அவர்கள் முகம்மதியர்களுமல்ல, இந்துக்களுமல்ல, சீக்கியர்களுமல்ல, அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை நான் ஓர் இந்தியன் என்ற முறையில் காப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.''

சங்கடமும் நெருக்கடியும் நேரும்போது குறிப்பிட்ட மதத்தை, சாதியை இனத்தை, மொழியைச் சேர்ந்தவன் என்பதை மறந்து காவல் துறையினர் தனது முழு கவனத்தையும் சட்ட ரீதியாக தீங்கு விளைவிக்கக்கூடிய சக்திகளை ஒடுக்குவதிலும் தடுப்பதிலும் அக்கறை செலுத்துவார்களேயானல் தேசிய ஒருமைப்பாட்டை அடைவதற்கு இது ஒரு ஏதுவான சாதனையாகும்.

1962–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6–ஆம் தேதி முதல் 10–ஆம் தேதி வரை புதுடில்லியில் நடைபெற்ற காவல் துறைத் தலைவர்கள் மாநாட்டில் ''தேசிய ஒருமைப்பாட்டில் காவல் துறையின் பங்கு'' என்ற தலைப்பு முக்கியமாக அங்கம் வகித்தது. மாநாட்டில், தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டில் ஒற்றுமையையும் வளர்ப்பதிலும், காப்பதிலும் காவல் துறைக்குப் பெரும் பங்கு உண்டு என்றும் அவைகளுக்காக தேசிய படை போல் காவல் துறை பணியாற்ற வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இவைகள் நினைவு கூர்ந்து ஒவ்வொரு காவல் துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்போமாக.

## ஈ. இன்றைய தேசிய பிரச்சனைகள்
## (Current affairs)

### இலங்கை பிரச்சனைக்கு காரணம்

ஒரு நாட்டை ஆளுகின்ற அரசு அந்த நாட்டு மக்களின் பால் இன மொழி, மத, நிற வேறுபாடு இன்றி பொதுவாக நடந்து கொள்ள வேண்டும் ஆனல் இலங்கையிலே ஈழத்தமிழ் பேசுபவர்களும் , சிங்கள மொழி பேசுபவர்களும் சம அளவு எண்ணிக்கையில் இருந்தும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் ஆங்காங்கே சிறிதளவு வசித்து வந்தார்கள்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் சிங்களர்களைக் காட்டிலும் பொருளாதாரத்தில், தேயிலைத் தோட்டம், பால் பண்ணைகள், தொழிலதிபர்கள் முதலானவற்றில் வசதிபடைத்தவர்களாக இருந்து வந்தார்கள். இதைப் பொறுக்காத சிங்களர்கள், தமிழர்களுக்கு எதிராக சதிதீட்டி தமிழர்களுக்குச் சொந்தமான 2 நூல் நிலையங்களுக்கு முதன் முதலில் தீ வைத்து கொளுத்தினர்கள். இதைக் கண்ட தமிழ் மக்கள் கொதித்தெழுந்து சிங்களர்களை பழிதீர்க்க முடிவு செய்து பழிவாங்கும் செயலில் ஈடுபட்டனர். இதுவே தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும் தோன்றிய முதல் கலகமாகும்.

இலங்கையை ஆளுகின்ற சிங்கள அரசு சிங்களர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டு, தமிழ் மக்கள் புறக்கணிக்கப் பட்டார்கள். இதனல் ஈழத்தமிழ் படித்த இளைஞர்கள் ஒன்று கூடி தமிழர்களையும், தமிழ்ப்பெண்களையும், மாணவிகளையும், தமிழ் தலைவர்களையும் சிங்கள அரசு சிங்களர்களுடன் சேர்ந்து கொண்டு கொடுமைப்படுத்துவதை பார்த்து சகிக்க முடியாமல் சிங்களர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி தனி ஈழம் அடைந்தாக வேண்டும் என்றும் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறர்கள்.

இதில் முக்கிய பங்கு வகித்தவர்களில் முதன்மையானவர்கள் குட்டிமணி, ஜகன் ஆவார்கள். இவர்களின் இரு கண்களும் சிங்களர்களால் பிடுங்கப்பட்டு புத்தர் சிலையின் கீழ் தரையில் போட்டு செருப்புக் காலல் மிதிக்கப்பட்டன. அவர்களின் கண் எதிரே அவர்களின்

மனைவிமார்கள், சகோதர, சகோதரிகள், தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். அந்தக் கொடுமையான காட்சி இன்னும் தமிழ் மக்களின் கண் முன்னே நிழலாடிக் கொண்டு வருகிறது.

தனி ஈழத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற உயரிய முயற்சிகளில் இன்னும் பல தீவிரவாத இயக்கங்கள் பல தலைவர்களைக் கொண்டு இன்னும் செயல்பட்டு வருகிறது. அவர்களின் தளபதி "இரும்பு மனிதன்" பிரபாகரன், மாத்தையா, கிட்டு, பாலசிங்கம் இவர்கள் ஒரு இயக்கமாகவும், வரதராஜப்பெருமாள் ஒரு இயக்கமாகவும் செயல்பட்டு வருகிறார்கள்.

## இலங்கை-இந்தியா ஒப்பந்தம்

உலக நாடுகளின் பல நாடுகளுக்கு சுதந்திரத்திற்கு வித்திட்ட குரல் கொடுத்த இந்தியா-இலங்கை விவகாரத்தில் தலையிட்டது. (அதனால் இலங்கை-இந்தியா ஒப்பந்தம் ஏற்பட்டது)தனி ஈழத்திற்காக போராடிய ஒரு சில தலைவர்களின் ஒப்புதல் இல்லாமலே, இலங்கையில் அதிகம் தமிழ் பேசும், தமிழர் வசிக்கும் பகுதிகளாகிய வடக்கு, தெற்கு பகுதியை இணைப்பது என்றும், தமிழர் வாழும் பகுதிகளுக்கு மாகாண அந்தஸ்து வழங்குவது என்றும், அவர்களையே அதற்குத் தலைமைப் பொறுப்பில் அமர்த்துவது என்றும், பெரும்பான்மை பகுதி மக்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்குவது என்றும், அப்போதைய அதிபர் ஜெயவர்த்தனே ஒப்புக் கொண்டதன் பேரில் பெரும் பகுதியான இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பி பல இந்திய வீரர்களின் மரணத்தை தடுத்து இலங்கையில் அமைதி நிலவ இந்தியா வழி வகை செய்தது.

இலங்கை-இந்தியா ஒப்பந்தப்படி இலங்கையின் வடக்குப் பகுதியில் வரதராஜ பெருமாளி தலைமையில் மாகாண அரசு செயல்பட்டு வருகிறது. இலங்கையின் வடக்கு, தெற்கு பகுதிகளை இணைப்பதாக சொல்லி தமிழர்கள் வாழும் பகுதியான இலங்கையின் கிழக்குப் பகுதியில் சம அளவு சிங்களர்களை குடி அமர்த்துவது கண்டு தமிழர் இயக்கம் இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து வருகிறார்கள்.

## பஞ்சாப் பிரச்சனை

சீக்கியவர்கள் தாங்கள் இந்துக்கள் அல்ல. முஸ்லீம்கள் எப்படி மேற்குப் பாகிஸ்தான், கிழக்குப் பாகிஸ்தான் என்று பிரிந்து போனார்களோ அதே போன்று தங்களுக்கும் தனி நாடு காலிஸ்தான் வேண்டி நாட்டின் பல பகுதிகளில் போராடி வருகிறார்கள்.

இந்து மதச் சட்டம் சீக்சியர்களை கட்டுப்படுத்தாது. சீக்கியர்கள் குடுமி, தாடி வைத்துக் கொள்ளவும், தலைப்பாகை அணிந்து கொள்ளவும், கையில் உறைவாள், கத்தி வைத்துக்கொள்ளவும், சீக்கிய மதச் சட்டத்தில் உரிமை இருக்கிறது. அதை இந்திய அரசியல் சட்டமும் அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்திய அரசியல் சாசனம் Article 25-ல் மத இன, மொழி, பிறப்பால் இந்தியாவில் உள்ள எவருக்கும் பாகுபாடு காட்டக் கூடாது. அனைவரும் இந்தியரே என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதையே சீக்கிய மதத்தின் நிறுவனர் குருநானக் என்பவர் ஒரே மண்ணால் செய்யப்பட்ட இரண்டு பானைகள் இந்துக்களும், சீக்கியர்களும் என்கிறார். ஆனால் இதை ஏற்க மறுக்கிறார்கள் சீக்கியர்கள். இதில் பிந்தரன்வாலே லோங்கோவல், சுர்சித்சிங் பர்னாலா மற்றும் இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட "அகாலித்தளம்" என்ற ஒரு கட்சியை ஆரம்பித்தார்கள். இந்தக் கட்சி சீக்கியர்களின் நலனுக்காக ஏற்படுத்தப் பட்ட கட்சியாகும். இதிலிருந்து பிந்தரன்வாலே பெரும்பான்மையான ஆதரவாளர்களுடன் அகாலி தளத்திலிருந்து வெளியேறி காலிஸ்தான் கட்சி சீக்கியர்களுக்காக தனிநாடு என்ற கொள்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

இவர்கள் இந்துக்களை சுட்டுத் தள்ளுவதும், அவர்களின் உடமைகளை கொள்ளை அடிப்பதும், குடியிருப்புகளுக்குத் தீயிட்டு அழிப்பதும், ரயில் மற்றும் பொது நிறுவனங்களுக்கு வெடிகுண்டு வைப்பதும், வங்கி போன்றவற்றில் கொள்ளை அடிப்பதும், அண்டை மாநிலமான

அரியானுவில் சில பகுதிகளில் உரிமை கொண்டாடவதும் போன்ற அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து இவர்களுக்கு தனிநாடு கொடுத்தால் நாட்டில் உள்ள இதர மாநிலங்களுக்கும் அவரவர் பண்பாட்டுக்கு ஏற்ற வகையில் தனிநாடு வழங்க வேண்டி வரும். இதனுல் இந்தியா பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு மீண்டும் அன்னியர்களுக்கு அடிமையாக வேண்டி வரும் என்று இந்தியா அஞ்சுகிறது. சீக்கியர்களின் தீவிரவாதம் அடக்கப்பட்டு வருகிறது. இந்திராகாந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு (தனி நாடு கோரி சிறையில் வைக்கப்பட்டு இருந்த அகாலி தளத்தின் தலைவர் "அதீந்தர் பால்சிங்" தற்போது சிறையில் இருந்தவாரே பாராளுமன்ற தேர்தலின் நின்று 2 லட்சத்திற்கு மேல் வாக்குகள் பெற்று அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். எனவே இவர் மேல் இருந்த வழக்கு வாபஸ் செய்யப்பட்டுள்ளது.

## இந்து-முஸ்லீம் கலகம்

இந்திய நாடு பல மதத்தைக் கொண்ட பல மொழிப் பேசும் பல ஜாதிகளை கொண்ட நாடாய் இருந்தும், அவர்களிடையே ஒருமைப்பாடு காணப்பட்டு, அவர்களுடைய ஒற்றுமையின் விளைவாக அன்னியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நம் தாய் நாட்டை நாமே சர்வ சுதந்திரமாக ஆள்வதற்கு பல்வேறு போராட்டத்திற்கு பிறகும், பல நூறுயிரம் உயிர்களை பலியிட்டு பின் அன்னியர்கள் வசம் இருந்த நம் தாய் நாட்டை அடிமை விலங்கென்னும் தடையை தகர்த்து எறிந்து நாம் சுதந்திர இந்தியாவை பெற்றிருக்கிறேம். ஆனால் அப்படிப்பட்ட இந்திய திருநாட்டிற்கு இப்போது மதத்தின் பெயரால் பிரிவினை வாதம் இந்து-முஸ்லீம் என்ற ஒரு பெரிய மதக் கலவரம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கலவரம் முதலில் நகரங்களில் மட்டுமே தோன்றியது. அதுவே இப்போது கிராமப் புறங்களில் ஒன்றும் தெரியாத அப்பாவி மக்களிடையேயும் பரவி நாட்டையே சீர்குலைய வைக்கும் நிலையில் ஒருசிலர் தங்கள் அரசியல் ஆதாயத்தோடு நாட்டை துண்டு போட இந்தச் சதியில் இறங்கியிருக்கிறார்கள். இதன் முதல் துவக்கமே " ராம ஜென்ம பூமி" .

## ராம ஜென்ம பூமி

ராம ஜென்ம பூமி என்பது ஸ்ரீராமபிரான் பிறந்த இடமான அயோத்தி மாநகரம் என்பது. இங்கு மொகலாயர் சாம்ராஜ்ய காலத்தில் இந்துக்களுக்காக நிறுவப்பட்ட கோயில்கள் எல்லாம் மொகலாயர்களால் தகர்க்கப்பட்டு அந்த இடத்தில் முஸ்லீம்களுக்கான மசூதிகள் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. அந்த நேரத்தில் தான் ராமர் பிறந்த இடமான அயோத்தியில் பாபர் மசூதி அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது இந்து மதத் தலைவர்கள், R.S.S. இயக்கம் என்று கூட சொல்லலாம், சரித்திர வாயிலாக ராமர் பிறந்த இடமான அயோத்தியில் பாபர் மசூதி அங்கே தேவையில்லை. அந்த இடத்தில் ஸ்ரீராமபிரானுக்கு பெரிய கோயில் அதாவது திருத்தலம் ஒன்று அமைக்க வேண்டும் என்று இந்துமதத் தலைவர்கள் போராடி வருகிறார்கள். இதற்கு முஸ்லீம் தலைவர்கள் தங்களுடைய மசூதியை அந்த இடத்திலிருந்து அகற்ற கூடாது. அரசியல் சாசனத்தில் மற்ற மதத்திலிருந்து என்ன உரிமை இருக்கின்றதோ அதே உரிமை எங்களுக்கும் இருக்கிறது என்று முஸ்லீம்களின் தலைவர் தலைமையில் அவர்கள் ஒரு பக்கம் போராடி வருகின்றார்கள். இந்த இரு மத பிரச்சனைகள் சம்பந்தமாக வழக்கு ஒன்று நாட்டின் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது.

உச்ச நீதிமன்றமானது இந்திய அரசியல் சாசனத்தின் விதியின்படி பாபர் மசூதியை அகற்ற தேவையில்லை. அதன் அருகில் உள்ள இடத்தில் மேற்படி மசூதியை பாதிக்காத வகையில் ஸ்ரீராமராமருக்கு திருக்கோயில் கட்டும்படி தன் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அதன்படியே 1989-ஆம் ஆண்டு நவம்பர் 9-ந்தேதி அயோத்தி மாநகரில் நாட்டின் பல பகுதிகளில் இருந்து கல் கொண்டுவந்து ராமர் கோயிலுக்கென இந்து மதத்தலைவர்கள் முன்னிலையில் எந்தவித கலவரமும் இன்றி அமைதியான முறையில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்திய பிரஜை என்ற முறையில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இந்திய மக்களாகிய நாம் அனைவரும் ஒரே மண்ணில் செய்யப்பட்ட பலவகையான மண்பானைகளே. ஆகவே நாம் யாரும் எவர்பாலும் பாகுபாடு காண்பிக்கக் கூடாது.

## 2. அரசியல் கட்சிகளும் அதன் கொள்கைகளும் (Political and communal parties and their ideologies)

இந்திய நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் பின்வருமாறு:

1. **இந்திரா காங்கிரஸ் :** இதன் தலைவராக விளங்குபவர் திருமதி சோனியா காந்தி
2. **ஜனதாதள் கட்சி:** இதன் தலைவராக இருப்பவர் திரு. V.P. சிங்
3. **காங்கிரஸ் (S) :** இதன் தலைவர்
4. **பாரதிய ஜனதா கட்சி:** இதன் தலைவர்
5. **தெலுங்கு தேசம் :** இதன் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடு
6. **தி.மு.க. :** இதன் தலைவர் டாக்டர். மு. கருணாநிதி ஆவார்.
7. **C.P.M. :** இதன் தலைவகர் திரு பிரகாஷ் காரத்
8. **C.P.I. :** இதன் தலைவர் திரு. இந்தரஜித் குப்தா (Indrajit Gupta)
9. **அ.இ.அ.தி.மு.க:** இதன் தலைவர் செல்வி. ஜெயலலிதா,
10. **இந்திய முஸ்லீம் லீக் :** இதன் தலைவர்கள் 1) சுலைமான் சேட் 2) பெனுத்து வாலா ஆவார்கள்
11. **அஸ்ஸாம் கனபரிஷத் :** இதன் தலைவர் திரு. மொகன்தா ஆவார்.
12. **தேசிய முன்னணி:** இதன் தலைவராக இருப்பவர் திரு. N.T. ராமாராவ் ஆவார். திரு.வி.பி.சி இதன் அமைப்பாளர் ஆவார். இதனுடன் இணைந்து செயல்படும் கட்சிகளாவன.

1. **ஜனதாதள் :** திரு S.R. பொம்மை (தலைவர்)
2. **தி.மு.க. :** திரு.மு. கருணாநிதி (தலைவர்)
3. **தெலுங்கு தேசம் :** திரு. N.T. ராமாராவ் (தலைவர்)
4. **காங்கிரஸ் (S) :** திரு.உன்னி கிருஷ்ணன் (தலைவர்)
5. **அஸ்ஸாம் கனபரிஷத் :** திரு. மொகன்தா (தலைவர்)
6. **C.P.M. :** திரு E.M.S. நம்பூதிரிபாட்
7. **C.P.I. :** திரு இந்திரஜித் குப்தா

## உ. (1) காவல் துறையில் சிவில் (**Local**) காவலர்களின் பங்கு (Role and functions of the civil police)

**காவல் துறையில் காவலர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது,**

சீரிய ஒழுக்கம், கீழ்படிதல், நல்ல பண்பாடு, சகிப்புத்தன்மை, பொது மக்களிடம் இன்முகத்துடன் பழகுவது, தன்னுடைய பணியின் நேர்மை, தன்னுடைய பணியில் பாரபட்சமின்றி, ஏற்றதாழ்வு பாராமல் செவ்வனே செய்தல், உயர் அதிகாரிகளிடம் விசுவாசமாகவும் தான் சார்ந்திருக்கின்ற காவல் துறைக்கு பெருமை தேடித் தரும்படி நடந்துகொள்ளுதல்.

**“பணியில் நேர்மை**
**பழக இனிமை**
**இதுவே காவல் துறைக்குப் பெருமை”**

## (2) காவலர்கள் ஒரு காவல் நிலையத்தில் செய்யும் பணிகள் (Role of the constables)

நிலைய பாரா காவலர், நிலைய எழுத்தர், நீதி மன்ற அலுவல், சம்மன் சார்வு செய்தல், பகல் ரோந்து, இரவு ரோந்து பணி செய்வது, பந்தோபஸ்த் பணியில் ஈடுபடுவது, பிக்கட் டூட்டி, பணத்திற்கு பாதுகாப்பு(Cash Escort) செல்லுதல், குற்றவாளிகளுக்கு பாதுகாப்பாக சென்று அவர்களை நீதிமன்றத்திலோ சிறைச்சாலையிலோ கொண்டு செல்லுதல், சட்டம் ஒழுங்குப் பணியில் ஈடுபடுவது போன்ற வேலைகளை செய்தல் காவலர்களின் பங்கு.

### நிலைய பாரா காவல் அலுவல் :

ஒவ்வொரு நாளும் ஒரு காவலரை காவல் நிலைய பாரா காவலராக காலை 7 மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை நியமிப்பது வழக்கம். அவ்வாறு அந்தக் காவலரை நியமிக்கப்படும்போது அவர் முன் பாரா காவலரிடம் காவல் நிலையத்தில் முக்கியமாக என்னென்ன கவனிக்க வேண்டியவை என்று கேட்பதுடன் முதலில் காவல் நிலையத்தில் உள்ள ஆண் கைதிகளின் காவல் அறை, பெண் கைதிகளின் காவல் அறையை முதலில் கவனித்து அதில் கைதிகள் இருக்கின்றார்களா? இல்லையா? என்று கவனிப்பதுடன், அப்படி கைதிகள் இருந்தால் அவரின் பெயர், ஊர், விலாசம் தெரிந்து கொள்வதுடன் அவர் எந்தக் குற்றத்திற்காக யாரால், எப்பொழுது, எந்த இடத்தில் கைது செய்யப்பட்டுள்ளார், அவரை காலைக் கடன் முடித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளாரா, காலை உணவு கொடுக்கப்பட்டுள்ளதா, என்று விசாரித்த பிறகு மீண்டும் ஒரு முறை கைதியின் தலைமுடியிலும், வாயில் உள்பக்க தாடையின் இடையில் பிளேடு போன்ற ஆயுதங்கள் வைத்திருக்கின்றானா, என்று சோதனை செய்ய வேண்டும். பின்பு காவல் நிலையத்தில் உள்ள அரசாங்க சொத்துக்களான துப்பாக்கிகளைக் கணக்கு எடுத்து கணக்கில் உள்ளபடி அதனுடைய பாகங்கள், மெகசின், போல்ட், பைனட்

போன்றவை சரியாக இருக்கின்றதா, இதர பொருட்கள் உடையாமல் இருக்கின்றனவா, துப்பாக்கியின் தோட்டக்களும், ரிக்கார்டுகளும், பெட்ரமாஸ் லைட், ரோப், ஷில்டு, ஹெல்மெட், டார்ச் லைட் இவைகள் சரியாக இருக்கின்றனவா, மேஜை, நாற்காலி, மற்றும் காவல் நிலைய மோட்டார் சைக்கிள்கள் சுத்தம் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று சரி பார்த்தப்பின் பாராவை ஒப்புக்கொள்ள வேண்டும்.

பின்பு தன் அலுவலின் போது புதிதாக ஒரு கைதியை நிலையத்திற்கு கொண்டு வந்தால் அவனை நன்றாக பரிசோதனை செய்து அவனிடம் ஆயுதங்கள் இருந்தால் அதை கைப்பற்றிய பின் நிலைய பாரா புத்தகத்தில் கைதியின் பெயர், ஊர் மற்றும் விலாசம், செய்த குற்றம், யாரால் எப்போது எங்கு கைது செய்யப்பட்டார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டதும் அவரை Station Lock-up-ல் வைத்த நேரம், தேதியை பாரா Relief புத்தகத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

மேற்படி குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும்போது, நிலைய பாரா ரிலீப் புத்தகத்தில் அவனை கோர்ட்டிற்கு அனுப்பித்த தேதி, மணியும் உடன் சென்ற காவலர்களின் பெயரும், நம்பரும் எழுதி அந்தக் காவலர்களின் கையொப்பம் வாங்க வேண்டும். பின்பு காவல் நிலையத்திற்கு பொது மக்கள் யாது வேண்டி வந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்கள் யார், எங்கிருந்து வருகிறுர்கள் என்ன காரணத்திற்காக யாரைப் பார்க்க வந்திருக்கிறுர்கள் என்று விசாரித்து, பின்பு காவல் நிலைய அதிகாரியிடமோ நிலைய தலைமை காவலரிடமோ அனுப்பி வைக்க வேண்டும். மறுநாள் காலை 7 00 மணிக்கு அடுத்த காவலரிடம் பாராவை ஒப்படைக்கும் போது அரசாங்க சொத்துக்கள் அனைத்தும் சுத்தம் செய்த பின்பும், தான் எவ்வாறு ஒப்புக் கொண்டாரோ அவ்வாறே அந்தக் காவலரிடம் பாராவை ஒப்படைக்க வேண்டும்.

### நிலைய இருப்புக் காவலர் (Waiting)

நிலைய இருப்புக் காவலர் என்பவர் காவல் நிலையத்தில் அப்போதைக்கப்போது வரும் பிராதுகளுக்கான பிரதிவாதிகளை போய் அழைத்து வருதல் அடிபட்டு காயத்துடனே, காயமின்றியோ அவர்கள் வேண்டிக் கொண்டாலும் வேண்டா விட்டாலும் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் அப்படி அழைத்துச் செல்லும்போது Requisition யையும் உடன் கொண்டு செல்ல வேண்டும். மருத்துவம் செய்து அதற்கான சான்றிதழ் வேண்டிய நமூனவை உடன் எடுத்துச் சென்று மேற்படி நபர்களுக்கு சிகிச்சை முடிந்தபின் மருத்துவர் கொடுக்கும் (Wound Certificate) சான்றிதழ் மறக்காமல் வாங்கிவந்து காவல் நிலையத்தில் நிலைய அதிகாரியிடம் சேர்ப்பது, பாரா காவலரை சாப்பாட்டுக்கு மாற்றி அனுப்புவது, பாரா காவலருக்கு உதவியாக இருப்பது, தபால் எடுத்துச் சென்று மறு தபால் கொண்டு வருதல் போன்ற இதர வேலைகளையும் செய்வது.

### ரோந்துப் பணி காவலர்கள்

குறைந்த பட்சம் 2 காவலர்களை பகல் ரோந்து பணிக்காக அந்தக் காவல் நிலைய சரகத்திற்கு நியமிக்கப்படுவார்கள். அவ்வாறு செல்லும் காவலர்களிடம் பீட் டிக்கட் என்ற புத்தகம் கொடுத்து அதில் ரோந்து செய்ய ஆரம்பித்த நேரம், மற்றும் எந்தெந்த இடத்தில் எவ்வளவு நேரம் ரோந்து செய்ய வேண்டும். அப்படி ரோந்து செய்யும் போது என்னென்ன கவனிக்க வேண்டும். எத்தனை மணிக்கு நிலையம் திரும்ப வேண்டும் என்று அந்தப்

புத்தக்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். மேற்படி காவலர்கள் அந்த பீட் டிக்கெட்டில் கண்டுள்ளபடி ரோந்து செய்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பட்டா புக் தாரர் இருப்பார். அவரிடம் சென்று தான் வைத்திருக்கும் பீட் டிக்கெட்டில் கையொப்பம் பெற்றும், பின்பு பட்டா புக் தாரரிடம் உள்ள பட்டா புத்தகத்தில் கையொப்பமிட்டும் அப்படி கையொப்பமிடும் போது காவலரின் பெயர்கள் மற்றும் நெம்பர், தேதி, மணி கண்டிப்பாக குறிப்பிட்ட பின் கையொப்பம் போட வேண்டும். அதே போல் பீட் டிக்கெட்டில் பட்டா புக்தாரரிடம் கையொப்பம் பெறும்போது, பட்டா புத்தகத்தின் (Volume No.) பக்க எண், வரிசை எண் முதலியவை பீட் புத்தகத்தில் குறிப்பிட வேண்டும்.

ரோந்து காவலர்கள் ரோந்து செய்யும் சமயங்களில் அந்தக் கிராமத்தில் பாதையில், சாலையில், சந்துகளில், சுமைதாங்கி இடத்தில் பஸ் முதலியவை நிற்கும் இடத்தில், படகுத் துறை போன்ற இடங்களில் அந்தக் கிராமத்திற்கு அல்லது ஊருக்கு, புதியவனுகவோ, தெரியாதவனுகவோ யாராகிலும் சந்தேகப்படும்படியான சூழ்நிலையில் திரிந்து கொண்டு இருந்தால் அவனை விசாரிப்பதுடன் போலி சாமியார், போலி பிச்சைக்காரர் போன்றவர்களை விசாரித்து துப்பு துலக்கியும், ஊர் முக்கியஸ்தர்களிடம் ஊரின் அல்லது கிராமத்தின் நூதனம் தெரிந்தும் தங்கள் காவல் நிலைய சரகத்தில் களவு போன பொருட்களைப் பற்றியும் இயற்கைக்கு மாறன மரணத்தைப் பற்றியும் ஒரு நபரின் திடீரென மறைவு பற்றியும் புலன் அறிந்தும் புலன் சேகரித்தும், பழைய குற்றவாளி (K.D) முன் தண்டனை குற்றவாளி (Ex-Convict ) ஜில்லா விட்டு ஜில்லா சென்று திருடி வழிப்பறி செய்பவரைப்பற்றியும் (D.C) ரவுடிகளையும் தணிக்கை செய்து அவர்கள் யார் யார் எங்கெங்கு என்ன வேலை செய்கிறுர்கள். அவர்களின் நடமாட்டம் அறிந்தும், அவர்கள் தலைமறைவாய் இருந்தால் அதைப்பற்றியும் தகவல் சேகரித்தும் தன் நிலையத்தில் களவு போன சொத்து அல்லது ஏதாவது ஒரு திருட்டு சொத்து ஒரு இடத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் தெரிந்தால் அதைப் பற்றியும் ஒரு இடத்தில் ஒரு பெண்ணை விருப்பத்திற்கு மாறுக அடைத்து வைத்திருந்தால் அதைப்பற்றியும் நிலையத்தில் கொண்டு வந்து நிலைய அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும். தன்னுடைய ரோந்துப் பணியில் வழக்கத்திற்கு மாறுக புதிய முறையில் நடமாடிய நபரோ, போலியான பிச்சைக்காரன் இவர்கள் கிடைத்தால் அவர்களை நிலையம் கொண்டு வந்து மேல் நடவடிக்கைக்காக ஆஜர் படுத்த வேண்டும். பகல் ரோந்து நேரங்களில் யாராவது பொது ஜன தொல்லை (Public nuisance) கொடுக்கும் வகையில் நடந்து கொண்டால் அவர்களைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். வழக்கமாக குறைந்த பட்சம் 2 காவலர்கள் பகல் ரோந்துப் பணிக்கு அமர்த்தப்படுவார்கள்.

## இரவு ரோந்து (Night beat)

இரவு ரோந்துப் பணிக்கு குறைந்த பட்சம் 2 காவலர்கள் இரவு 10 00 மணி முதல் காலை 5.30 மணி வரை நியமிக்கப்படுவார்கள். காவலர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பீட் டிக்கட்டில் கண்டுள்ளபடி காலம் தவறுது இரவு ரோந்து செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது அரசுக்குச் சொந்தமான கஜானு, வங்கி, கருவூலம், தொழிற்சாலை, தனியாருக்குச் சொந்தமான சொத்துக்கள் இவற்றில் கவனம் செலுத்தி யாராவது சந்தேகப்படும்படியான சூழ்நிலையில் காணப்பட்டாலோ, ஓடினுலோ, மறைந்தாலோ அப்படிப்பட்ட நபர்களை கைது செய்தும், அவர்கள் ஏதாவது ஆயுதம் வைத்திருக்கிறுர்களா? என்று சோதனை செய்து இருந்தால் கைப்பற்றி அவரிடம் இருக்கும் சொத்து திருட்டுச் சொத்தாக இருக்கலாம் என்று சந்தேகித்தால் அவற்றையும் கைப்பற்றலாம். அந்த கிராமத்தின் அல்லது ஊரில் உள்ள கெட்ட நடத்தை உள்ள (Ex-convict) K.D./ DC, பழைய குற்றவாளி போன்றவர்கள் அவரவர் வீட்டில் இருக்கின்றுர்களா என்று கண்காணித்தும், பொது ஜன உறக்கத்திற்கு எந்தவித குந்தகமும்

இன்றி இரவு ரோந்து செய்தும், பீட் புத்தகத்தில் பட்டா புக்தாரரிடம் கையொப்பம் பெற்றும் பட்டா புக்கில் கையொப்பம் இட்டும் நிலையம் திரும்ப வேண்டும்.

### அழைப்பாணை அலுவல் (Summon duty)

அழைப்பு ஆணையை சார்பு செய்ய நியமிக்கப்பட்ட காவலர் உரிய நபருக்கு அதாவது சம்மனில் கண்டுள்ள (சாட்சி) அல்லது குற்றவாளி நபருக்கு அழைப்பு ஆணையை சார்பு செய்யும் போது உரியவரிடம் வழக்கின் விவரத்தையும் எந்தத் தேதியில் எந்த நீதிமன்றத்தில் எந்த ஊரில் ஆஜராக வேண்டும் என்ற விவரத்தை தெரிவீத்து அழைப்பு ஆணையின் முதல் பகுதியை (Original) கொடுத்து, நகலில் (Duplicate) யாருக்கு சார்பு செய்யப்படுகிறதோ அவருடைய கையொப்பத்தை பெற்றும், கைவிரல் ரேகை இருப்பவராய் இருந்தால் அவ்வாறு இடது கை கட்டை விரல் ரேகை பெற்றும் திரும்ப வேண்டும்.

### பிடி ஆணை நிறைவேற்றுதல் (Warrant)

பிடி ஆணை நிறைவேற்ற செல்லும்போது குற்றத்தை அல்லது கைது செய்யப்படும் நபரைப் பொறுத்து காவலர்கள் ஒன்று அல்லது இரண்டு பேர் அனுப்பப்படுவார்கள். அவ்வாறு செல்லும் காவலர்கள் உரிய நபரிடம் பிடி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தைப் பற்றி விளக்கிச் சொல்லிப் பின்பு அந்த நபரை நிலையம் கொண்டு வந்து அனுவசிய கால தாமதமின்றி நீதி மன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும். இவ்வாறு பிடி ஆணையை (Warrant execute) நிறைவேற்றும் போது மனிதாபிமானத்தோடு சிவில் உரிமை பாதிக்காவண்ணம் நடந்து கொள்ள வேண்டும்.

### நீதிமன்ற அலுவல் (Court Duty)

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு காவலரை நீதிமன்ற அலுவலுக்காக நியமிக்கப்படுவார். அந்தக் காவலர் தினமும் நீதி மன்றத்தால் தம் காவல் நிலையத்தின் சம்பந்தப்பட்ட வழக்குகள் என்னென்ன (Trial) விசாரணைக்கு வருகின்றதோ அந்த வழக்குகளின் மொத்த எண்ணிக்கை அவைகளுக்கான அழைப்பாணை (Summon) சம்பந்தப்பட்ட சாட்சிகளுக்கு (அல்லது) குற்றவாளிகளுக்கு சார்பு செய்யப்பட்டனவா, வாரண்ட் (பிடியாணை) ஏதேனும் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்பு சாட்சிகளை ஒரு மணி நேரத்திற்கு முன்பாக அழைத்து அன்றைய தினம் வரும் வழக்கைப் பற்றி அவர்களுக்கு பிரதிவாதியின் (குற்றவாளியின்) வாதுரைஞ்ஞர் (Defence Lawyer) எப்படியெல்லாம் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வார்கள். அதற்கு தகுந்தாற்போல் சாட்சிகளுக்கு வழக்கைப்பற்றி சில முக்கிய கருத்துக்களை சொல்லித் தந்து நீதி மன்றத்திற்கு அழைத்து செல்ல வேண்டும். நீதி மன்றத்தில் சாட்சிகளை அதிக நேரம் காக்க வைக்காமல் கால தாமதமின்றி அவர்களை விசாரிக்க காவலரின் சொந்த முயற்சியால் பெஞ்ச் கிளார்க்கிடம் சொல்லி வழக்கை முன்னதாக விசாரிக்க வைக்க வேண்டும். நீதி மன்ற விசாரனைக்குப் பின்பு சாட்சிகளுக்கான படித்தொகையை அருகில் இருந்து வாங்கித் தந்து அவர்களின் இல்லத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கோர்ட்டில் வழங்கப்படும் புது அழைப்பாணையை காவல் நிலையத்தில் சேர்ப்பிப்பதும், நிறைவேற்றப்பட்ட பிடி ஆணையை சார்பு செய்யப்பட்ட சம்மனை கோர்ட்டில் சேர்ப்பிப்பதும் காவலரின் கடமையாகும். நீதி மன்றத்தின் அன்றுட அலுவல் பற்றிய குறிப்புகளை நிலைய அதிகாரியிடம் நாள் தவறுமல் தெரிவிப்பதும் காவலரின் கடமையாகும். நீதி மன்றம்

துவங்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே அன்றைய தினம் வரும் வழக்கைப் பற்றி (Assistant Public Prosecutor) அரசு தரப்பு துணை நிலை வாதுரைஞ்ஞரிடம் தெரிவிக்க வேண்டும். அவரிடம் நல்ல உறவு முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

## மறியல் அலுவல் (Picket duty)

2 அல்லது 4-க்கும் மேற்பட்ட காவலர்களை சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏற்பட்டுள்ள இடங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டி ஒரு குறிப்பிட்ட இடத்தில் காவலர்களை நியமித்து அவர்கள் அந்தப் பகுதியில் அமைதி திரும்பும் வரை அந்த இடத்திலேயே இருந்து எந்த வித அசம்பாவிதமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## பாதுகாப்பு பணிகள் (Bandobust duty)

பந்தோபஸ்த் அலுவலை கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படும். V.I.P. க்கும் V.V.I.P. –க்கும் அளிக்கப்படும் Route பந்தோபஸ்த் டூட்டி, கோவில் திருவிழா பந்தோபஸ்த் டூட்டி, கூட்டம், சொற்பொழிவுக்கு பந்தோபஸ்த், சினிமா கொட்டகைக்கு பந்தோபஸ்த் டூட்டி, ஊர்வல பந்தோபஸ்த் டூட்டி முதலியன ஆகும். (V.I.P மற்றும் V.V.I.P) மிக முக்கியமான மிக மிக முக்கியமான நபர்களுக்கு சாலை நெடுகிலும் பாதுகாப்புக்காக காவலர்களை ஈடுபடுத்தப்படும்போது ஒவ்வொரு காவலரும் தான் ஒரு எஜமானர்கள், பொது மக்கள் எல்லாம் வேலை ஆட்கள் என்று தனக்குள் கர்வம் கொள்ளாமல் பொதுமக்களிடம் அவர்களை எந்த விதத்திலும் அவர்களது சிவில் உரிமை பாதுகாக்கும் வகையில் மரியாதை தரும் வார்த்தைகளால் பேசி , தான் கொண்டு செல்லும் லத்தியை தோளைவிட்டு கீழே இறக்காமலும் பொது மக்களை அல்லது கூட்டத்தை பார்த்த வண்ணமாக V.I.P. அல்லது V.V.I.P. செல்லும் பாதையில் எந்தவித இடைஞ்சல், தடங்கல் ஏற்படாமல் அலுவலை கவனிக்க வேண்டும். V.I.P. யை பார்த்தவாறு டூட்டி பார்க்க கூடாது. அவர்களுக்கு சல்யூட் வைப்பது பந்தோபஸ்த் டூட்டி ஆகாது. தான் பந்தோபஸ்த் டூட்டி பார்க்கும் இடங்களிலும், அக்கம் பக்கத்திலும், மாடி வீடு மற்றும் மரங்களிலும் ரௌடி, தீவிரவாதி போன்றவர்களால் ஒரு சிறிய இடையூறு, கல்லை தூக்கி எறிதல், ஏதாவது ஆயுதங்களுடன் காணப்படுகிறர்களா என்று கவனிக்க வேண்டும். அப்படி அங்கிருப்பவர்களில் யார் மீதாவது சந்தேகம் எழுந்தால் தானகவோ மற்ற காவலர்கள் துணை கொண்டோ அவர்களை அப்புறப்படுத்த வேண்டும். அல்லது அதிகாரிகளிடம் சேர்ப்பிக்க வேண்டும். மேற்படி V.I.P செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று விட்ட பிறகு தகுந்த அதிகாரிகளிடம் உத்தரவு பெற்றபின் தான் அவரவர் காவல் நிலையங்களுக்கு செல்ல வேண்டும்.

### கோவில் திருவிழா

பாதுகாப்பு பணியில் நெரிசல்களை சரி செய்தலும் பொது மக்கள் தாங்கள் அணிந்திருக்கும் நகைகள் மற்றும் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும்படி கூறுவதுடன் மேற்படி பொருட்களுக்கு காவலர்களும் பாதுகாப்பு கொடுப்பதுடன் அங்கு காணப்படும் நியாயமான சந்தேகப்படும்படியான சூழ்நிலையில் காணப்படும் நபர்களையும் அல்லது திருடர்களையும் பிடித்து அந்தப் பகுதியில் இருக்கும் சிறு காவல் கட்டுப்பாட்டு அறையில் அல்லது உரிய அதிகாரியிடம் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்க வேண்டும். பெண் திருடர்களாக இருந்தால் வேறொரு பெண் போலீசாரால் கைது செய்யப்பட வேண்டும்.

போலீசார்கள் தாங்கள் ஈடுபட்டிருக்கும் பணியில் "வேலியே பயிரை மேய்வது" போல் அல்லாமல் தான் சார்ந்து இருக்கும் துறைக்கு பெருமை தேடி தரும் வகையில் நேர்மையாக பணிபுரிந்து, காலி பையன்களாலும் குறும்புத்தனம் செய்பவர்களையும், பெண்களிடம் கேலி செய்பவர்களையும், பிக்பாக்கெட் அடிப்பவர்களையும் மேற்படி சிறு காவல் கட்டுப்பாட்டு அறை (அல்லது உரிய அதிகாரிகளிடம்) கொண்டுபோய் சேர்க்க வேண்டும். கோவில் திருவிழவிற்கு வந்திருக்கும் பக்தர்களிடம் அன்பாகவும் எல்லோரும் தன்னுடைய சகோதர சகோதரிகளாக பார்த்து நடக்க வேண்டும்.

### சொற்பொழிவு கூட்டம்

பொது இடங்களில் சொற்பொழிவுகளை கேட்பதற்காக கூடியிருக்கும் கூட்டத்தில் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாவகையில் அமைதியான முறையில் மேற்படி பொதுக் கூட்டம் நடைபெற காவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### ஊர்வல பாதுகாப்பு பணிகள்.

மத சம்பந்தமான அரசியல் மற்றும் இதர ஊர்வலங்களின் போது ஊர்வலத்தில் செல்பவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட பாதையிலும், பொது ஜனங்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு, தடங்கல் ஏற்படாமலும், சட்டப்படியான கூட்டம், சட்ட விரோதமான கூட்டமாக மாறாமலும் ஊர்வலத்தை ஒழுங்காக செல்லும்படி பணிவாக கேட்டுக் கொள்வதுடன் அவர்கள் ஒழுங்காக செல்லுகிறார்களா? என்று பாதுகாத்து செல்ல வேண்டும். மேற்படி ஊர்வலம் எங்கு போய் முடிகிறதோ அதுவரையில் சென்று முற்றிலும் கலைந்து சென்ற பின்பு காவலர்களும் அவரவர் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டும்.

### சாலைப் போக்குவரத்து அலுவல் (Traffic duty)

சாலை போக்குவரத்து அலுவலில் ஈடுபட்டிருக்கும் காவலர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலோ அதன் அருகிலோ ஏதாவது விபத்து ஏற்பட்டு அதனால் சாலைப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் இருந்தால் உடனே அருகில் உள்ள தொலைபேசி மூலம் Traffic PS அல்லது Control room முதலிய இடத்திற்கு தொடர்பு கொண்டு, மேற்படி விபத்தைப் பற்றி தெரிவிக்க வேண்டும். உரிய அதிகாரிகள் விபத்து நடந்த இடத்திற்கு வரும் வரை, விபத்து நடந்த இடத்தில் எந்தவித தடயமும் கலையாமலும் (Scene disturbance) பார்த்துக் கொள்வதுடன் அனாவசியமான கூட்டம் கூடாமலும், போக்குவரத்துத் தடங்கள், இடைஞ்சல் ஏற்படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். தனக்கென நியமிக்கப்பட்டுள்ள இடத்தில் Signal பிரகாரம் டூட்டியை பார்த்து போக்குவரத்தைச் சரி செய்ய வேண்டும். No Parking-லும், Non-stopping-லும் வாகனங்களை நிறுத்தாமலும் ஒரு வழிப்பாதையிலும் வண்டி செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# II. HUMAN BEHAVIOUR
## மனிதரின் குணங்கள்

**(அ) 1. காவல் துறையினர் ஏன் மனிதரின் குணங்கள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்?**

1. குற்றவாளிகள் எப்படி குற்றவாளியாக ஆனுர்கள் என்பதைக் கண்டு பிடிக்கலாம்.
2. குற்றவாளிகள் யார், அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள், அவர்களை எப்படி விசாரிப்பது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.
3. சமுதாயத்தன் பல பகுதியினரின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயலாற்றலாம். மாணவர், விவசாயி, தொழிலாளர், தாழ்த்தப்பட்டவர், வாகனம் ஓட்டுபவர் ஆகியோர்
4. ஒரு கூட்டம் (Crowd) கலகக் கூட்டமாக (Mob) மாறும் போது என்ன நடக்கும் என்பதை உணர்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.
5. காவல் துறையினருடன் அன்றுடம் தொடர்பு கொள்பவர் சாட்சிகள், வழக்குக் கொடுக்க வருபவர். பெண்கள் பெரிய மனிதர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை அறிந்துகொண்டு திறம்படச் செயலாற்றலாம்.

## 2. தனி மனிதன் (Individual) கூட்டம் (Crowd) கலகக் கூட்டம் (Mob)

பல தனி மனிதர்களைக் கொண்டுதான் கூட்டம் உருவாகிறது. பின்பு அவர்கள் சட்டத்தை மீறும் போது கலகக் கூட்டமாக மாறுகிறது. தனி மனிதன் காவல் துறையைக் கண்டு பயப்படுவான். ஆனுல் கூட்டத்தில் இருக்கும்போது, தன்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது (anonymity) என்ற காரணத்தாலும், தன்னை யாராவது பிடித்தாலும் கூட்டத்தார் காப்பாற்றி விடுவார்கள் என்ற தைரியத்தாலும் துணிந்து சட்டத்தை மீறுவான். எப்பேர் பட்ட கோழையும், கூட்டத்தில் தைரியசாலியாகத் தோற்றமளிப்பான். கூட்டத்திற்கு எதையும் பொறுமையுடன் சிந்திக்க நேரம் கிடையாது. உண்மை செய்தியை விட வதந்திகள் (Rumours) சீக்கிரமாகப் பரவும் எந்த ஒரு மனிதனும் கூட்டத்தை உணர்ச்சிவசப்படுத்தி தவறுன செயலையும். சரி என்று நம்ப வைத்து செய்யச் சொல்ல முடியும். அது தலைவனைப் பொறுத்தது. கூட்டத்தினர் மிகவும் உணர்ச்சி வசப்படுவார்கள். நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக நம்ப வைத்து விட முடியும்.

இதைத் தான் கும்பல்மனப்பான்மை (Mob mentality) என்பார்கள் கூட்டத்தினரிடம் பேசுவதைவிட,அதன் தலைவர்களிடம் பேசுவது பயனைத் தரும்.

## 3. அமைதியான கூட்டமும் கலகக் கும்பலும் (Peaceful assembly and violent mob)

எல்லா கூட்டத்தையும் கலகக் கும்பலாக நினைக்க கூடாது. இருப்பினும் அமைதியான கூட்டம் கூட கலகக் கும்பலாக மாறக்கூடும். திருமண ஊர்வலம் இறுதி ஊர்வலம், திருவிழாக் கூட்டங்கள், கேளிக்கை பார்க்க வந்திருக்கும் கூட்டம் அமைதியான கூட்டம் ஆகும். ஒரு பிரிவினருக்கோ, அல்லது ஒரு அரசியல் கட்சிக்கோ, கூட்டம் போட, ஊர்வலம் போக அனுமதி வழங்கும்போது, யார் பொறுப்பான தலைவர் என்பதை முன்னரே தெரிந்துகொண்டு, கலகம் செய்ய முயலும் ஒரு சிலரை அப்புறப்படுத்திவிடுதல் நல்லது. அமைதியான கூட்டத்தில்

(Panic) ஏற்படும்போது அதை உடனே மாற்ற ஒலிபெருக்கி மூலம் உண்மையான நிலையை விளக்குதல் நல்லது. பெண்களும், குழந்தைகளும் உள்ள கூட்டத்தினருக்கு தனியே பாதுகாப்பு அளிக்க வேண்டும். இல்லையெனில் அவர்களை மிதித்து விடுவார்கள் (Stampede)

கலகக் கூட்டத்தினரிடம் பேசிப் பயன் இல்லை. தலைவர்களையும் கட்டுப்படுத்த முடியாது. கூட்டத்தைக் கலைப்பது என்று முடிவெடுத்த பின்பு நேரத்தை வீணக்காமல் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். வன்முறையோ, கொள்ளையோ, அரசாங்க உடமைக்கு ஆபத்தோ ஏற்பட்டால், துப்பாக்கியால் சுடுவதும் தவறு கிடையாது. வன்முறைக் கும்பல் காவல்துறையின் கடுமையான நடவடிக்கையில் சிதறி ஓடி விடும். அப்படி ஓடுவதற்கு வழிகள் விட்டு வைக்க வேண்டும்.

## (ஆ) பொது மக்களிடத்து காவல் துறையினர் கடைபிடிக்க வேண்டிய முறைகள்

## Police behaviour towards the public

### (அ) 1. காவல் துறையினர் கடைபிடிக்க வேண்டிய குணதிசயங்கள் மற்றும் 22 அம்ச குறிக்கோள்

**காவல் துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய குணதிசயங்கள்**

மக்கள் பணிக்காகத்தான் காவல் துறை இயங்குகிறது. ஆகவே இந்த குடியரசு நாட்டின் மக்கள் யாவரும் சமம், உயர்ந்தவர் தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை என வேற்றுமையின்றி எல்லோருக்கும் சேவை செய்ய வேண்டும். நோயாளி மருத்துவமனையை நாடுவது போல் பிரச்சனைகள் உள்ள மனிதன் காவல் துறையினரின் உதவியை நாடி வருவார்கள் என சொல்ல முடியாது. ஆயினும் நாம் எந்த நேரத்திலும் அவர்களுக்கு உதவி செய்ய காத்திருக்க வேண்டும். இதனல் தான் காவல் துறையைச் சேர்ந்தவாக்ள இரவு பகல் 24 மணி நேரமும் பணியில் இருப்பதாகவே கருதப்படுகின்றனர்.

காவல் துறையினர் எத்தகைய கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பற்றி 1906 –ஆம் ஆண்டு கூடிய காவல் துறை தலைவாக்ள மாநாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளது. அவை பின் வருமாறு

1. காவல் துறையினர் இந்திய அரசியல் சாசனத்துக்கு நம்பிக்கையும், பற்றும் உடையவர்களாக நடந்து கொள்வதுடன் குடி மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை மதித்து காக்க வேண்டும்.

2. காவல்துறை முக்கியமாக சட்டத்தை அமல்படுத்தும் ஒரு அமைப்பு, முறைப்படி இயற்றப்பட்ட சட்டத்தின் குறிக்கோள் பற்றியோ தேவை பற்றியோ கேள்வி எழுப்பக் கூடாது. அவர்கள் கூட்டத்தை உறுதியுடனும் பாரபட்சமின்றியும் அச்சமோ சலுகையோ காட்டாமலும் கெட்ட எண்ணமோ பழிவாங்கும் உணர்ச்சியோ இல்லாமலும் அமல் நடத்த வேண்டும்.

3. காவலர்கள் தங்கள் அதிகாரத்துக்கும் செயல் முறைகளுக்கும் உள்ள வரம்புகளை உணர்ந்து, மதித்து நடக்க வேண்டும். அவர்கள் நீதித்துறையின் செயல் முறைகளைப் பறித்துக்கொண்டோ அல்லது பறித்துக் கொள்வது போல் தோற்றமளிக்கும் வகையிலோ வழக்குகளின் மேல் நீதி செலுத்தக் கூடாது. அது மட்டுமின்றி அவர்கள் தனிப்பட்ட மனிதர்களைப் பழிவாங்கவோ குற்றவாளிகளைத் தண்டிக்கவோ கூடாது.

4. சட்டத்தை மதித்து நடக்கச் செய்வதிலும், அல்லது ஒழுங்கு முறையைப் பராமரிப்பதிலும் காவல் துறையினர் தூண்டுதல், அறிவுறுத்தல், எச்சரித்தல் ஆகிய முறைகளை கையாள வேண்டும். இவை எதுவும் பயன்படவில்லை என்றல் பலவந்தத்தை உபயோகிப்பதை தவிர்க்க முடியாதென்றல் தேவையான மிகக் குறைந்த அளவு பலவந்தம் மட்டுமே சூழ்நிலைக்கேற்ப உபயோகப்படுத்த வேண்டும்.

5. காவல் துறையினரின் திறமை, குற்றங்களும், ஒழுங்கின்மையும் நடவாதவாறு தடுப்பதேயாகும். அவர்களது திறமை இவை இரண்டும் அறவே நிகழதவாறு செய்வதன் மூலம் தான் வெளிப்படுமேயன்றி நடந்துவிட்டபின் நடவடிக்கை எடுப்பதிஞல் அல்ல.

6. காவல் துறையினர் தாங்கள் பொது மக்களைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை உணர வேண்டும். ஒரே ஒரு வேற்றுமை என்னவெனில், தாங்கள் பொது மக்களின் நலனுக்காக அவர்கள் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமைகளை முழு நேர ஊழியவர்களாக இருந்து செயலாற்ற நியமிக்கப்பட்டவர்கள் தான் என்பதேயாகும்.

7. காவல் துறையினர் தாங்கள் ஆற்றும் பணியை எந்த அளவுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெற முடியுமோ அந்தஅளவுக்குத்தான் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். காவலர் தங்கள் நன்நடத்தையாலும் நற்செய்கையாலும் பொது மக்களின் ஆதரவையும், மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றுத்தான் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். அவர்களை அந்த அளவுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுகிறர்களோ அந்த அளவுக்குத் தங்கள் பணிகளை செய்கையில் பலவந்தத்தையும், நிர்பந்தத்தையும் உபயோகப்படுத்தும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்க முடியும்.

8. காவல் துறையினர் எல்லா மக்களிடமும் அனுதாபத்துடனும் ஈடுபாட்டுடனும் நடந்து கொள்வதுடன் எப்போதும் அவர்கள் நலனை மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் எந்நேரமும் எந்த ஒரு தனி நபருக்கும் பணி புரியவும் நட்புறவு காட்டவும் தயாராக இருக்க வேண்டும். மேலும் பணக்காரன் அல்லது சமுதாயத்திலே உயர்ந்தவன் என்ற பாகுபாடின்றி தேவையான உதவிகளும் செய்ய வேண்டும்.

9. காவல் துறையினர் கடமைக்குப் பின்தான் தன் நலம் பற்றிச் சிந்திக்க வேண்டும். எந்த ஆபத்தான அல்லது ஆத்தரமூட்டக் கூடிய சூழ்நிலையிலும் அமைதியுடனும் நிதானத்துடனும் இருக்க வேண்டும்.

தன்னுயிரைத் தியாகம் செய்தாவது மற்றவர்களது உயிரைக் காப்பாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

10. காவலர் எப்பொழுதும் மரியாதையோடும், பண்பாட்டுடனும் காணப்பட வேண்டும். நம்பத்தகுந்தவர்களாயும் பற்று அற்றவர்களாயும் இருக்க வேண்டும். சுயமரியாதையும் தைரியமும் கொண்டிருக்க வேண்டும். மேலும் நல்நடத்தையுடன் மக்களின் நம்பிக்கையையும் பெற்றிருக்க வேண்டும்.

11. உயர்ந்த நேர்மைதான் காவல்துறையின் கவுரவத்திற்கு அடிப்படை. இதை உணர்ந்து காவல் துறையினர் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் மிகவும் தூய்மையோடும், தன்னடக்கத்தோடும் நடந்து கொள்ள வேண்டும். மேலும் தங்கள் தனி வாழ்க்கையிலும் அலுவல் முறையிலும் எண்ணத்தாலும் செயலாலும் உண்மையோடும் நேர்மையோடும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறிருந்தால் அவர்களை உயர்ந்த குடி மக்களென்று மக்கள் மதிப்பார்கள்.

12. நல்ல கட்டப்பாடு, கீழ்படிதல், நம்பிக்கை எப்பொழுதும் நல்ல பயிற்சியுடனும் தயார் நிலையிலும் இருத்தல், இவற்றின் மூலம்தான் காவல் துறையினர் நிர்வாகத்துக்கும் நாட்டுக்கும் அதிக பயன் உள்ளவர்களாக விளங்க முடியும் என்பதை உணர வேண்டும்.

காவல் துறையினர் தங்கள் கடினமான வேலைகளைப் புன்முறுவலுடன் செய்யப் பழக வேண்டும். அரசியல்வாதிகளின் நிர்பந்தங்களுக்குப் பணியக் கூடாது. அவ்வாறு பணிய நேர்ந்தால் அது அதிகார துஷ்பிரயோகத்துக்கு வழியாகும். இதனுல் நிலையற்ற தன்மையும் கால தாமதமும் ஏற்படும். காவலரை நிர்பந்தங்கள் மூலம் எப்படி வேண்டுமானாலும் வளைத்து விடலாம் என்ற சூழநிலை உருவானுல் பொது மக்கள் காவல் துறை மீதும் நிர்வாகத்தின் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கை தகர்ந்து விடும்.

## 2. காவலருக்கு வழிமுறைகளைப் பற்றிய தொகுப்பு :

காவலர் வழிமுறைகள் தொகுப்பு பற்றிய முக்கியமான அம்சங்களை கீழ் சொல்லப்பட்டபடி ஆராயலாம்.

### 1. தேசிய அரசியல் சட்ட திட்டங்களுக்கு உண்மையாக விசுவாசம் வைத்திருத்தல் :

இந்திய தேசிய அரசியல் சட்டதிட்டங்கள் மீது, காவலர்கள், உண்மையான விசுவாசம் வைத்திருத்தல் வேண்டும். குடிமக்களின் உரிமை, இந்திய தேசிய அரசியல் சட்ட திட்டங்களில் உத்திரவாதம் அளிக்கப்பட்டு குடிமக்களின் உரிமைகள் மதிக்கப்படவும், நிலைநிறுத்தப்படவும் வேண்டும்.

### 2. சட்டத்தை பாரபட்சமில்லாமல் நிறைவேற்றுதல் :

சட்டங்களை கண்டிப்பான முறையிலும், பராபட்சமில்லாமலும், பயம் அல்லது சலுகையில்லாமலும் விரோதம் அல்லது பழிவாங்கும் தன்மை இல்லாமலும் காவலர் செயல்படுத்த வேண்டும். ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின் அவசியம், தகுதியுடமை பற்றி காவலர் பிரச்சனை எழுப்பக் கூடாது.

## 3) அதிகாரங்களின் எல்லை :

தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பணிகளின் எல்லைகள் காவலர் தெரிந்து மதித்தல் வேண்டும். காவலர்கள் குற்றவாளிகளை முடிவு செய்து தண்டனை கொடுப்பதற்கு உட்கார வைக்கப்பட்டவர்கள் இல்லை என்று தெரிந்து கொள்ளுதல் வேண்டும். தண்டனை வழங்கும் பாகம் நீதித் துறைக்கு விடப்பட்டதாகும். ஆகையால் காவலர் எவரும் நீதித் துறைக்கு கொடுக்கப்பட்ட பணிகளை ஆக்கிரமித்து கொள்ளுதல் கூடாது.

## 4) குறைந்த அளவு தாக்குதலின் தத்துவம் :

சட்டம் ஒழுங்கு நிலை நாட்டுகையில், காவலர் சந்தர்ப்பத்திற்கு தேவைப்படுகின்ற அளவுக்கு குறைந்த அளவு தாக்குதலின் தத்துவத்தை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். முதலாவதாக அனுசரித்து போகும் முறை, புத்திமதி சொல்லுதல், எச்சரிக்கை விடுத்தல் போன்ற முறைகளை கையாளுதல் வேண்டும். தாக்குதல் செய்வது அவசியம் என்று நிலைமை வரும்போது சம்பவத்திற்கு தகுந்தாற்போல குறைந்த அளவு தாக்குதலை நடத்த வேண்டும்.

## 5) குற்றம், கலவரம் தடுத்தல் :

குற்றங்களையும், கலவரங்களையும் தடுப்பது காவலரின் முக்கிய பணியாகும், குற்றங்கள் நடவாமல் இருத்தலும், கலவரங்கள் நடை பெறுமல் இருத்தலும் காவலரின் திறமையை வெளிப்படுத்தும் என்பதை நாம் அறிய வேண்டும். குற்றங்கள் நடந்ததையும், கலவரங்களை அடக்குவதிலும் திறமையாக செயல்பட்டதைக் கொண்டு ஒருவருடைய திறமையை நிர்ணயிக்கிறுர்கள் என்பது தவறுன முடிவாகும். குற்றங்கள் நடவாமல் தடுப்பதுதான் முக்கியத்துவம், குற்றங்களை கண்டு பிடிப்பதில் அல்ல.

## 6) சீருடையில் உள்ள பிரஜைகள்:

பொது ஜனங்களில் தாங்களும் அங்கத்தினர் என்பதை காவலர்கள் உணர வேண்டும். ஒவ்வொரு காவலரும் சீருடை அணிந்த இந்திய பிரஜை என்றும், ஒவ்வொரு பிரஜையும் சீருடை அணியாத காவலர் என்றும் பொருத்தமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. காவலர் தன்னுடைய பணிகளில் முழு நேர அளவில் தன் கவனத்தை செலுத்துகிறுர்கள் என்றும் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும்.

## 7) பொது ஜன ஒத்தழைப்பின் அவசியம்:

தங்களுடைய திறமை பொது ஜனங்களின் ஒத்துழைப்பை மிகப் பெரிய அளவில் பெறுவதில் தான் தொங்கிக் கொண்டிருக்கிறது என்று காவலர் உணர வேண்டும். காவலர் தங்களுடைய ஒழுக்கங்கள், செயல்கள், பொது ஜன மரியாதை, நம்பிக்கை மற்றும் திருப்தி ஆகியவற்றல் தான் பொது ஜனங்களின் ஒத்துழைப்பைப் பெற முடியும்.

## 8) பொது ஜனங்களின் நலவழி:

காவலர் எப்பொழுதும் பொது ஜனங்களின் நன்மையைக் கருதி அனுதாபத்தோடும், அன்பு, மரியாதையுடனும் செயல்பட வேண்டும். காவலர் எப்பொழுதும் பொது ஜனங்களுக்கு ஏழை பணக்காரன் என்றும் அவர்களுடைய சமூக அந்தஸ்து பாராமல் உதவி செய்வதிலும் தொண்டு செய்வதிலும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

### 9) பணி முன்னுரிமை:

காவலர் எப்பொழுதும் தன்னுடைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நாட்டின் மற்றும் சமூதாயத்தின் நலனுக்காக, காவல் துறையின் எல்லா வரிசையில் உள்ளவர்களும் தங்களுடைய வாழ்க்கையை தியாகம் செய்ய தயாராக இருத்தல் வேண்டும்.

### 10) மரியாதையும் பண்பும்:

காவலர் எப்பொழுதும் மரியாதையுடனும், நல்ல பண்புடனும் இருத்தல் வேண்டும். அவர்கள் பெருந்தன்மை, தைரியம், பொது ஜனங்களின் நம்பிக்கையை பெறக்கூடிய தன்மைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

### 11) முதல் தர நேர்மை:

முதல் தர நேர்மையின் சீறிய நிலையை பெற்றிருத்தல் காவல் துறையின் கௌரவத்திற்கு அடிப்படை தத்துவமாகும். காவல் துறையின் எல்லா நிலை அதிகாரிகளும் தங்களுடைய சொந்த வாழ்க்கை மிகவும் சுத்தமானதாகவும், நேர்மையானதாகவும் களங்கமில்லாததாகவும் வைத்திருக்க வேண்டும். காவலர் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும், அரசாங்க வேலையிலும் உண்மை உள்ளவராகவும், நேர்மையானவராகவும் இருத்தல் அவசியம். காவலரின் ஒழுக்கம், நேர்மையான நடத்தையால் பொதுமக்கள் அவர்களை பின்பற்றி நடப்பதற்கு எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும்.

### 12) உயர்ந்த அடக்கம்:

சட்டத்திற்கு தகுந்தாற் போல் காவலர் உயர்ந்த அடக்கம் உள்ளவர்களாகவும், தம் பணிகளை உண்மையான முறையில் செயல்படுபவர்களாகவும், மேலதிகாரிகளின் சட்ட பூர்வமான ஆணைகளுக்கு கீழ்படிந்து நடப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். அடக்கமின்மை என்ற பதத்திற்கு காவல் துறையில் எந்த இடமும் கிடையாது.

### 12-அ) ஒற்றுமையின் தத்துவம், சகோதரத்துவம்:

மத சார்பின்மை என்ற தத்துவத்தில், காவலருக்கு மிக உயர்ந்த மதிப்பு இருத்தல் வேண்டும். பாரத மக்களிடத்தில் ஜாதி, மதம், மொழி, சமயம் பேதமின்றி நேர்மையான முயற்சிகள் மூலம் ஒற்றுமையின் தத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் மேம்படச் செய்வதில், தங்களுடைய சொந்த விருப்பு, வெறுப்புகளை துறந்து மேலெழும்ப வேண்டும், பெண்களின் கௌரவத்தை சீர்குலைக்கும் செயல்கள், சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினர், மற்றும் சிறுபான்மையான இனத்தினர்களுக்கு எதிரான செயல்களை கைவிட செய்தல் வேண்டும்.

### சட்டபூர்வமான – சட்டபுறம்பான உத்தரவு:

காவலர் நடத்தையின் சட்ட தொகுப்பு என்ற இந்த கட்டுரையின் குறிப்பு எண்.12-ல் மேலதிகாரிகளின் சட்ட பூர்வமான ஆணைகளுக்கு கீழ்படிதலைப் பற்றி சொல்லப்பட்டது. மேலதிகாரிகளின் சட்டத்திற்கு புறம்பான உத்தரவுகளை, காவலர் கீழ்படிய மறுக்க உரிமை உள்ளதா என்பது இப்போது எழும் கேள்வியாகும்.

## 3. பொது மக்களின் உரிமைகளும் காவல் துறையினரின் பொறுப்புகளும் -22 அம்ச குறிக்கோள்கள்:

1. சட்டத்தின் எல்லாக் குற்றங்களும், கைது செய்தற்குரியவை. கைது செய்தற்குரியதல்லாதவை என இருவகையாகப் பிரிக்கப்பட்டருக்கின்றன.
2. கொலை, கொள்ளை, திருட்டு, மோசடி, தீ வைத்தல், கலகம் கொடுந்துன்பம், சூதாட்டம், விபச்சாரம், மதுவகைக் குற்றங்கள், கள்ளக் கடத்தல், பதுக்கல், தீண்டாமை வகையறு கைது செய்தற்குரிய குற்றங்களாகும்.
3. அற்பத் துன்பம், குறும்புத் துன்பம், சிவில் விவகாரங்கள் வகையறு கைது செய்தற்குரியதல்லாத குற்றங்களாகும்.
4. எல்லா வகைக் குற்றங்களையும் தடுத்து பொது மக்களின் உயிர் உடமைகளைப் பாதுகாப்பது காவல் துறையினரின் தலையாயப் பொறுப்பாகும். கைது செய்வதன் மூலம் கைது செயதற்குரிய குற்றங்களைத் தடுப்பதற்கு காவல் துறையினருக்கு அதிகாரம் உண்டு.
5. வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பெறப்படும் எல்லா வகைக் குற்றம் பற்றிய தகவல்களையும் காவல் நிலையத்தார் பதிவு செய்ய வேண்டும்.
6. கைது செய்தற்குரிய குற்றங்களைத்தான் காவல் துறையினருக்கு விசாரணை செய்ய அதிகாரமுண்டு. நீதிபதி உத்தரவின்றி கைது செய்தற்குரியதல்லாத குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம் உண்டு.
7. கைது செய்தற்குரியதல்லாத குற்றத்தைப் பற்றி வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ தகவல் பெற்றல் அதன் சுருக்கத்தை நிலைய நாட் குறிப்பில் பதிவு செய்து, தகவல் கொடுப்போரை நிவாரணம் பெற நீதிமன்றத்திற்குச் செல்லும்படி காவல் நிலையத்தார் தெரிவிக்க வேண்டும்.
8. கைது செய்தற்குரிய குற்றம் பற்றிய தகவல் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ காவல் நிலையத்தில் கொடுக்கப்படலாம். வாய்மொழியாகக் கூறியதை எழுதிக் கொள்ள வேண்டும். இவ்வாறு எழுதிக்கொண்ட அல்லது எழுத்தில் பெற்ற தகவல் மீது கொடுப்பவருடைய கையொப்பம் பெறவேண்டும்.
9. கைது செய்தற்குரிய குற்றம் பற்றிய தகவலை முதல் தாக்கல் அறிக்கையில் பதிவு செய்து, அதன் பிரதியை உடனே தகவல் கொடுத்தவருக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும்.
10. மேற்கூறிய சட்ட விதிகள் நிலையத்தாரால் மீறப்பட்டால் மாவட்ட கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.
11. புலன் விசாரணைக்காக சாட்சிகள் நிலையத்திற்கு அழைக்கப்படலாம். ஆனல் பெண்களும் குழந்தைகளும் அவர்கள் இருப்பிடத்திலேயே விசாரிக்கப்பட வேண்டும்.
12. புலன் விசாரணைக்கு ஒரு பொருளோ, தஸ்தாவேஜோ தேவைப் பட்டால் நிலையப் பொறுப்பிலுள்ளவர் எழுத்து மூலம் அதை ஆஜர் செய்ய உத்திரவிட வேண்டும்.
13. காவல் துறையினர் தேக பரிசோதனையில் பொருள் கைப்பற்றினல் பரிசோதனையிட்டவருக்கு உடனே ரசீது வழங்க வேண்டும்.
14. காவல் துறையினர் எந்த இடத்தைச் சோதனையிட்டாலும் அந்த இடத்தின் பொறுப்பிலுள்ளவரை சோதனை நடக்கும் பொழுது இருக்க அனுமதி அளிப்பதுடன், சாட்சிகள் கையொப்பமிட்ட சோதனை ஜாபிதாவின் பிரதியை அவருக்கு வழங்க வேண்டும்.

15. கைது செய்தற்குரிய குற்றத்தில் சமபந்தபட்டவர், பிடி ஆணையின்றி காவல் துறையினரால் கைது செய்யப்படலாம். பிடி ஆணை பேரில் கைது செய்யப்பட்டவருக்கு பிடி ஆணையை காட்ட வேண்டும்.
16. கைது செய்யப்பட்டவருக்கு கைது செய்வதன் காரணங்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். ஜாமீனில் விடக்கூடிய குற்றங்களில் அதன் தன்மையை தெரிவித்து தகுந்த ஜாமீன் வந்தவுடன் கைது செய்யப்பட்டவரை விட்டுவிட வேண்டும்.
17. கூடிய மட்டில், பெண்களும், குழந்தைகளும் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்படக்கூடாது என்பது விதி
18. நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யாமல் எந்த ஒரு கைதியையும் 24 மணி நேரத்துக்கு மேல் காவலில் வைக்கக் கூடாது.
19. புலன் விசாரணை முடிந்தவுடன் அதன் முடிவை புகார் செய்வதற்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.
20. கைதிகள் தப்பி ஓடுதலைத் தவிர்த்தல், தலைமறைவான கைதிகளைப் பிடித்தல், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுத்தல், பொதுச் சொத்துக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்தல் கைது செய்வதற்குரிய குற்றம் புரிவோரைப் பற்றித் தகவல் அளித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் காவல் துறையினருக்குப் பொதுமக்கள் உதவி செய்ய வேண்டும்.
21. ஜாமீனில் விடக்கூடாததும், கைது செய்தற்குரியதுமான குற்றத்தை தன் முன்னிலையில் புரிவோரைக் கைது செய்வதற்கு பொது மக்களுக்கு அதிகாரம் உண்டு.
22. நிலம், வாய்க்கால், வரம்பு, கட்டடம், சந்தை, மீன் பிடிப்பு, பயிர் போன்றவைகளின் உடமை, உரிமை பற்றிய சர்ச்சைகளில் காவல் துறையினருக்கும் தலையிட அதிகாரம் கிடையாது. இது போன்ற விவகாரங்களில், பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் தான் நிவாரணம் தேட வேண்டும்.

## 4. காவல்துறை பொதுமக்கள் நல்லுறவு ( **Police public relations)**

காவல் துறைக்கும் பொதுமக்களுக்கும் நல்லுறவு இருக்க வேண்டிய அவசியம் என்ன?

1. பொது மக்கள் எண்ணிக்கையில் காவல் துறையினர் மிகக் குறைவு, எனவே அவர்களுக்கு சேவை செய்ய, மற்ற பொதுமக்களின் உதவி தேவை.
2. காவல் துறையின் அன்றாட அலுவலுக்கு மக்கள் உதவி தேவை. குற்றத்தைக் கண்டுபிடிக்க, குற்றம் நடந்த இடத்தைப் பாதுகாக்க, புலன் விசாரணையின் போது நடந்ததை விவரிக்க, வழக்கில் சாட்சியம் சொல்ல குற்றம் புரிபவர்களைக் கண்காணிக்க, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க பொது மக்கள் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும்.
3. காவல் துறைக்கு ஊதியம் பொதுமக்கள் வரிப்பணத்தில் கொடுக்கப்படுகிறது.
4. காவல் துறையின் உதவி எல்லா பிரிவினருக்கும், எல்லா நாட்களிலும் இரவு பகலாகத் தேவைப்படுகிறது. பொதுமக்களுக்கு சேவை புரிய நல்ல உறவு இருக்க வேண்டும்.

### பொது மக்களின் ஆதரவைப் பெறும் வழிகள்:

காவலர் ஒரு குறிப்பிட்ட அலுவலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் ஒரு புதிய நபர் ஒரு தகவலை அறியப் பலரிடமும் போய்க் கேட்கின்றார்கள். அந்தச் சமயத்தில்

காவலர் அவரை அன்போடு அழைத்து விசாரித்து அவருக்கு வேண்டிய தகவலைத் தெரிவிக்க வேண்டும்.

பொதுமக்களால் நடத்தப்படும் பொது நிகழ்ச்சிகளில் அதாவது கண்காட்சி உற்சவங்கள், நாடகங்கள் முதலியன நடத்தல் சொற்பொழிவுகள் நடத்தல், அரசியல் அல்லது கட்சிக் கூட்டங்கள் கூடிப் பேசுதல் முதலிய சந்தர்ப்பங்களில் அதற்குச் சம்மந்தப்பட்டவர் போலீஸ் இலாகாவை அணுகி பாதுகாப்பு கேட்காமலிருந்தாலும் காவல் நிலையத்தில் பணியாற்றும் உதவி ஆய்வாளர் தக்க நடவடிக்கை எடுத்து அமைதியை நிலை நிறுத்த வேண்டிய கடமை ஏற்படுகிறது. இந்தச் செய்கையினுல் பொதுமக்களுடைய ஆதரவையும் அன்பையும் எளிதில் பெற்று விடலாம். மேலும் போலீசார் பொது மக்களின் முழு ஆதரவைப் பெறுவதற்கு பொது மக்களிடம் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராம உஷார் கமிட்டி, தீயணைக்கும் படை, மது விலக்குக் கமிட்டி, கிராம நிர்வாக அதிகாரி இவர்களுடன் நெருங்கித் தகவல்களை அறியலாம்.

காவல் துறையில் பணியாற்றுபவர்கள் பொது மக்களிடம் கண்ணியமாகவும் நேர்மையாகவும் அவர்கள் அந்தஸ்துக்கோ கௌரவத்துக்கோ, இழிவு பங்கங்கள் உண்டாகாதபடி நாம் அவர்களின் நண்பன் என்று அவர்கள் எண்ணும்படியும் பொதுப்பணியை நிறைவேற்றவே நாம் இருக்கின்றேம் என்பதை அவர்களே நன்கு உணரும்படியும் நாம் பணியாற்ற வேண்டும்.

போலீஸ் இலாகாவில் நடத்தும் போட்டிப் பந்தயங்கள், கலை நிகழ்ச்சி இவைகளில் பொது மக்களையும் பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் முதலியவைகளில் போலீஸ் அதிகாரிகள் அடிக்கடி சென்று ‘பாதை விதி’, பொது மக்களும் போலீஸ் இலாகவும் என்ற தலைப்புகளில் சொற்பொழவு ஆற்ற வேண்டும்.

காவல் சட்டங்களை நன்கு தெரிந்து இருக்க வேண்டும். அப்போது தான் நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் போது அந்தச் செய்கையை வெறுப்பு மனப்பான்மையுடன் எதிர்த்தால் அப்போது சட்டத்தை நிறைவேற்றுவதே போலீஸ் இலாகாவின் கடமை எனத் தெரிந்து முன் எச்சரிக்கையாக பந்தோபஸ்து செய்யக் காவலரை நியமித்து அனுப்ப வேண்டும். உற்சவங்களில் தவறிப்போன குழந்தைகளையும் காணுமல் போன பொருட்களையும் தகவல் கிடைத்த உடன் அவைகளைச் சீக்கிரம் கண்டுபிடித்து உரியவர்களிடம் சேர்ப்பதால் அவர்கள் காவல் துறையினரிடம் பேரன்பு கொள்வார்கள்.

அதோடு நம் பணியைப் பலபேரிடம் கூறி நம் தொண்டின் சிறப்பை விளக்கி பொது ஜனத் தொடர்பு அதிகம் உண்டாகும்படி வழி செய்ய வேண்டும். அதே போல் சைக்கிள், ஆடு – மாடுகள் காணுமல் போவதில் முயற்சி செய்து கண்டுபிடிக்க வேண்டும்.

ஊர்க்காவல் படையினர், தேசீய மாணவர் படையினரைச் சந்திக்கும்போது அவர்களும் நாமும் பொது மக்களுக்குப் பணி புரிவதற்கே அமைந்துள்ளோம் என அவர்கள் உணரும்படி அன்புடன் பழக வேண்டும். அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும்.

## 5. காவல் துறையினருக்கு மக்கள் செய்யக்கூடிய ஒத்துழைப்பு:

காவல்துறையில் பணியாற்றுபவர்களுக்கு பொது மக்கள் கீழ்க்கண்டவாறு உதவி செய்யலாம்.

1. குற்றம் நடந்துள்ளதைப்பற்றி உடனே தகவர் தருதல்.
2. குற்றம் நடந்த இடத்தில் பொது மக்கள் மிதித்து, கிடைக்கக்கூடிய தடயத்தைக் கலைக்காமல் கெடுக்காமல் இருக்கும் வகையில் காவலர் அவ்விடத்திற்கு வரும்வரையில் காவல் புரிதல்
3. ஒரு குற்றத்தைப் பற்றி ஆய்வாளரோ சார்பு ஆய்வாளரோ சாட்சியம் சேகரிக்க விசாரணை செய்கையில் சாட்சியம் சேகரிக்க உதவுதல்
4. அந்த எல்லைக்குள் நடமாடும் சந்தேக நபர்களைப் பற்றி தகவல் தருதல்
5. சூதாடும் இடம், நேரம், நபர்கள், மதுபானம் குற்றம் சம்பந்தமான தகவல்கள், வாழ்கையில் தவறி உடலை விற்று ஜீவனம் நடத்துபவர்கள் பற்றிய தகவல்கள் முதலியவற்றை பொதுமக்கள் ரகசியமாகக் கூறுதல்
6. அரசுக்கு எதிராக கட்சிகள், கூட்டம் முதலியன போட்டு தீங்கு, கலகம், நாசவேலை செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தால் அத்தகவலை முன் எச்சரிக்கையாகக் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தல்
7. அவ்வப்போது காவல் துறைக்கென நடைபெறும் போட்டி பந்தயங்கள் விளையாட்டு கலைநிகழ்ச்சி இவைகளில் பொது மக்கள் தொடர்பு நன்கு அமையும்.

## 6. காவலரின் பண்புகள்:

1. எப்பொழுதும் தூய உடை உடுத்தி ஆயத்தமாக இருத்தல்
2. கடமையில் தவறுமல் இருத்தல், இட்ட வேலையைத் திறமையாகவும், பொறுப்பாகவும், குறிப்பிட்ட காலத்தில் முடித்தல்
3. காலந் தவறுமை, காவலர் காலந் தாழ்த்துவதால் பல உயிர்கள் பலி ஆகலாம்.
4. இனிமையாக இருத்தல் பேசும் போதும், எழுதும் போதும், பழகும் போதும் மரியாதையாக இருத்தல்.
5. எல்லோரையும் சமமாக நடத்துதல், ஏழை, பணக்காரன் செல்வாக்கு உள்ளவர், இல்லாதவர் என்ற பாகுபாடு இன்றிப் பழகுதல்
6. நலிவுற்ற பிரிவினரிடம் பரிவு காட்டுதல் – அரிசனங்கள் சிறுபான்மையோர், தாழ்த்தப்பட்டவர் ஆகியோரிடம் அன்பு காட்டுதல்.
7. பெண்களிடமும் குழந்தைகளிடமும் அன்புடன, பண்புடன் கண்ணியத்துடன் நடந்து கொள்ளுதல்.
8. சிக்கனத்தைக் கடைபிடித்தல், வருவாய்க்குள் செலவு செய்தல்,
9. கையூட்டுப் பெறுமல் வாழ்க்கை நடத்துதல்
10. தாமே சட்டத்தை மீறுமல் பலருக்கு எடுத்துக்காட்டாக வாழ்தல் அதிகாரத்தைத் தவறுன வழியில் பயன்படுத்தாமல் இருத்தல்

# (இ) மரியாதை (Courtesy)

## நான் உங்களுக்கு உதவி செய்யலாமா? (May I help you?)

**'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது காவல் துறைக்கு மிகவும் பொருந்தும்.**

1. காவல் நிலையத்தில் முன்பு துப்பாக்கி வைத்துக் கொண்டு 'பாரா' பார்த்துக் கொண்டிருந்தவர்களை மாற்றி, அவர்களை ஆயுதம் இன்றி வரவேற்பாளர் (Receptionist) என்று அழைக்கின்றனர். புகார் கொடுக்க வருபவர்களையும் காவல் நிலையத்திற்கு வருபவர்களையும் அன்புடன் வரவேற்று உபசரிப்பது அவர்கள் பொறுப்பு
2. போக்குவரத்தில் வேலை செய்யும் போது ஒரு குறிப்பிட்ட வீதி, வீடு ஆகியவற்றை யாராவது கேட்டால் உதவி செய்யலாம்.
3. மருத்துவ உதவி, எவராவது காயமடைந்தால் விபத்தில் அடிபட்டால் உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லலாம்.
4. சாலையைக் கடக்க பள்ளிகள் முன்பும், பெரிய ரோடுகளில் வயதானவர், ஊனமுற்றோர் சாலையைக் கடக்க உதவி செய்யலாம்.
5. தீ-விபத்து தீயணைக்கும் படையினருக்குத் தகவல் கொடுப்பதுடன் தீயை அணைக்க உதவிசெய்யலாம்.
6. திருவிழாக் காலங்களில் குழந்தைகள் காணுமல் போனுல் அவற்றைத் தேடித் தருவதுடன், காணுமற் போன பெற்றோர்களிடம் சேர்ப்பிப்பதற்கும் உதவி புரியலாம்.
7. ரயில்வே நிலையம், பேருந்து நிலையம்- இவ்விடங்களில் பயணிகளுக்கு ரயில், பேருந்து நேரங்கள், தங்குமிடங்கள், டாக்கி, ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா அமர்த்த உதவி செய்யலாம்.
8. வெள்ளம், புயல் உதவி இயற்கைச் சீற்றத்தினுல் அவதிப்படும் மக்களுக்கு, பாதுகாப்பான இடத்திற்குப் போக வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற, காணுமற் போனவர்களைக் கண்டுபிடிக்க உதவலாம்.
9. பிள்ளை பிடிப்பவர் வதந்தி, வதந்திகளைத் தடுப்பதுடன், குழந்தைகளை மீட்டுத் தரலாம்.
10. குற்றவாளிகளுக்கும்,, இளங்குற்றவாளிகளுக்கும் அறிவுரை கொடுப்பதுடன், நல்ல வாழ்வு வாழ முற்படும் குற்றவாளிகளுக்கு பாங்க் கடன் உதவி, வேலை வாய்ப்பு ஆகியவை வாங்கித் தரலாம்.
11. விளையாட்டுப் போட்டிகள் பள்ளிகள் கல்லூரிகள், கல்வி நிறுவனங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த உதவி செய்தல், அவர்களுடன் பங்கு பெறுதல்.
12. பொருட்காட்சிகள், திருவிழாக்கள்- மக்கள் பெருமளவு கூடும் இடங்களில் காவல் துறையைப் பற்றி விளக்க பொருட்காட்சி அமைத்தல்

# (ஈ) காவலர் செய்யக் கூடியவைகள் செய்யக் கூடாதவைகள்

## 1. காவலர்கள் கவனித்துச் செய்ய வேண்டியவை

1. கீழ்ப்படியத் தெரியாதவனுக்கு, ஆளவும் தெரியாது
2. உடைகளை அணிந்து முறுக்காக இரு
3. சாமர்த்தியமாகவும், உறுதியுடனும் இரு
4. கட்டளைகளின்படி நட
5. நீ, சட்டத்தையும் அமைதியையும் காக்க இருக்கிறய். ஜனங்களின் உடலும், சொத்தும் நீயே காக்க வேண்டும் இந்தப் பொறுப்பு தெய்வத்தன்மை வாய்ந்தது. இதை உணர்ந்து முழு மனதுடன் அதற்கு மதிப்புக் கொடு.
6. பொது ஜனங்களுடன் நீ எடுக்கும் நடவடிக்கைகளில், நேர்மையாக நடந்து கொள்.
7. அரசுக்கு உண்மையாயிரு, தேசத்தினிடமும் அன்பு வை.
8. உன் சகாக்களுடன் உயர்ந்த அளவில் ஒற்றுமையாயிரு
9. பணக்காரர், ஏழை வித்தியாசம் பாராமல் நடந்து, உன் கடமைகளை பயம், தனி ஆதரவு இல்லாமல் நிறைவேற்று.
10. உன் கடமைக்கு முதல் இடம் கொடுத்து மற்றவை எல்லாவற்றிற்கும் பின்னிடம் கொடு.
11. ஒழுங்கான முறையில் விவரமாக விசாரணை செய்து உன் துப்பறியும் சக்தியை வளர்த்துக் கொள்
12. விளையாட்டுகளில் பங்கெடுத்து, நல்ல தேகாரோக்கியம் பெற்று, எண்ணத்திலும், செய்கையிலும் சுத்தமாயிரு.
13. உனக்கு கொடுக்கப்படும் கடமைகளை முழுத்திறமையுடனும் மனசாட்சிக்குத் திருப்தியாகவும் செய்து முடி
14. உன் கடமைகளில் எப்போதும் காலந்தவறுமல் நட
15. கிளை-சிறைச்சாலையிலும், ஸ்டேஷன் காவலிலும் கைதிகளை அழைத்துப் போகும் போது மிகவும் ஜாக்கிரதையாகவும், கண் விழிப்புடனும் இரு. ஒரு கைதி போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவது மிகக் கேவலமானது.
16. உன் துப்பாக்கியையும், தோட்டாக்களையும் மிக எச்சரிக்கையாய்ப் பார்த்துக்கொள். சமூக எதிரிகள் கையில் சிக்காமல் கவனித்துக்கொள்.
17. உன் ஆயுதங்களை ஜாக்கிரதையுடன் கையாண்டு, அபாயம் ஏற்படாமல் பார்த்துக்கொள்
18. உன் கிராமங்களையும் கெட்ட நடத்தைகாரர்களையும், கைதிகளையும் முன்னுள் N. T.M.களையும் தெரிந்து கொள்.
19. உன் எல்லைக்குள் இருக்கும் வெடி மருந்துக் கடைகள், துப்பாக்கி தோட்டா வியாபாரிகள் இவைகள் மேல் கவனம் வைத்துக்கொள்.
20. கிராம அலுவலர்களையும், கிராம கண்காணிப்புக் கமிட்டி மெம்பர்களையும் தெரிந்து கொள்.
21. உபயோகமுள்ள நம்பிக்கையான தகவல் கொடுப்பவர்களை அமர்த்து
22. சாலைப் போக்குவரத்தில் வேலை பார்க்கும்போது சாலை போக்குவரத்துச் சட்டங்களையும், சமிக்ஞைகளையும் தெரிந்து கொள்
23. வேறு மாற்று உத்தரவு இருந்தாலொழிய வேலை பார்க்கும் போது சரியான உடையிலேயே இரு,
24. ஒரு விவரம் கிடைத்தால், உடனே அங்கே தொடர்ந்து விவரம் சேகரி

25. கைதிகளை ஒப்புவிக்கும் போது எழுத்து மூலம் ரசீது பெற்றுக்கொள்.
26. கைதிகளை ஒப்புக்கொள்ளும் போது, கைதிகளை எண்ணி, பூட்டுகளைச் சரிபார்த்துக் கொள்
27. ஒரு போலீஸ்காரன், பொறுமையாயும் தன் நினைவோடும் யோக்கிமாகவும், நல்ல தன்மையோடும் இருக்க வேண்டும்.
28. ஒரு போலீஸ்காரன் எப்போதும் சுறுசுறுப்பாகவும், பொது ஜனங்களுக்கு உதவி செய்யத் தயாராகவும் இருக்க வேண்டும்.
29. தன் கடமையைத் தெரிந்து கொண்டிருக்கும் போலீஸ்காரனைவிட தன் கடமை மேல் ஆசையோடு இருப்பவனே மேல்.
30. ஒரு தப்புப் பண்ணியது தெரிந்த பிறகும் அதை திருத்தாமல் இருந்தால், இன்னொரு தப்புப் பண்ணுகிறுய்.
31. தன் அனுபவங்களைக் கொண்டு தெரிந்து கொள்பவன் அறிவுள்ளவன் தான். ஆனல் பிறர் அனுபவங்களிலிருந்தும் தெரிந்து கொள்பவன் அதற்கு மேல் அதிக அறிவுள்ளவன்.
32. உன் அளவில் செய்யப்படும் ஒரு அவுன்ஸ் தொண்டு, மேல்அளவில் செய்யப்படும் ஒரு டன் தொண்டுக்கு சமம்.
33. சட்டம், ஒழுங்கு இவற்றை நிறைவேற்றுவதில் ஜாதி, மதம் வித்தியாசங்கள் பார்க்காதே
34. ஒரு போலீஸ்காரனுக்கு அநேக விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும்.
35. ஒரு பழமொழிப்படி, உண்மையானவனுக்கு கவலை ஒன்றும் கிடையாது. அறிவுள்ளவனுக்கு சிக்கல்கள் ஒன்றும் கிடையாது. தைரியமுள்ளவனுக்குப் பயமே கிடையாது.
36. நீ உடையிலிருக்கும் போது, பொது ஜனங்களின் கண்ணுக்கு பிரகாசமாய்த் தெரிகிறுய். உன்னுடைய ஒவ்வொரு அசைவும் செய்கையும் பிறர் கண்ணில் படும். போலீஸ்காரர்களின் நடத்தைகளினுல் தான் அந்த இலாக்காவுக்கே அந்தஸ்தும் கவுரவமும் ஏற்படும்.
37. உன் உடையிலிருந்தால் வேலை பார்க்காவிட்டாலும் முறுக்காக நட அவலட்சணமாக நடக்காதே
38. ஸ்டேஷனில் சரியான நேரத்தில் ஆஜராகு. சில நிமிஷங்கள் முந்திப் போகலாம் ஒரு போதும் பிந்திப் போகக் கூடாது.
39. நீ செய்ய வேண்டியவைகளை நன்ருகத் தெரிந்துகொண்டு தயக்கமில்லாமல் செய்து முடி
40. வேலை செய்யும்போது அவ்வப்போது நோட்டில் எழுதி வை.
41. உண்மையைச் சொல்வதில் ஒரு அனுகூலம் என்னவென்றல் நீ என்ன சொன்னுய் என்று ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.
42. துவேஷம், தப்பெண்ணம் இல்லாமலும் தயவுகள் எதிர்பார்க்காமலும் உன் வேலைகளை செய். உன் ஆட்கள் உன் கட்டளைப்படி நடப்பார்கள். உன் மேலதிகாரிகள் அதைப் பாராட்டுவார்கள்.
43. நீ உதவி-கண்காணிப்பாளர் சொல்லாமல் ஏதாவது ரகசிய விஷயம் மனதில் வைத்திருக்கிறுயா? அப்படியானுல் அது வேலையில் குழப்பத்தை உண்டாக்கும்.
44. சொன்னபடி வேலையைச் செய்தால் உள் மேலதிகாரிகள் உன்னைப்பற்றி நல்ல அபிப்ராயம் கொள்வார்கள்.

## 2. தேகப் பயிற்சியும், ஒழுங்கு முறையும்

45. துப்பாக்கி, கைத்துப்பாக்கி இவைகளில் குறி பார்த்துச் சுடுவதில் நல்ல தேர்ச்சி பெறு.

46. எந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும், நிதானமாக இரு. வேறு வழி இல்லாமல் போகும் வரை சுட ஆரம்பிக்காதே.

47. கூட்டத்தைச் சமாளிக்கும் பயிற்சிகளில் தேர்ச்சி பெறு

48. காலந்தவறாதே, சீக்கிரமாகவே வா

49. சுத்தமாய இரு.

50. கட்டளைகளைக் கேட்டு, யோசனை செய்து நடத்து.

51. தோல் சாமான்களை பாலிஸ் செய்து பளபள என்றிருக்கும்படி வை.

52. நீ முறுக்கான உடையில் இருந்தால் உனக்கு வேண்டிய ஊக்கம் தளராமல் இருக்கும்.

## 3. கோர்ட்டில் ஆஜராவது

53. கோர்ட்டுக்கு மரியாதை செலுத்து. விசாரணை நடக்கும் போது கைதிகளை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்.

54. நோட்டீஸ்களை சீக்கிரம் கொடுத்து விசாரணை தேதிக்கு முந்தியே திரும்பி வந்துவிடும்படி ஏற்பாடு செய்.

55. கோர்ட்டிலிருந்து சம்மன் வந்தால் உடனே போ. அதை முதலில் கவனி.

56. வழக்கு சம்பந்தமான பொருட்களை கோர்ட்டில் சமர்ப்பித்தால் அவைகளுக்கு ரசீது பெற்றுக்கொள்,

## 4. காவலர்கள் செய்யக்கூடாதது (பயிற்சியும், ஒழுங்கும்)

1. அணிவகுப்பு ஸ்தலத்தில் பேசி, சிரித்து ஒன்றும் செய்யாதே
2. உன்னைப் போல் அவ்வளவு நன்றாய் இல்லாதவர்களைப் பார்த்து பரிகாசம் செய்யாதே.
3. உன் தொப்பிக்குள் நெருப்புக் குச்சிகள், பீடிகள் வைத்திருக்காதே.
4. உன் சட்டையின் பொத்தானை கழற்றி விடாதே.
5. வேலைக்குப் போகும் வழியில் பெல்ட்டை எடுத்துவிடாதே.

## 5. பொது விஷயங்கள்

1. பொய் ரிகார்டுகள் தயாரிக்காதே
2. நபர்களிடமிருந்து விவரங்கள் பெற அவர்களை அடிக்காதே
3. கெட்ட வார்த்தைகளை உபயோகிக்காதே
4. ஒருவருக்கும் கடமைப் பட்டிருக்காதே

6. உன் மேலதிகாரிகளின் கட்டளைகளுக்கு எதிர்த்து நிற்காதே

7. கஷ்டமான வேலையைச் செய்யாமல் தப்பிக்க, சுகவீனம் என்று அறிவித்துவிடாதே.

8. போக்கிரிகளிடமும், கெட்ட குணமுடையவர்களிடமும் சிநேகம் செய்து கொள்ளாதே,

9. அசூசிப்படுத்துவது போன்ற அற்ப விஷயங்களுக்காக ஜனங்களை குற்றப்படுத்தி இம்சிக்காதே.

10. கைதிகளை அழைத்துச் செல்லும் போது வழக்குப் பொருட்களையும் உன் சாமான்களையும் அவர்களிடம் ஒப்புவித்து தூக்கிப்போகச் செய்யாதே.

11. மற்ற போலீஸ்காரருக்குத் தீங்கு இழைக்காதே

12. லீவ் கேட்காமல் வேலைக்குப் போகாமல் தங்கி விடாதே

13. குற்றமில்லாதவரைப் பயமுறுத்தி பணம் பறிக்க முயலாதே

14. அனுவசியமான விசயங்களைப் பேசாதே,

15. உன் மேலதிகாரிகளின் மேல் ஆதாரமில்லாத குற்றங்களைச் சாட்டாதே.

16. அடிக்கடி லீவு எடுக்காதே

17. உன் பார்வையில் இல்லாமல் ஒரு கைதியை கழிப்பறையில் இருக்க விடாதே.

18. கைதிகளுக்காக கொடுக்கும் உணவை சேர்ந்து சாப்பிடாதே.

19. சப்-ஜெயிலில் வேலை பார்க்கும் பொழுது சீட்டு விளையாடாதே

20. போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளும் சப்-ஜெயிலுக்குள்ளும் அனுமதியில்லாதவர்களை நுழைய விடாதே.

21. உனக்கு கொடுக்கப்படும் வேலையைச் செய்யாமல் தவிர்க்க பார்க்காதே.

22. அசுத்தமான உடைகளோடு இருக்காதே.

23. என்ன முயற்சி செய்தாலும் நீ நினைக்கும் விஷயம் நடைபெறுது என்று நினைக்காதே எல்லாவற்றையும் நடக்கும் என்னும் நம்பிக்கையோடு தொடங்கு.

24. உன் குறைபாடுகளை அவ்வப்போது திருத்திக் கொள்ளாமல் வருங்காலத்தைக் கெடுத்துக் கொள்ளாதே.

25. சில பேர்தான் வெற்றி பெறுவார்கள் என்று நினைக்காதே. ஊக்கத்தோடு யார் உழைத்தாலும் அவர்கள் முன்னுக்கு வருவார்கள்.

26. சட்டங்களும், ஒழுங்கு முறைகளும் உனக்குத் தொந்தரவு கொடுப்பதற்காக ஏற்பட்டிருக்கின்றன என்று நினைக்காதே. அவைகள் தான் போலீஸ் படையின் அஸ்திவாரம்.

## உ) கீழ்கண்ட சூழ்நிலையில் காவலர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது.

1. தகராறு (Dispute)

ஒரு தகராறு பற்றிய தகவல் கிடைத்ததும் அதை மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தகராறு நடக்கும் இடத்துக்கு விரைந்து சென்று நிலைமை மேலும் சீர் கெடாமல் பாதுகாக்க வேண்டும்.

தகராறு சிவில் அல்லது கிரிமினல் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். சிவில் சம்பந்தப்பட்டதாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்களை சிவில் நீதி மன்றத்தின் மூலம் தீர்வு காணவும், அமைதிக்கு பங்கம் விளைவிக்காமலிருக்கவும் அறிவுறுத்த வேண்டும். கிரிமினல் சம்பந்தப்பட்டதாயிருந்தால் உரிய சட்டப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைதிக்கு பங்கம் ஏற்படும் சூழ்நிலை இருந்தால் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தகவல் சேகரித்து மேலதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டும்.

### 2. குற்ற குணத்தார் (Bad Character)

சந்தேக நபர்களிடமிருந்து தேவையான விவரங்களை மிரட்டிப் பெற முடியாது. அவர்கள் நம்பிக்கையைப் பெறுவதன் மூலமும், முன்கூட்டியே நமக்குக் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு சளைக்காமல் குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும் விரங்களைப் பெறலாம். சுந்தேக நபர்களை அவர்கள் உறவினர்கள் முன்னிலையில் விசாரிக்காது தனியிடத்தில் விசாரணை செய்ய வேண்டும். சரியான விசாரணை முடியாது அவசரப்பட்டு கைது செய்து நீதி

மன்றத்திற்கு அனுப்பக் கூடாது. அவர்கள் மனநிலையைப் புரிந்து அவர்கள் கோபப்பட்டாலும் நாம் பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி நமதே, அடித்துத் துன்புறுத்தவோ, பொய்யான வாக்குறுதி கொடுக்கவோ, தூண்டவோ கூடாது. விசாரனைக்குப் பின்னர் அவர் தன் தவற்றை உணர்ந்து உண்மை சொல்லும் பொருட்டு தனியிடத்தில் வைக்க வேண்டும். விஞ்ஞான வழி முறைகளைக் கொண்டு துன்புறுத்தாமல் விசாரணை செய்ய வேண்டும்.

## 3. சாட்சிகள் (Witnesses):

சாட்சிகளை நாம் காவல் நிலையத்திற்கு அழைப்பதை நிறுத்தி நாம் அவர்களைத் தேடிச் செல்ல வேண்டும். வெகுதூரம் நடந்து வந்து போலீஸ் அதிகாரியைச் சந்தித்து சாட்சி சொல்ல வேண்டிய நபர் ஆர்வம் குறைந்து வெறுப்பில் வழக்கிற்குப் பாதகமாக சாட்சி சொல்லிவிடுவார்கள். சாட்சிகளை மரியாதையுடன் நடத்தி, அன்பு காட்டி உடனுக்குடன் விசாரித்து, காக்க வைக்காமல் திருப்பி அனுப்ப வேண்டும். சாட்சி கூறுவதால் அவர்களுக்கு ஏதேனும் தீங்கு விளையும் அபாயமிருந்தால் தக்க நடவடிக்கை எடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். சாட்சிகளை குற்றவாளியைப் போல் நினைத்து கோபத்தோடு கூடிய குறுக்கு விசாரணை செய்யாமல். பொறுமையுடன் விசாரிக்க வேண்டும். சாட்சி கூறி முடிந்தவுடன் அவர்களுக்கு உரிய பயணப்படியை நீதிமன்றத்திலிருந்து பெற்றுத் தர வேண்டும். சாட்சி கூற வேண்டியதை நாம் முன்னேயே எடுத்துக் கூற வேண்டும்.

## 4. காவலில் இருப்பவர்கள் (persons under custody):

இவர்களைச் சரியானபடி உடல் சோதனையிட்டு கவனமாக காவலில் இருக்க வேண்டும். ஏதும் தற்கொலை முயற்சி போன்ற அசம்பாவிதம் நிகழாதவாறு விழிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும். உடல் சோதனையிடும் போது தாக்க, தற்கொலை செய்து கொள்ள அல்லது ஆபத்தை விளைவிக்கக் கூடிய பொருட்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை நீக்க வேண்டும். காவலில் இருப்பவர்கள் உரிய நேரத்தில் குளியலறை, கழிப்பறைகளுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். உணவருந்தச் செய்ய வேண்டும். இரவு நேரங்களில் காப்பறையிலேயே கழிப்பு, தண்ணீர் வசதிகள் இருக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆபத்தான கைதிகள் காவலில் இருக்கும்போது காவலர் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

## 5. போக்குவரத்து விதிகளை மீறுபவர் (Traffic offendrs):

தெரியாமல் தவறு செய்பவர்களை அறிவுறுத்தியும் எச்சரித்தும் போக்குவரத்து விதிகளை அனுசரிக்கச் செய்யலாம். வேண்டுமென்றே விதிகளை மீறுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய சமயங்களில் தகராறு செய்பவர் அல்லது பொய்யான விலாசம் தருவதாகச் சந்தேகப்படுபவர்களைக் கைது செய்யவும் அதிகாரம் உண்டு.

## 6. புகார் கொடுக்க வருபவர் (Complainants at the Police Station):

புகார் கொடுக்க வருபவர் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். அவரது குறைகளை அனுதாபத்துடனும் பொறுமையாகவும் அமைதியாகவும் கூறுவதைக் கேட்டு, உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். சட்டப்படி வழக்குப்பதிவு செய்யக்கூடிய வழக்குகளில் வழக்குகள் பதிவு செய்ய வேண்டும். சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று உண்மையான முயற்சி செய்து, ஓர் வழக்கு கண்டுபிடிக்க முயலவில்லை என்றாலும், வாதி உளமுவந்து போலீஸார் முடிந்தவரையிலும் பாடுபட்டார்கள் எனக் கூறி நம் மீது பெருமை கொள்வார்கள். வாதியிடமே

தேவையற்ற குறுக்குக் கேள்விகளைக் கேட்டும், அடித்தும், அவமதிப்பு செய்தும் காத்திருக்கச் சொல்லியும் செயல்படக் கூடாது. எல்லா புகார்களிலும், சமாதானம் செய்து வைத்தே தீர்வு காண முயலக் கூடாது. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு காட்டக்கூடாது. அதற்காக கூடுமானவரை அனைவருக்கும், அமர இருக்கை அளிக்க வேண்டும். சிவில் வழக்காயிருந்தால் கூட கேட்டு முடிந்த பின்னர் " உங்கள் கூற்றில் நான் அனுதாபப்படுகிறேன். நாங்கள் இதில் நடவடிக்கை எடுக்க முடியாததற்கு வருந்துகிறேன். நீங்கள் நீதி மன்றத்தில் நிவாரணம் தேடலாம்" என்று கூறி அனுப்ப வேண்டும்.

## 7. ரோந்து வேலையில் ஈடுபட்டிருப்போர் (The people while on heat duty)

இரவு பகல் ரோந்து செல்லும் காவலர்களைப் பொது மக்கள் உன்னிப்பாக கவனிக்கின்றனர். நல்ல உடை, மிடுக்கான நடை பண்பாக பழகுதல், விழிப்புடன் செயல்படுதல் ஆகியவை காணப்பட வேண்டும். குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும், துப்புத் துலக்குவதற்கும், சம்மன் சார்பு செய்வதற்கும் பொது மக்கள் உதவியைப் பெறுதல் வேண்டும்.

## 8. இளைஞர்கள், மாணவர்கள் (Youth):

இந்நாட்டின் வருங்காலத் தலைவர்கள் இளைஞர்களேயாதலால் அவர்களின் உறவும் அரவணைப்பும் அவசியம். இளைஞர்கள் சங்கம், குழந்தைகள் மிதிவண்டிச் சங்கம் ஆகியவை ஏற்படுத்துவதன் மூலம் இணைப்பு வளரும். மாணவர் சம்பந்தப்பட்டவரை காவலர் மிகவும் எச்சரிக்கையுடனும், பொறுமையுடனும் சமயோசித்துடனும் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, வேலையில்லாத படித்துப் பட்டம் பெற்றும் வேலையில்லாத இளைஞர்களிடம் மிகப் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும். இது ஒரு உணர்ச்சி பூர்வமான பிரச்சனை. சாலை விதிகளை அனுசரிக்க வேண்டிய முறைகள் பற்றி தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தி அவர்களது சேவையை நடைமுறையில் உபயோகித்துக் கொள்ள வேண்டும். பள்ளி கல்லூரி விளையாட்டுப் போட்டிகள், ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டு நாம் வேறு இனமல்ல என்பதை உணர வைக்க வேண்டும். மாணவர் போராட்டங்கள் அதிக அளவிலுள்ள தற்போதைய சூழ்நிலையில் நாம் அனுவசியமாகத் தலையிட்டு வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளக் கூடாது. பள்ளி கல்லூரிகளுக்குள் முதல்வர் எழுத்து மூலமாக நம் உதவியைக் கோரினுலொழிய போராட்டங்களின் போது நாம், அத்துமீறி பள்ளி, கல்லூரிகளுக்குள் சென்று மாணவர்களைத் தாக்கும், துன்புறுத்தும் செயல்களில் ஈடுபடக் கூடாது.

## 9. தொழிலாளர்கள் (Labour):

தொழிலாளர்களைப் பொறுத்தவரை காவலர் நடுநிலைமை வகிப்பவர்களாயிருக்க வேண்டும். அவர்களது பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு அவற்றிற்கு தீர்வு காண வேண்டும். தற்காலத்தில் கூலி உயர்வு, போனஸ், ஊக்கப்படி மற்றும் அலவன்ஸ்கள், பதவி உயர்வு, வேலை உத்தரவாதம் கேட்டு பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மூலமாகவும், உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதன் மூலமாகவும் மெதுவாக வேலை செய்யும் கொள்கை மூலமாகவும், கேரோ செய்வதன் மூலமாகவும் உண்ணுவிரதம் இருப்பதன் மூலமும் அடைப்பாடு செய்கிறுர்கள். அவர்கள் சங்கங்களுக்கு பெரும்பாலும் அரசியல்வாதிகளே தலைவர்களாயிருப்பதால் பல நேரங்களில் தங்கள் கட்சி நலனுக்காகவும், சொந்த நலனுக்காகவும், தொழிலாளர்களை தவறுன வழிக்கு உள்ளாக்குகிறுர்கள். சட்டம் ஒழுங்கைக் காக்கும் பணியில் நாம் ஈடுபட்டால் நாம்

கண்டனத்திற்குள்ளாகிறோம். முதலாளிகளின் கைக்கூலிகள் என்றும். தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதிகள் என்றும், ஆட்சியாளரின் கைப்பாகைகள், அடிமைகள் என்றும் புனைப்பெயர்கள் இடப்படுகிறோம். போராட்ட காலங்களில் பாதுகாப்பளிக்க வேண்டும். எந்த ஒரு சோதனையான கட்டத்திலும் பொறுமையிழந்து ஆத்திரவசப்பட்டு விடக் கூடாது. இதைத் தவிர்க்க தொழிலாளர் யூனியன் தலைவர்களிடமும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளிடமும் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் போராட்டங்கள் பற்றியும், நடந்து கொள்ள வேண்டிய முறைபற்றியும் வன்முறையில் ஈடுபட்டால் வேறு வழியின்றி போலீசார் எடுக்க வேண்டியுள்ள நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக விவாதித்து எடுத்துக் கூற வேண்டும். உள்ளிருப்பு வேலை நிறத்தத்தின் போது நாம் முதலாளிகளுக்கு பரிந்து தொழிலாளிக்கு எதிராக அடக்கி தடுக்க தொழிற்சாலைக்குள் நுழைந்து நடவடிக்கை எடுக்கக் கூடாது. நாம் நடுநிலையாளர்கள் என்பதை யாராலும் ஆட்டிப்படைக்கவோ, விலைக்கு வாங்கவோ முடியாதவர்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மதுரையில் தொழில் தகராறுகளின் போது காவல் துறைத் துணைத் தலைவர் அவர்கள் தொழிலாளர் தலைவர்கள், பிரதிநிதிகளுடன் கலந்து பேசி, எவ்வித கலவரமும் இன்றிச் சமாளித்த செயல் அனைவருக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும். அதே சமயம் பிடிக்கக்கூடிய குற்றங்கள் நடந்தாலும் சட்டம், அமைதி, போக்குவரத்திற்கு ஊறு நேர்ந்தாலும் உயிர், உடமைக்கு ஆபத்து நேர்ந்தாலும் தயங்காது தலையிட்டு, தேவையானவர்களைக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதின் மூலம் சட்ட வழி நடக்கும் பெரும்பான்மையான பொது மக்களின் நன்மதிப்பைச் சம்பாதிக்க முடியும்.

## 10. பெண்கள், இளங்குற்றவாளிகள் (Women and Children):

பெண்கள் மிகுதியாக உள்ள நம் நாட்டில் அவர்கள் நன்மதிப்பைப் பெற அவர்களிடம் அன்பு, மரியாதையுடனும் மானபங்கப்படாமலும் நடத்த வேண்டும். பெண்களைக் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக சாட்சி சொல்ல அழைக்கக் கூடாது. கூடுமானவரை அவர்களது இடத்திற்குச் சென்று விசாரிக்க வேண்டும். மாலை ஆறு மணிக்குமேல் எக்காரணம் கொண்டும் அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வரக் கூடாது. விபச்சாரத் தொழில் செய்யும் பெண்கள் மீதும், களவு மற்றும் இதர நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்கள் இளங்குற்றவாளிகளுக்கும் ‘புனர்வாழ்வு இல்லங்கள்’ உள்ளன. அவர்களது இழந்த பொருட்களை மீட்டுத் தருவதிலும் சிறு வேலைகளில் அமர்த்துவதிலும் சமூகத்தினரின் வெறுப்பைப் போக்கி அவர்களை சமுதாயம் ஏற்றுக் கொள்ளும்படி செய்வதிலும் நாம் அரும்பணியாற்ற வேண்டும்.

## 11. முடக்கப்பட்டவரும் ஆதரவற்றோரும் (Infirm and destitute):

இவர்கள் நமது அனுதாபத்துக்கும், பாதுகாப்புக்கும் உரியவர்களாவர் இனத்தால், பொருளாதாரத்தால், சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட இவர்களை காவல் நிலையத்தில் மிகவும் அனுதாபத்தோடும், பொறுமையோடும் நடத்த வேண்டும். அவர்களது துயர் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக, வறுமைப்பட்டவர்களாக, அறியாதவர்களாக இருப்பதால் அவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது.

## 12. அரசியல்வாதிகள் (Politician):

பாராளுமன்ற சட்டசபை அங்கத்தினர்களுக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும் மற்றும் செல்வாக்குப் படைத்தவர்களுக்கும் நாம் தனி மரியாதை காட்ட வேண்டும். மக்களின்

நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவர்கள், மக்களின் குறைகளைக் களைய நம்மை அணுகுவர். அரசு அவர்களிடமிருந்து தகவல்களைப் பெறக்கூடிய நிலையில் இருக்கலாம். எனவே அவர்கள் கூற்றுக்கு உரிய மரியாதை அளித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகவும், அரசியல் காரணங்களுக்காகவும், கோஷ்டிப் பூசல்கள் காரணமாகவும் நம்மை அணுகலாம். எப்படி இருப்பினும் அவர்கள் கூறுவதற்குச் செவிமடுத்து முடிந்தவைகளைச் செய்ய வேண்டும். செய்ய இயலாதவைகளை மரியாதையுடன் ஆனால் உறுதியுடன் கூற வேண்டும். நாம் நேர்மையாகச் செயல்படுகிறோம், எவ்வித நிர்ப்பந்தங்களும் நம்மைப் பணிய வைக்க முடியாது என்று தெரிந்து கொண்டால் நம்மைப் பற்றி ஓர் உயர்வான எண்ணம் வளரும். தேவையற்ற காரியங்களில் அவர்களது தலையீடு தவிர்க்கப்படும். அரசியல்வாதிகளை நாம் நம் சொந்த நலனுக்காக அணுகக் கூடாது.

## (ஊ) பொது மக்களின் உதவியைப் பெறுவதில் காவல் துறையினருக்குள்ள இன்னல்களும் சிரமங்களும்.

சட்டம் அமைதி காப்பதிலும் நடைபெற்ற குற்றங்களில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிமன்றங்கள் முன் நிறுத்துவதிலும், குற்றங்கள் நடவாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பதிலும் அன்றாடம் பொதுமக்களின் ஆதரவும், உதவியும் மிக அவசியமாக உள்ளது. ஆனால் இன்று தேவையான முழு ஆதரவு முழுவதும் பொது மக்களிடமிருந்து கிடைப்பதில்லை லண்டன் போலீசாரை ஒப்பிட்டுப் பேசுபவர்கள், அவர்களுக்கு எந்த அளவுக்குப் பின் தங்கியுள்ளோம் என்பதை மறந்து விடுகிறார்கள். நமது மக்களின் சமூக நிலை, அரசியல் நிலை, பொருளாதார நிலை, ஒழுக்க நிலை போன்ற காரணங்களாலேயே முழு ஆதரவு கிடைக்காமல் உள்ளது. பொதுவாக மக்கள் ஜாதிமதக் கட்டுபாடுகளுக்கு இன்றும் மதிப்புக் கொடுப்பவர்களாக உள்ளார்கள். அதனால் ஓர் வழக்கில் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்தாலும் கூட போலீசாரிடம் சொன்னால் சமூகத்தினர் தன்னைப் பிரித்து விடுவார்கள் எனப் பயந்து நேரில் பார்த்ததைச் சொல்ல முன்வருவதில்லை. அதனால் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் சாட்சிகளை சேகரிப்பது கடினமாக உள்ளது. சாதாரணமாக மக்களிடம் உள்ள சுயநல மனப்பான்மை லாபம் கருதும் மனப்பான்மை, நமக்கு ஏன் இந்த வம்பு என்று எண்ணுவது ஆகியவை போலீசுக்கு உதவ இடையூறாக உள்ளது. பொதுவாக ஒருவன் ஒரு காரியத்தை செய்யும் போது லாபம் கருதியே செய்கிறான். காவல் துறையினருக்கு வந்து சாட்சி சொல்வதில் எந்த லாபமும் இல்லை. அதனால் நமக்கு உதவ முன்வருவதில்லை.

சிலபேர் ஒரு குற்றம் பற்றி காவல் துறையினரிடம் கூறுவது தங்கள் கௌரவத்திற்கு இழுக்கு என்று எண்ணுவதால் அதுபற்றி தெரிவிக்கவோ, கண்டு பிடிக்க உதவவோ முன்வருவதில்லை.

முஸ்லிம் பெண்கள் மற்ற ஆடவர் முன் காட்சியளிக்கக் கூடாது என்ற மதக் கோட்பாட்டின் காரணமாக ஒரு குற்றத்தை நேரில் பார்த்திருந்தாலும் சாட்சி சொல்ல முன்வருவதில்லை. அதனால் புலன் விசாரணையில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

இன்று சமூகத்தில் ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் நிலவி வருவதால் ஒரு செல்வந்தர் குற்றம் செய்தால் ஏழை பயந்தோ அல்லது லாபம் பெற்றோ நேரில் கண்டதைச் சொல்ல மறுக்கிறான்.

பொது மக்களில் பலர் சட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாத காரணத்தால் காவல் துறையினர் சட்டப்படி எடுக்கும் நடவடிக்கைக்கு ஏன் உதவ வேண்டுமென்ற மனப்பான்மையில் உள்ளார்கள்.

நடந்த குற்றங்களைத் தங்களுக்குள்ளேயே பேசித் தீர்த்து விடலாம் என்ற பஞ்சாயத்தது மனப்பான்மை இன்னும் இருந்து வருவதால் மக்கள் நடந்த குற்றங்களைக் காவல் துறையினருக்குத் தெரிவிக்கவோ அல்லது கண்டுபிடிக்க உதவி புரிவதற்கோ முன்வருவதில்லை.

காவல்துறையினர் தங்கள் காரியம் முடியும் வரை நல்ல முறையில் நடந்து கொண்டு காரியம் முடிந்த உடன் திரும்பிகூட பார்ப்பதில்லை என்ற எண்ணத்திக் காரணமாக உதவி செய்ய முன்வருவதில்லை. காவல் துறையினருக்குச் சாட்சி சொல்ல வந்தால் பலவித இன்னல்களுக்கு ஆளாக நேரிடும் என்ற அனுபவத்தின் காரணமாகவோ அல்லது எண்ணத்தின் காரணமாகவோ உதவ முன் வருவதில்லை.

காவல் துறையினர் ஆளும் கட்சிக்குத்தான் சாதகம் செய்வார்கள் என எதிர்கட்சியினர் செய்யும் தீவிரப் பிரசாரத்தால் பொது மக்களும் நமக்கு உதவி செய்ய முன்வருவதில்லை.

## (எ) செயல் முறை

ஒரு காவலரின் தவறான நடத்தையால் உணர்ச்சிவசப்பட்டுக் கொந்தளிப்புடன் காவல் நிலையம் வரும் ஒருவரிடம் எப்படி நடந்து கொள்வது?

(சரியான முறை எப்படி என்பதை செய்து காட்டவும்)

***